295

மாணவர் இலக்கண குரு.

MANAVAR ILAKKANA GURU

for the use of the students of

Forms IV, V & VI.

BY

A. KUMARAGURUPARAR,
(Formerly) Pandit S. P. G. High School Vepery, Madras.

For copies apply to:
The Author, 69, Barbers Bridge, Mylapore, Madras.

1933. [Price As. 10.

TB
P31 (9-11)
N33.
170907

மாணவர் இலக்கண குரு.

MANAVAR ILAKKANA GURU

for the use of the students of

Forms IV, V & VI.

BY

A. KUMARAGURUPARAR,

(*Formerly*) *Pandit S. P. G. High School Vepery, Madras.*

For copies apply to:

The Author, 69, Barbers Bridge, Mylapore, Madras.

Rights Reserved.] 1933. [Price As. 10.

READ AND CO., PRINTERS,
HIGH ROAD, TRIPLICANE, MADRAS.

FOREWORD.

MADRAS CHRISTIAN COLLEGE,
Madras, 17th December, 1932.

The literary dialect of Tamil is not the same as its colloquial dialect. It has to be studied rather as a foreign language even by those whose vernacular is Tamil. So a knowledge of the grammar of Tamil literature cannot fail to facilitate its study.

That is the reason perhaps that the Madras S. S. L. C. Board has prepared a syllabus of Tamil Grammar for the Fourth, Fifth and Sixth Forms. Several books have been published according to that syllabus, but most of them seem to be more or less the same reproductions of some book, with nothing new and original to please and interest the student.

This book, however, is an earnest attempt to remove those defects. The method of the presentation of the subject is easy, impressive and often original. The language is quite homely, and the examples are easy and clear. Following the government syllabus some select sutrams from the Nannul are added here and there, but all the difficult sandhis have been removed. The book is sure to be very useful.

S. D. SARGUNAR,
Lecturer in Tamil.

The S. S. L. C. Tamil Grammar Syllabus.

பொருளடக்கம்.

Form IV.

எழுத்திலக்கணம்.

		பக்கம்.
முதல், சார்பு எழுத்துக்கள்	...	1
உயிர், மெய் எழுத்துக்கள்	...	3
உயிரெழுத்தின் வகைகள்	...	4
மெய்எழுத்தின் வகைகள்	...	5
உயிர் மெய்எழுத்து	...	5
ஆய்த எழுத்து	....	6
குற்றிய லுகரம்	...	6
குற்றிய லிகரம்	...	8
போலி	...	8

சொல் இலக்கணம். பெயர்.

சொல்லின் வகைகள்	...	9
காரணப்பெயர், இடுகுறிப்பெயர்	...	10
பலவகைப் பெயர்கள்	...	11
திணை பால் எண் இடம் வேற்றுமை	...	12
உருபேற்கும்போது மாறுபடும் பெயர்கள்	...	17

வினைச்சொல்.

பகுதி, விகுதி, இடைநிலை	...	18
காலம்	...	20
தன்வினை, பிறவினை	...	21
பெயர்எச்சம், வினைஎச்சம்	...	22

		பக்கம்.
எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம்	...	24
இடைச்சொல் உரிச்சொல்	...	24

புணரியல்.

நிலைமொழி, வருமொழி	...	26
இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி	...	26
புணர்ச்சி விகாரங்கள்	...	27

Form V.

எழுத்திலக்கணம்.

அகச்சுட்டு, புறச்சுட்டு	....	32
அகவினா, புறவினா	...	33
இன எழுத்து	...	33
மாத்திரை	...	33
மொழி முதல் எழுத்து	...	34
போலிவகை	...	35

சொல் இலக்கணம். பெயர்.

வடசொல், தற்பவம், தற்சமம்	....	37
காரண இடுகுறிப் பெயர்	...	37
பொதுப்பெயர், சிறப்புப்பெயர்	...	38
ஆகுபெயர் 1—6	...	38
வேற்றுமைப் பொருள்	...	39
விளி ஏலாத பெயர்	...	41
பெயர்கள் உருபேற்கும்போது வரும் சாரியைகள்	...	42

வினைச்சொல்.

தெரிநிலை வினை, குறிப்புவினை	...	43
பகுபத உறுப்பு	...	46
ஏவல், வியங்கோள்	...	47
தன்மை முதலிய இடப்பெயர்கள் விரவி வருதல்	...	48

இடைச்சொல்.

ஏ, ஓ, உம். பொருள்	...	48
உரிச்சொல் வகைகள்	...	50

பொதுவியல்.

		பக்கம்.
குறிப்பால் பொருள் தருவன	...	51
வழக்கு	....	52

புணரியல்.

வேற்றுமை, அல்வழி	...	53
தொகை, விரி	...	54
தொகை, தொடர்	...	56
விகாரங்கள்	...	57

யாப்பு.

அசை, சீர், அடி	...	61

அணி.

உவமை, உருவகம், தற்குறிப்பு	...	64

Form VI.

எழுத்திலக்கணம்.

எழுத்தின் பிறப்பு	...	65
உயிரளபெடை	...	66
மொழியீற்றெழுத்து	...	67

சொல் இலக்கணம். பெயர்.

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி	...	68
ஆகு பெயர் முழுவதும்	...	69
வேற்றுமைப் பொருள்கள்	...	70

வினைச்சொல்.

பொது வினை	...	73
செய்யா என்னும் வாய்பாடு	...	74
ஏவலுக்கும் பகுதிக்கும் வித்தியாசம்	...	74
முற்றெச்சம்	...	75

இடைச்சொல்.

பக்கம்.

மற்று, கொல், தான் ... 75

உரிச்சொல்.

சால முதலியன ... 76

பொதுவியல்.

வழூ அமைதி ... 77
மரபு ... 79
ஒரு பொருட் பன்மொழி ... 79
இரட்டைக்கிளவி ... 80

புணரியல்.

விகாரங்கள் ... 80

யாப்பு.

மோனை, எதுகை ... 83
வெண்பா ... 85
கட்டளைக் கலித்துறை ... 87

அணி.

வேற்றுமை ... 87
வேற்றுப் பொருள்வைப்பு
ஒழிப்பு ... 88
வஞ்சப் புகழ்ச்சி
காட்சி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	கடை	எப்பொழுதும்	எப்பொழுது
9	26	தொழிலைக் குறிப்பது)	தொழிலை)க் குறிப்பது
38	6	செடிபையே	செடியையே
54	21	தொகை ய	தொகையே

மாணவர் இலக்கண குரு.

எழுத்திலக்கணம்.

Form—IV.

எழுத்து.

மாணாக்கன் ஒருவன் இலக்கணம் படிக்கக் கருதினான். அவன் கருத்தை எவரும் காணமுடியாது. அவன் தனது எண்ணத்தைத் தன் நண்பர் ஒருவரிடம் கூறுகிறான். அப்போது அவன் உள்ளக் கருத்து ஒலியாக வெளிப்படுகிறது. இது மொழியின் ஒலிவடிவமாகும். பின்னர் தனது கருத்தை அவன் தூரதேசத்திலுள்ள தன் நண்பனுக்கு அறிவிக்க ஆசை கொள்கிறான். எவ்வாறு அறிவிப்பது? முன்னே ஒலிவடிவாக நின்ற கருத்துக்கு அவன் இப்போது வடிவம் அமைத்து எழுதுகிறான். இவ்வரி வடிவத் தொடரின் ஒவ்வொரு சிறுபாகமும் ஒவ்வொரு எழுத்தாகும்.

எழுத்தாவதென்ன? உள்ளக் கருத்தை வெளியிற் காட்டும் ஒலிக்கு ஏற்பட்ட வரிவடிவமே எழுத்தாகும்.

> **மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து**
> **அது முதல், சார்பு என இரு வகைத்தே. (நன்னூல்.) (1)**

முதல், சார்பு எழுத்துக்கள்.

முதல் என்றால் என்ன? சார்பு என்றால் என்ன? என்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

முறுக்கு, வடை, தோசை, இட்டலி முதலிய பலகாரங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். இவை எவற்றிலிருந்து உண்டாயின? உழுந்து, அரிசி இவற்றிலிருந்துதானே? உழுந்து, அரிசி இவற்றின் மாவு முதற்பொருள்கள். நாம் முன் கூறிய பலகாரங்கள் இவற்றின் சார்பால் வந்த பொருள்கள். முதற் பொருள்கள் பல்வேறு சார்புப் பொருள்களை உண்டாக்கியிருக்கின்றன அல்லவா? அவ்வாறே இங்கு நீங்கள் பார்க்கிற பல்வேறு எழுத்துக்களையும் **உண்டு பண்ணிய** முதலெழுத்துக்கள் 30 தான். அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பனவே.

உயிரும் உடம்புமாம் முப்பது முதலே. (2)

இம் முப்பது முதலெழுத்துக்களே ஒன்றுடனொன்று சேர்ந்து 216 சார்பு எழுத்துக்களை உண்டாக்கியிருக்கின்றன. அவற்றின் விவரம் பார்க்க :—

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

மேலே காட்டப்பட்டுள்ள அ முதல் ஔ வரையிலுள்ள 12 எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் என்றும், விலாவிற் குறித்துள்ள க் முதல் ன் வரையிலுள்ள 18 எழுத்துக்களும் மெய் எழுத்துக்கள் என்றும் சொல்லப்படும். ஒவ்வொரு மெய் எழுத்தின் மீதும் 12 உயிர் எழுத்துக்களும் சேருகின்றன. உதாரணமாக க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி, க்+ஈ=கீ, க்+உ=கு, க்+ஊ=கூ, க்+எ=கெ, க்+ஏ=கே, க்+ஐ=கை, க்+ஒ=கொ, க்+ஓ=கோ, க்+ஔ=கௌ என்பன. க் என்னும் ஒரு மெய்யிலிருந்து 12 சார்பு எழுத்துக்கள் உண்டாவதைத் தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறே 18 மெய்யின் மீதும் இந்த 12 உயிரும் சேர்ந்து வருவதனால் 18×12=216 சார்பு எழுத்துகள் தோன்றுகின்றன. இவை உயிர் மெய் எழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

நாம் கூறிய 30 எழுத்துக்களும் மற்ற எழுத்துக்களின் பிறப்பிற்கு முதற்காரணமாதலால் முதலெழுத்துக்கள் என்று கூறப்படும். முதலெழுத்துக்களின் சார்பால் மற்ற எழுத்துக்கள் பிறந்ததால் அவை சார்பெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

சார்பெழுத்துக்கள் 216 தோன்றிய விதத்தைக் காட்டியிருக்கிறோம். இவையன்றி மூன்று புள்ளிவடிவமான (ஃ) ஆய்த எழுத்து ஒன்று உண்டு. அதையும் சேர்த்துச் சார்பெழுத்து 217 ஆகும். ஆகவே தமிழ்மொழியின் மொத்த எழுத்துக்கள் முதல் எழுத்து (உயிரும், மெய்யுமாக) 30-ம், சார்பெழுத்து (உயிர்மெய்யும், ஆயுதமுமாக) 217ம், ஆக 247 ஆகும்.

[சார்பெழுத்தின் விரி உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் எனும் பகுதிகளால் 369 ஆகும். அவற்றை அவசியமாயின் பின்னர் விளக்குவாம்.

உயிரெழுத்து, மெய்யெழுத்து. நமது தேகத்தைக் கவனியுங்கள். அதில் உடலும், உயிரும் இருக்கின்றன. உடலை விட்டு உயிர் நீங்கிவிட்டால் அச்சரீரம் என்ன செய்யும்? அது பிரயோஜனப்படுமா? அது தனித்து இயங்குமா? இல்லை, இல்லை. ஆனால் அது உயிருடன் சேர்ந்தபோது உலகில் உலவுகிறது; பிரயோஜனப்படுகிறது. ஆகவே, ஒரு மெய்யை ஆட்டுவிப்பது உயிரேயன்றி, அம்மெய்க்குத் தானகப் பயன் தந்து நிற்கும் வன்மை இல்லை. அவ்வாறே எழுத்துக்களைக் கவனியுங்கள். உடலாகிய மெய்யெழுத்துக்கள் 18-ம் தனித்து நிற்பின் இயங்குமா?

ப்—இதை நீங்கள் வாசிக்க முடியுமா? இ என முன் ஒரு உயிரைச் சேர்த்துத்தானே இப் என வாசிக்க முடியும். மெய் தானக இயங்குகிறதில்லை.

ப்—இதன் கருத்து என்ன? ஒன்றுமில்லையே. அதனுடன் ஒரு உயிரைச் சேருங்கள். ப்+ஆ=பா ஆகிறது. பாட்டு எனப் பொருள் தருகிறது. இவ்வாறே கா, கை, கோ, பூ, வை, மை, நோ முதலிய எழுத்துக்களைப் பிரித்து, அவற்றிற்குப்பொருள் தந்தது எந்த எழுத்து எனப் பார்ப்பீர்களாக.

தனித்து இயங்காது (உயிரற்ற உடல் போன்று) நிற்கும் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களாகும்.

தாமும் இயங்கி, மெய்யெழுத்துக்களையும் இயங்கச் செய்யும் எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள் ஆகும். உயிர் எழுத்துக்கள் எவ்வாறு தாமே இயங்குகின்றன?

அம் மனிதன் = அந்த

ஆ = பசு

இம் மனிதன் = இந்த

ஈ = கொடு

அ முதல் ஈறறு ஆவி. க முதல்
மெய் மூவாறு என விளம்பினர் புலவர். (3)

குறில், நெடில், வினு, சுட்டு. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டையும் உச்சரிக்கும்போது சில குறுகிய சப்தம் பெறுகின்றன. சில நீண்ட சப்தம் பெறுகின்றன. அவைகளை உச்சரித்துப் பாருங்கள்.

அ, இ, உ, எ, ஒ இவை குறுகிய ஓசையுடன் முடிவதால் குற்றெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

அ, இ, உ, எ, ஒ. க் குறிலைந்தே. (4)

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவை நீண்ட ஓசையுடன் உச்சரிக்கப்படுவதால் நெட்டெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. நெடில். (5)

வினு=கேள்வி. எந்த எழுத்துக்கள் கேள்விப்பொருளை உணர்த்தும் என்பது இங்குக் குறிப்பிடப்படுகின்றது.

எவன் ? யாவன் ? அவனு ? அவனோ? ஏது ? அவனே ? இவைகள் கேள்விச் சொற்கள் என்று நீங்கள் அறிவீர்கள். இவற்றை நன்கு கவனியுங்கள். முதல் இரண்டு வார்த்தைகளில் எ, யா என்னும் இரு எழுத்துக்களும் வார்த்தைக்கு முதலில் நின்றும், அடுத்த இரண்டு வார்த்தைகளில் ஆ, ஓ என்னும் இரு எழுத்துக்களும் வார்த்தைக்கு ஈற்றில் நின்றும், பிந்திய இரண்டு வார்த்தைகளில் ஏ வார்த்தைக்கு முதலிலும் ஈற்றிலும் நின்றும் வினுவாகின்றனவல்லவா ? ஆகையினுல் எ, யா, ஆ, ஓ, ஏ இவை வினு எழுத்துக்கள் என்று கூறப்படும். (எவன், எது, எப்படி, யார், யாங்ஙனம், ஏது, ஏன் முதலியவற்றைக் கவனிக்க.)

எ, யா முதலும், ஆ, ஓ ஈற்றும்,
ஏ இருவழியும் வினு ஆகும்மே. (6)

சுட்டு. ஏதேனும் ஒன்றைச் சுட்டிக் காட்ட ஏதுவாக நிற்கும் எழுத்துக்கள் சுட்டெழுத்து என்று சொல்லப்படும்.

அவன், அவள், அது, அவை, இவன், இவள், இவை, இப்படி, இவண், உவன், அந்த, இந்த, அவர், இவர், உவர் முதலியவை ஒவ்வொரு பொருளைச் சுட்டிக் காட்டிக் கூறப்படும் சொற்களல்லவா ? அங்குச் சுட்டிக் காட்டும் எழுத்துக்கள் யாவை ? அ, இ, உ இம் மூன்றுமே. இம்மூன்று எழுத்துக்களும் ஏதேனும் ஒன்றைச் சுட்டிக் காட்டினுற் சுட்டெழுத்து என்று கூறப்படும்.

அ, இ, உ முதல் தனிவரில் சுட்டே. (7)

மெய்யெழுத்து. புள்ளிபெற்றுள்ள க் முதல் ன் வரையுமுள்ள 18-ம் மெய்யெழுத்துக்கள் என்று கூறியிருக்கிருேம். மெய்

எழுத்துக்கள் ஒற்று, உடல், உடம்பு, புள்ளி, உறுப்பு என்றும் சொல்லப்படும். உயிரெழுத்திற் பற்பல உட்பிரிவுகள் இருப்பது போலவே மெய்யெழுத்திலுமுண்டு. அவை யாவன :—1. வல்லினம், 2. மெல்லினம், 3. இடையினம்.

நாம் பிறரைக் கண்டிக்கிற நேரத்தில் நமது குரல் அதிகக் கடினமாகத் தோன்றுகிறதில்லையா? உதை, அடி, வெட்டு, போ, சீசீ, அற, நொறுக்கு முதலிய வார்த்தைகள் அதிக வன்மையுடன் உச்சரிக்கப்படுவன. அங்கு வலிய சப்தம் நமது நாவிலிருந்து பிறக்கின்றது. அவ்வலிய சப்தம் பெற்றவை க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு எழுத்துக்களுமே. ஆகவே இவை வல்லினம் என்று கூறப்படும்.

வல்லினம் க ச ட த ப ற என ஆறே. (8)

கேட்க மெதுவாக, இனிமை தந்து நிற்கும் சப்தங்களையுடைய எழுத்துக்கள் மெல்லினம் என்று சொல்லப்படும். அவை :—ங, ஞ, ண, ந, ம, ன.

மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே. (9)

அதிக வன்மையும் அதிக மென்மையும் பெறாது, இவைகட்கு மத்தியாய் ஒலிப்பவை இடையினம் என்று கூறப்படும். அவை :—ய, ர, ல, வ, ழ, ள.

இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே. (10)

பின் வரும் வார்த்தைகளை வாசித்து வல்லினம், மெல்லினம், இடையினத்துக்குரிய பேதத்தை உணர்க.

கக்கு	கங்குல்	கயிலி	(ஒரு விதப் புடவை)
கச்சு	கஞ்சம்	கருவி	(ஆயுதம்)
கட்டு	கண்டம்	கலுழி	(காட்டாறு)
கத்து	கந்தம்	கவரி	(மான்)
கப்பு	கம்பம்	கழலை	(சதைக்கட்டி)
கற்று	கன்றல்	களரி	(போர்க்களம்)

வல்லின எழுத்துக்கள் வலி, வன்மை, வன்கணம் எனவும், மென்லின எழுத்துக்கள் மெலி, மென்மை, மென்கணம் எனவும், இடையின எழுத்துக்கள் இடை, இடைமை, இடைக்கணம் எனவும் கூறப்படும்.

உயிர்மெய் எழுத்து. உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து பிறந்த எழுத்துக்கள் உயிர்மெய் யெழுத்துக்கள். அவை 216. (முன் சார்பெழுத்தில் கூறியிருப்பதைக் கவனிக்க.)

ஆய்த எழுத்து. ஆய்தம் என இங்குக் குறிப்பிடப்படுவது கேடக மாகும். கேடகத்தின் வடிவமும், தன்மையும் என்ன ? (1) கேட கத்தில் மூன்று குமிழ்கள் தோன்றுகின்றன. (2) கேடகம் தானே சென்று யுத்தம் புரியாது. அது பிறரின் ஆயுதங்களைத் தடுத்துக் கொள்ள ஒருவரைச் சார்ந்து நிற்கும் ஒரு கருவியாகும். அவ் வாறே ஃ என்னும் ஆய்த எழுத்தும் மூன்று புள்ளிகளால் குறிப் பிடப்படுவதாலும், அது தானாகவோ அல்லது ஒரு உயிருடன் கூடி யோ பொருள் தராமல், வார்த்தைகளின் இடையில் பிற எழுத்துக் களைச் சார்ந்தே நிற்பதாலும் ஆய்த எழுத்து என்று சொல்லப்படுகிறது. ஃ, ஃ+அ = இவற்றிற்குப் பொருளில்லை. ஆய்தம் வழக்கில் நிற்கும் முறையாது ? எஃகு (வேல்), கஃசு (ஓர் எடையளவு), ஒன் பஃது (ஒன்பது), பஃறி (ஓடம்), அஃகடிய, செய்வஃது என வல்லின உயிர் மெய்யெழுத்துக்களுக்கு முன்னே அது வந்து நிற்கும்.

குற்றியலுகரம். உகரம்=உ. குற்றியலுகரம் என்றால் குறுகிய இயல்பு கொண்ட உகரம் என்பது பொருள். அதாவது 'உ' என்னும் எழுத்து சாதாரணமாக ஒலிப்பதைவிடக் குறைந்து ஒலிப்பதாம். எவ்வாறு ? பின்வரும் வார்த்தைகளை வாசியுங்கள் :—

பாக்கு, பஞ்சு, பட்டு, பந்து, பருப்பு, பயறு. இந்த ஆறு வார்த் தைகளின் இறுதியிலும் கு, சு, டு, து, பு, று எனும் எழுத்துக்கள் இருக்கின்றன. அவை க், ச், ட், த், ப், ற் என்ற மெய்களுடன் 'உ' சேர்ந்தவையல்லவா ?

சரி, நீங்கள் ஒரு கடைக்குச் சென்று கடைக்காரனிடத்தில் மேற்கண்ட சாமான்கள் இருக்கின்றனவா எனக் கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். 'ஐயா, பாக்கு இருக்கிறதா ? ஐயா, பஞ்சு இருக் கிறதா ?' என்று சொல்வீர்களா ? அல்லது. 'ஐயா, பாக்கிருக் கிறதா ? ஐயா, பஞ்சிருக்கிறதா ?' என்று சொல்வீர்களா ? பிந்திய முறையில் சொல்வீர்களல்லவா ? இப்போது பாக்கு, பஞ்சு இவற்றிலுள்ள உகரம் எங்கே ? அதன் தன்மை மறைந்து போயிற் றல்லவா ? இவ்வாறே நாம் காட்டிய ஆறு பொருட் பெயர்களையும் சொல்லிப்பாருங்கள். 'பட்டிருக்கிறதா, பந்திருக்கிறதா, பருப்பிருக் கிறதா, பயறிருக்கிறதா ?' என்றுதானே சொல்லுவீர்கள். உ என் னும் ஒலியைக் காணோமே. நாம் மேற் கூறிய பதங்களில் ஈற்றிலுள்ள உகரத்தை நீக்கி வாசியுங்கள். பாக்க், பஞ்ச், பட்ட், பந்த், பருப்ப், பயற். இப்பொழுது நீங்கள் இவற்றால் குறிப்பிடப்படும் பொருளை உணர்ந்து கொள்கின்றீர்களல்லவா ? இறுதியில் சேரும் உகரம் நாம் பேசும்போது தனது முழு அளவில் ஒலிக்காது குறைந்து நிற்கின்றது என்பதைக் கவனியுங்கள்.

இனி உகரங்கள் எப்பொழுதும் ஓசையிற் குறைகின்றன எனக் காட்டுவாம்.

கு, சு, டு, து, பு, று என்னும் 6 எழுத்துக்களும் ஒரு வார்த்தைக்கு ஈற்றில் நிற்கும்பொழுது அவற்றிற்கு முன் ஒரு நெடிலாவது அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களாவது இருப்பின் அவை குற்றியலுகரமாகும்.

(1) நாகு, காசு, காடு, காது, 'பாபு,' சோறு.
(2) எஃகு, கஃசு, கஃடு, அஃது, அஃபு, சுஃறு.
(3) வரகு, முரசு, முரடு, எருது, மரபு, கயிறு.
(4) சுக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று.
(5) சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று.
(6) செய்கு, 'கார்டு', பெய்து, மார்பு,

மேலே காட்டிய உதாரண வார்த்தைகளின் ஈற்றில் நிற்கும் குற்றியலுகரங்களாகிய கு, சு, டு, து, பு, று எழுத்துக்களைக் கவனியுங்கள். 1-வது வரியில் இவ்வுகரங்களுக்கு அயலெழுத்து நெட்டெழுத்தாகவும், இரண்டாவதில் ஆய்த எழுத்தாகவும், மூன்றாவதில் (மெய் சேர்ந்த) உயிரெழுத்தாகவும், நான்காவதில் வல்லின மெய்யாகவும், ஐந்தாவதில் மெல்லின மெய்யாகவும், ஆறாவதில் இடையின மெய்யாகவும் இருப்பதைக் கவனியுங்கள். ஆகையால் இவை முறையே நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங்கள் என்று சொல்லப்படும்.

குற்றியலுகரத்தின் மற்றொரு தன்மையைக் கவனியுங்கள். மாடு—டு குற்றியலுகரம். மாடு+ஓடிற்று=மாடோடிற்று. ஓடிற்று என்னும் வருமொழி ஆரம்பத்திலிருப்பது ஓ என்னும் உயிர் எழுத்தல்லவா? வருமொழி ஆரம்பத்தில் உயிர் எழுத்து இருக்குமாயின், நிலைமொழி (மாடு) ஈற்றுக் குற்றியலுகரம் மறைகின்றது. ஆகவே மாட் என நிற்கும் மொழியில், வருமொழி ஆரம்ப உயிர் சேர்கிறது. மாட்+ஓடிற்று=மாடோடிற்று. (ட்+ஓ=டோ.)

நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடை
தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. (11)

கு, சு, டு, து, பு, று ஆறு எழுத்துக்களும் இவ்வாறு தனித் தனியாக நிற்கும்போதும், ஒரு குற்றெழுத்தை அயலிற் கொண்டு நிற்கும்போதும் ஓசையிற் குறையாது ஒலிக்கும். ஆதலால் அவை முற்றியலுகரம் என்று கூறப்படும். கு, சு, டு, து, பு, று—முற்றியலுகரம். பகு, பசு, படு, அது, அறு—முற்றியலுகரம். இஃதன்றி மெல்லின மெய்யின்மீது உகரம் ஏறிய ஙு, ஞு, ணு, நு, மு, னு 6 எழுத்துக்களும், இடையின மெய்யின் மீதேறிய யு, ரு, லு, வு, ழு, ளு 6 உகரங்களும் எப்போதும் முற்றியலுகரமே.

பின்வரும் வார்த்தைகளில் உள்ள உகரங்கள் எவ்வருக்கத்தைச் சேர்ந்தவை? மார்பு, அரசு, மசு, புலவு, பத்து, பருப்பு, போக்கு, பாய்ச்சு, புழு, குட்டு, சிறப்பு, வரவு, கயிறு, நீக்கு, மாவு, நண்டு, நஞ்சு வாழ்வு, தாணு, தும்மு, செலவு, கதவு, நாலு, நன்கு, படிப்பு.

குற்றியலிகரம். இகரம்=இ. குற்றியலுகரமென்றால் குறுகிய இயல்புடைய உகரம் என்று பொருள் கண்டோம். அவ்வாறே குற்றியலிகரமெனின் குறுகிய இயல்புகொண்ட இகரம் எனப் பொருள் படும். இனி இகரம் எப்பொழுது குறைந்து ஒலிக்கிறது என்பதை விளக்குவோம். பின்வரும் வார்த்தைகளைச் சேர்த்துக் கூறுங்கள். பாக்கு+யாது, பஞ்சு+யாது, சீட்டு+யாது, அஃது+யாது, பருப்பு+யாது, கயிறு+யாது. பாக்கி யாது, பஞ்சி யாது, சீட்டி யாது, அஃதி யாது, பருப்பி யாது, கயிறி யாது என உச்சரிப்பீர்கள். ஆனால் அங்குத்தோன்றும் கி, சி, டி, தி, பி, றி முதலிய இகரங்கள் விளக்க மாக உச்சரிக்கப்படுவதில்லை. பாக் யாது, பஞ்ச் யாது, சீட் யாது, அஃத் யாது, பருப் யாது, கயிற் யாது என்பன போன்றே உச்சரிக் கப்படுகின்றன. இவ்வாறு குறுகிய ஓசையுடன் கூறப்படும் இகரம் குற்றியலிகரமாம்.

மேலும், மியா என்பது ஒரு அசைச்சொல். முன்னிலை ஒருமை ஏவல்வினையில் மியாவைச் சேர்ப்பதுண்டு. (கேள்+மியா=கேண்மியா.) இந்த மியா ஆரம்பத்திலிருக்கும் இகரமும் குறுகியதே.

குற்றியலிகரம் என்றால் என்ன? நிலைமொழி ஈற்றுக் குற்றிய லுகரங்கள், வருமொழி முதலில் யகரம் வரின் இகரமாகத் திரிகின்றன. அவைகளும், மியா என்னும் அசைச் சொல்லின் இகரமும் குற்றிய லிகரமாம்.

> யகரம்வர குறள் உ திரி இகரமும்
> அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய (12)

போலி போல வருவது போலியாகும். ஒரு வார்த்தையின் எழுத்துக்கள் சிறிது மாறபட்டு, பொருள் மாறபடாது முந்தியதைப் போல நிற்பதே போலி.

(1) அஃறிணைப்பெயர்களின் ம் எனும் ஈற்றெழுத்து ன் ஆக மாறும். நிலம்—நிலன், அறம்—அறன்; (2) அ—ஐ என வரும். பயல்—பையல், மஞ்சு—மைஞ்சு, அரயன்—அரையன்; (3) ந—ஞ வாகவும், ஞ—ந வாகவும் மாறும். ஐந்நூறு—ஐஞ்ஞூறு, ஞாயிறு—நாயிறு; (4) ல்—ர் எனவரும். பந்தல்—பந்தர், சாம்பல்—சாம்பர்; (5) குற்றிய லுகரம் அர் ஆகும். வண்டு—வண்டர், சிறகு—சிறகர்; (6) ஐந்து—அஞ்சு, இதில் ஐ—அ ஆகவும், ந்—ஞ் ஆகவும், த—ச ஆகவும் மாறியுள்ளன; (7) ஔ—அவு என மாறிவரும். ஔடதம்—அவுடதம். கௌதாரி—கவுதாரி; (8) ஔ—அவ் என மாறிவரும்.

ஔவை—அவ்வை; கௌவி—கவ்வி; (9) ஐ—அய் என வரும். ஐயர்—அய்யர்; மையல்—மய்யல்; (10) ஐ—அயி என வரும். வைத்தியர்—வயித்தியர்; பைத்தியம்—பயித்தியம்.

(7, 8, 9, 10 இவற்றைப் புறனடையால் கொள்வார் நன்னூலார்.)

சொல் இலக்கணம்.

சொல், பதம், மொழி, வார்த்தை, கிளவி இவை ஓரே பொருள் தருவனவாகும். இங்கு நாம் சொற்களைப்பற்றி ஆராய்கின்றோம்.

சொல்: ஒரு எழுத்தாவது பல எழுத்துக்கள் சேர்ந்தாவது பொருள் தரின் சொல் ஆகும். பின்வரும் சொற்களின் எழுத்துக் களைக் கவனியுங்கள்.

பூ, கை, ஆ, அணி, பலா, கலம், மனம், சிறப்பு, கணவன், இரும்பூது, குங்கிலியம், உத்தரட்டாதி.

ஆ, ஈ முதலிய எழுத்துக்கள் தம்மை உணர்த்தும்போது எழுத்து எனவும் ஆ=பசு; ஈ=கொடு எனப் பொருள் தரும்போது சொல் எனவும் கொள்க.

சொற்கள் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும். பகுத்தால் பகுதி, விகுதி, இடைநிலை என்னும் இலக்கண வரம்புள் நிற்காமல் சிதையக்கூடிய பதங்கள் பகாப்பதம் (உ-ம்) நிலம், கல், நட, வா, போல், மற்று, கழி, நனி. பொருள் தரும் சிறு சிறு சொற் களாகப் பிரிக்கப்படும் பதங்கள் பகுபதமாம். உ-ம்:—

பொன்னன்	பொன்	+		அன்
நாற்காலி	நான்கு	+	கால் +	இ

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்.
அது பகாப்பதம், பகுபதமெ்ன இருபாலாகி இயலும் என்ப. (13)

சொற்கள். சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் என நான்கு வித மாகும்.

பெயர்ச்சொல். ஒன்றின் பெயரே பெயர்ச்சொல். உ-ம்:—மலை, கடல், ஆனி, கண், கோபம், சிரிப்பு.

வினைச்சொல். ஒன்றின் வினையை (தொழிலைக் குறிப்பது) வினைச் சொல். உ-ம்:—வந்தான், நடந்து, கொடு.

இடைச்சொல். (தனித்து நடக்கும் ஆற்றலின்றி) பெயர்ச்சொல், வினைச்சொற்களுடன் இடம்பெறும் சொல் இடைச்சொல். (இடை= இடம்)

(உ—ம்) இப்பொழுது இரவும் பகலும் இலக்கணமே படிக்கிறேன். இவ்வாக்கியத்தில் பொழுது, இரவு, பகல், இலக்கணம் இந்நான்கும் பெயர்ச்சொற்களாம். படிக்கிறேன்—இஃது வினைச்சொல். ஏனைய இ, உம், உம், ஏ, என்பவை இடைச்சொற்களாம்.

உரிச்சொல் : பெயர், வினைகளுக்குரிய குண உரிமையை விளக்கும் சொல் உரிச்சொல்லாம்.

கடிவேல் (கடி=கூர்மை) உறுபுகழ் (உறு=மிகுதியான) சால நன்று. (சால=மிக) இது பெரும்பாலும் செய்யுளுக்கே யுரியது.

இவையன்றி திசைச்சொல், வடசொல் என இருவிதச் சொற்கள் உள. அவற்றை விளக்குவோம்.

திசைச்சொல். மற்றதேச பாஷைகளின் சொற்கள் அதே பொருளில் தமிழில் வழங்குமாயின் அவற்றிற்குத் திசைச்சொல் என்று பெயர்.

வஞ்சகரைக்	கையர்	என்பது	கற்கா	நாட்டுச்சொல்
சிறுகுளத்தைப்	பாழி	,,	பூழி	,,
கருத்தாக என்பதை	எச்சரிக்கை	,,	தெலுங்கு	,,
மாமரத்தைக்	கொக்கு	,,	துளுவ	,,
அகப்படுதலைச்	சிக்குதல்	,,	கன்னட	,,
ஐயோ என்பதை	அந்தோ	,,	சிங்கள	,,

Summon, Funnel, Motor, Bulb, Harmonium முதலியவை இவ்வாறே சமன், புனல், மோட்டார், பல்ப், ஹார்மோனியம் என வழங்கப்படுதலால் இவைகளும் திசைச்சொற்களாகவே கருதப்படும்.

(குறிப்பு :—கொடுந்தமிழ்நாடு 12. தமிழ்த்தேசம் நீங்க மற்றத் தேசங்கள் 16 : ஆக 28 நாட்டுப் பாஷையின் சொற்கள் தமிழில் வழங்கப்படுவதைத் திசைச்சொல் என்பர் நன்னூலார்.)

வடசொல். வடதிசையிலுள்ள சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் வழங்கப்படும் சொல் ஆகும். உ—ம் :—அமலம், போகி, அரி, அரன், சயம், சிவன்.

குறிப்பு :—சப்ஸ்கிருதம் முன்பு இமயமலைச் சாரலில் வடக்கில் பேசப்பட்டு வந்ததால் வடமொழி எனப்பேர் பெற்று, தனது ஆதிக்கத்தைத் தமிழர் மீது செலுத்தி வந்ததால் திசைச்சொல்லுடன் சேராது தனித்து நின்றுகொண்டது போலும்.

பெயர்ச்சொல். பெயர்கள் இடுகுறிப்பெயர் என்றும், காரணப் பெயர் என்றும் இருவிதப்படும். ஒருபொருளைக் குறிப்பதற்காக எவ்வித காரணமுமின்றி ஆன்றோர் இட்டபெயர் இடுகுறிப் பெயராம். உ—ம் :—மண், கல், நிலம், மரம்.

ஏதேனும் காரணங்கொண்டு பொருள்களுக் கிட்ட பெயர் காரணப்பெயர்.

வளையல்	வளைந்திருப்பது
நாற்காலி	நான்கு கால்கள் கொண்டது
வேல்	வெல்லுவது
மீன்	மின்னுவது
பறவை	பறப்பது
பரவை	பரந்து கிடப்பது

பலவகைப் பெயர்கள்.

	பெயர்	உதாரணம்	விளக்கம்
1	பொருட்பெயர்	மாடு, மரம்	ஒரு பொருளைக் குறிப்பது
2	இடப்பெயர்	சென்னை, கடல்	ஒருஇடத்தைக்குறிப்பது
3	காலப்பெயர்	வருஷம், ஆடி	காலத்தைக் குறிப்பது
4	சினைப்பெயர்	கண், கொம்பு	உறுப்புகளைக் குறிப்பது
5	குணப்பெயர்	சாந்தம் சிவப்பு,	குணம், நிறத்தைக்குறிப்பது
6	தொழிற் பெயர்	நடத்தல், வருகை	ஒருவினை பெயராக வருவது
7	கிளைப்பெயர்	தந்தை, பெற்றார்	முறை கூறிவருவது
8	சாதிப்பெயர்	நாடார், வைசியர்	குலத்தைக் குறிப்பது
9	அளவுப்பெயர்	கால், பலம், நாழி, மைல். எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்	அளவைக் குறிப்பது
10	தன்மைப்பெயர்	நான், யான்	தன்னைக் குறிப்பது
11	முன்னிலைப்பெயர்	நீ, நீங்கள், எல்லீர்	முன்னிற்போரைக் குறிப்பது
12	படர்க்கைப்பெயர்	அவன், அது, அவை	தன்மைமுன்னிலைநீங்கிய மற்றவற்றைக் குறிப்பது
13	பொதுப்பெயர்	தான், தாம், எல்லாம்.	இரு திணையிலும் பொதுவாக வருவது
14	வினையாலணையும் பெயர்	வந்தவன், கண்டோன்.	தான் செய்த வினையின் காரணமாக வருவது

தொழிற் பெயர் தொழிலையும், வினையாலணையும் பெயர் தொழிலைச் செய்த பொருளையும் குறிக்கும்.

(உதாரணம்.) நடத்தல்—தொழிற் பெயர்.
நடந்தவன்—வினையாலணையும் பெயர்.

பண்புப்பெயர் விகுதிகள் :—மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம். உ—ம் :—நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்.

தொழிற்பெயர் விகுதிகள் :—தல், அல், அம், ஐ, வை, கை, பு, சி, வி, தி, உ, டு, காடு, பாடு, அரவு, ஆனை, உள், மை, ஆல், இல், து. உ-ம் :—நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, பார்வை, நடக்கை, நட்பு, உணர்ச்சி, கல்வி, மறதி, வரவு, போக்கு, சாக்காடு, கோட்பாடு, தேற்றரவு, வாரானை, செய்யுள், நடவாமை, சுழால், எழில், பாய்த்து.

தொழிற்பெயர் மூவிதப்படும். அவையாவன :—

(1) விகுதிபெற்ற தொழிற்பெயர். ஒரு வினைப் பகுதியுடன் ஒரு விகுதி சேர்ந்து பெயராகி வருவது விகுதிபெற்ற தொழிற்பெயர். (உ-ம்) நடக்கை, நட+கை. ஆட்டம் ஆடு+அம். கட்டடம் கட்டு+அடம்.

(2) முதனிலைத் தொழிற்பெயர். ஒரு வினைப்பகுதி எவ்வித மாறுபாடுமின்றி பெயர்ச்சொல்லாக வருவது முதனிலைத் தொழிற் பெயர். ஒரு அடி அடித்தான். ஒரு நகை நகைத்தான். ஒரு மிதி மிதித்தான்—இவ்வாக்கியங்களில் அடி, நகை, மிதி முதலிய வினைப் பகுதிகள் பெயராகி வருதலை உணர்க.

(3) முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஒரு வினைப்பகுதி (விகுதி பெறாது) தன்னில் சிறிது மாறுபட்டு வருவது முதனிலை திரிந்த தொழிற் பெயர். வீடு பெற்றான். சூடு சுட்டான். பேறு பெற்றான்—இவ்வாக்கியங்களில் விடு, சுடு, பெறு என்னும் பகுதிகள் திரிந்து வீடு, சூடு, பேறு என நிற்பதை உணர்க.

வீடு=விடுதலை பேறு=ஒன்றைப் பெறும் புண்ணியம். முதனிலை=பகுதி.

சொல் இலக்கணம். பெயர்ச்சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமையும், வினைச்சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், காலமும் கூறுவது சொல் இலக்கணமாம்.

திணை. திணை=குலம். திணை உயர்திணை என்றும், அஃறிணை என்றும் இருவிதமாகும்.

உயர்திணை=உயர்வாகியகுலம். மனிதர், தேவர், நரகரின் பெயர்கள் உயர்திணை. கோவலன், பரமன், தேவதை, செட்டி, இசக்கி, அம்மையப்பர்.

அஃறிணை=உயர்வு அல்லாத குலம். உயர்திணையற்ற உயிர் பெற்றன, பெறுதன யாவும் அஃறிணையே. மாடு, இரும்பு, பூச்சி, பலம், தோட்டம்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை.
மற்று உயிருள்ளவும் இல்லவும் அஃறிணை. (14)

பால். பால்=வகுப்பு, பிரிவு. பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

ஆண்பால்—ஆணைக் குறிப்பது. அரசன், எருது.

பெண்பால்—பெண்ணைக் குறிப்பது. அரசி, பசு.

பலர்பால்—உயர்திணை ஆண், பெண், பன்மையைக் குறிப்பது. நாங்கள், மனிதர், நீங்கள், குழந்தைகள்.

ஒன்றன்பால்—அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது. மாடு, மந்தை, அது, மனை.

பலவின்பால்—அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது. மாடுகள் மந்தைகள், அவைகள், சில.

ஆண், பெண், பலர் பால்கள் உயர்திணைக் குரியன. ஒன்றன், பலவின் பால்கள் அஃறிணைக் குரியன.

ஆண்பெண் பலர்என முப்பாற் றுயர்திணை. (15)

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. (16)

எண். எண்=தொகை. எண் ஒருமை, பன்மை என இரு வகைப்படும். ஒருமை ஒன்றைக் குறிப்பது. பன்மை பலவற்றைக் குறிப்பது. ஒன்றுக்கு மேற்பட்டவை பன்மையாம். ஒருமை—மாடு, சேனை, நூல், மந்தை, மனிதன். பன்மை—மாடுகள், சேனைகள், நூல்கள், மந்தைகள், மனிதர்கள்.

இடம். இது சொற்கள் பேசப்படும் இடத்தை விளக்கும். சொற்கள் தன்னைக்குறித்தும், முன்னிற்பவனைக் குறித்தும், இவ்விருவரும் நீங்கிய மற்றவற்றைக் குறித்தும் ஆக மூன்றிடங்களிற் பேசப்படும். தன்னைக் குறிப்பது தன்மை என்றும், முன் னிற்பவனைக் குறிப்பது முன்னிலை என்றும், மற்றவற்றைக் குறிப்பது படர்க்கை என்றும் சொல்லப்படும். இம்மூன்றிடத்துச் சொற்கள் யாவை?

தன்மை	ஒருமை—நான், யான் பன்மை—நாம், யாம், நாங்கள், யாங்கள்
முன்னிலை	ஒருமை—நீ பன்மை—நீர், நீவிர், நீங்கள், எல்லீர்
படர்க்கை	ஒருமை—அவன், அவள், அது, மாடு பன்மை—அவர்கள், அவைகள், மாடுகள்

குறிப்பு :—ஒருமையிலுள்ள நீ, அவன் முதலியவற்றைக் கௌரவமாகக் கூறுமிடத்து நீங்கள், அவர்கள் எனக்கூறுவதுண்டல்லவா? அஃது உயர்வுப்பன்மை என்று சொல்லப்படும்.

தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே. (17)

வேற்றுமை. வேற்றுமை=வித்தியாசம்; வேறுபடுத்துவது. ஒரு பெயரை இயல்பாகவே அதற்குரிய பொருளைவிட்டு வேறு படுத்துவது வேற்றுமையாம். எவ்வாறு? கொலையாளிகள், வாள், கோவலன் என்னும் இந்த மூன்று வார்த்தைகளின் பொருள் என்ன? இவ்வார்த்தைகள் அவற்றின் உருவப்பொருளை யன்றி வேறு எதுவும் குறிப்பன வல்ல. ஆனால் கொலையாளிகள் வாளால் கோவலனை வெட்டினர் என்னும் இவ்வாக்கியத்தில் அப்பதங்களின் பொருள் என்ன? வாளால் (ஆல்) ஏதோ ஒரு காரியம் நடந்திருக்கிறது. கோவலனை—(ஐ) ஏதோ செய்திருக்கின்றனர். கொலையாளிகள்—(வெட்டினர்) ஏதோ ஒரு காரியத்தைச் செய்பவர்.

இவ்வாறு வார்த்தைகள் தம்முடன் சேரும் சில இடைச்சொற்களால் வெவ்வேறு விதமான பொருள் தந்து நிற்பதே வேற்றுமை எனப்படும். வேற்றுமை 1, 2, 3, 4, 5, 6, 7, 8-ம் வேற்றுமை என்னும் பெயருடன் எட்டு ஆகும்.

முதல் வேற்றுமை. ஒரு பொருளை ஒரு காரியத்தைச் செய்ததாகக் கூறி நிற்கும்பெயர் முதல் வேற்றுமை. இதுவாக்கியத்தில் எழுவாயாகவும், எழுத்தில் வேறுபாடில்லாமலும் வருகின்றது. வினையும், பெயரும், வினாவும் இதற்குப் பயனிலை யாகும்.

(உ-ம்)	கண்ணகி கண்டாள்—	எழுவாய்	வினையில் முடிந்தது
	கண்ணகி+நல்லவள்—	,,	பெயரில் முடிந்தது
	கண்ணகி+இவளா?—	,,	வினாவில் முடிந்தது

எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினை, பெயர், வினா கொளல் அதன் பயனிலையே. (18)

1-ம் வேற்றுமைக்குச் சொல்லுருபு. ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்றவன், என்கிறவன், என்பவன் முதலியவை ஐம்பாலிலும் ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை எனத் தோன்றும். இவற்றை உபயோகித்துக் காண்க.

(உ-ம்) கண்ணகி என்பவள் விண்ணுற்றாள்
திருக்கடவூர் என்பதும் இதுதானோ?
அடியார்கள் என்பவர்கள் இவர்களே.

தச்சன் கோயிலைக் கட்டினான்—எழுவாய் இயற்றுதற்கருத்தா.
அரசன் கோயிலைக் கட்டினான்—எழுவாய் ஏவுதற்கருத்தா.

செய்வாயா பாண்டியா ? என்றபோது நீ என்னும் எழுவாய் தோன்றாது மறைந்து நிற்பதால் தோன்றா எழுவாய் என்று கூறப் படும்.

முதல் வேற்றுமை பெயர் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

2-ம் வேற்றுமை. இதன் உருபு ஐ. இது பெயரைச் செயப் படுபொருளாகச் செய்யும்; ஆதலின் இதற்குச் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் பெயருண்டு. ஐ உருபு பெற்று ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை, விருப்பம் என்னும் பொருள்களில் வரும்.

உ-ம்.	வீட்டைக் கட்டினான்	ஆக்கம்
	வீட்டை இடித்தான்	அழித்தல்
	வீட்டை யடைந்தான்	அடைதல்
	வீட்டை விட்டான்	நீக்கல்
	புலியைப் போன்றான்	ஒத்தல்
	பொன்னை யுடையான்	உடைமை
	வீட்டை விரும்பினான்	விருப்பம்

இரண்டாவதனுருபு ஐ யே. அதன்பொருள்
ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்.
ஒத்தல், உடைமை ஆதியாகும். (19)

3-ம். வேற்றுமையின். உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. கொண்டு, உடன்—இதன் சொல் உருபாக வரும். இவ்வுருபுகள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளைத் தந்து நிற்கும்.

உ-ம்.	மண்ணாற் செய்த குடம்	முதற்கருவி
	தண்ட சக்கரத்தால் செய்த குடம்	துணைக்கருவி
	அரசனால் கட்டப்பட்ட வீடு	ஏவுதற்கருத்தா
	கொத்தனால் கட்டப்பட்ட வீடு	இயற்றுதற்கருத்தா
	தந்தையுடன் மகனும் வந்தான்	உடன்நிகழ்ச்சி

முதற்கருவியாவது மூலவஸ்து ; துணைக்கருவியாவது அனுசரணையாக நிற்பது. குடம் செய்வதற்கு முதலில் வேண்டியதாயிருப்பது மண்ணே; ஆதலின் அது முதற்கருவி. இரண்டாவது வேண்டியது ஆயுதம் ; ஆதலின் அது துணைக்கருவி.

ஏவுதற்கருத்தா—வினையைத் தானாகச் செய்யாதபடி செய் வதற்குக் காரணமாக நின்று ஏவி நடத்தினவன் ; இயற்றுதற் கருத்தா வினையை இயற்றுபவன் ; உடனிகழ்ச்சியாவது ஒருவினை நடக்கும் போதே அதனுடன் மற்றொன்று நிகழ்ந்ததாகக் கூறல். தந்தை வந்தான் என்று கூறி அவனுடன் மகனும் வந்தான் எனக் குறிப் பிட்டிருப்பதைக் கவனிக்க.

மூன்றுவதனுருபு ஆல் ஆன் ஒடு ஓடு.
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள். (20)

4-ம் வேற்றுமை. இதன் உருபு கு.
சொல்லுருபு பொருட்டு, ஆக, நிமித்தம்.

உ-ம். ஏழைகட்குத் தர்மஞ்செய்.
பாம்புக்குத் தோழன் யார்?
பழிக்குப்பழி வேண்டா.

5-ம் வேற்றுமை. இதன் உருபு இல், இன்.
சொல்லுருபு நின்று, இருந்து.

உ-ம். மலையிலிருந்து வீழ் அருவி.
காட்டினின்று வரும் ஆறு.
கல்வியிற் பெரியர் கம்பர்.
அவனின் இவனே அழகன்.

6-ம் வேற்றுமை. இதன் உருபு அது, ஆது, அ.
சொல்லுருபு—உடைய.

உ-ம். கண்ணனது	கை	பன்மைப்பெயர்கள் பின் தோன்றின் அ உருபு முன்வருகிறது.
எனது	வீடு	
உன	வீடுகள்	
முருகனுடைய	மயில்	

7-ம் வேற்றுமை. இதன் உருபு இல், இடத்தில், கண் முதலிய இடத்தைக் குறிக்கும் சொற்கள்.

உ-ம். மணியின்	ஒலி
மலையில்	தீபம்
நல்லாரிடம்	நட்புகொள்
நாளின்கண்	நாழிகை

8-ம் வேற்றுமை. இதன் உருபுகளாவன:—(1) பெயரின் ஈறுதிரிதல் (2) ஈறுகுன்றல் (3) மிகுதல் (4) இயல்பு (5) அயல் திரிபு.

உ-ம்.	முதல் வேற்றுமை	8-ம் வேற்றுமை
1.	தந்தை, நல்லாள், தோழி	தந்தாய், நல்லாய், தோழீ
2.	அரசன், தோழன்	அரச, தோழ
3.	மகன், தந்தை	மகனே, தந்தையே
4.	நம்பி, தோழி	நம்பி, தோழி
5.	மக்கள், புலவர்	மக்காள், புலவீர்

8-ம் வேற்றுமைக்கு விளிவேற்றுமை என்றும் பெயர்.

விளி = கூப்பிடு.

உருபேற்கும்போது வித்தியாசப்படும் பெயர்கள்.

நான், யான், நாம், யாம், தான், தாம், நீ, நீர், நீவிர், நீங்கள் என்பன வேற்றுமை உருபேற்கும்போது மாறுபடுகின்றன. எவ்வாறு?

வேற்றுமை		1	2 3
நான், யான்	என் எனவும்,	நான், யான்	என்னை; என்னால்
நாம்	நம் எனவும்,	நாம்	நம்மை, நம்மால்
யாம்	எம் எனவும்,	யாம்	எம்மை, எம்மால்
தான்	தன் எனவும்,	தான்	தன்னை, தன்னால்
தாம்	தம் எனவும்,	தாம்	தம்மை, தம்மால்
நீ	உன் எனவும்,	நீ	உன்னை, உன்னால்
நீர்	உம் எனவும்,	நீர்	உம்மை, உம்மால்
நீவிர்	நும் எனவும்,	நீவிர்	நும்மை, நும்மால்
நீங்கள்	உங்கள் எனவும், மாறுபடுகின்றன.	நீங்கள்	உங்களை, உங்களால்

சில, பல, எல்லாம் என்பன உருபேற்கும்போது 'அற்று'ச் சாரியை பெறும்.

சில	சிலவற்றை, சிலவற்றால்
பல	பலவற்றை, பலவற்றால்
எல்லாம்	எல்லாவற்றை, எல்லாவற்றால்

ம் ஈற்றில் கொண்ட பெயர்ச்சொற்கள் உருபேற்கும்போது 'அத்து'ச் சாரியை பெறும்.

மரம்	மரத்தை, மரத்தால்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்கட்கு இலக்கணம் கூறுக:—

காவிரிப்பூம்பட்டினத்தில் ஓர் வணிகர் மகன் கோவலன் என்னும் பேரினன் தன் மனைவி கண்ணகியுடன் பாண்டிய நாட்டுக்குட் சென்றான். தரித்திரத்தினால் மனைவியின் கால் சிலம்பை விற்க எத்தனிக்கையில், வஞ்சிப்பத்தன் என்னும் தட்டானுடைய சூழ்ச்சியால் குற்றவாளியாக அரசன் முன் அறிவிக்கப்பட்டான். ஊழ்வினை வசத்தால் பாண்டியனைக் கெடுமதி தூண்ட அவன் வஞ்சகரது மொழியை நம்பி உத்தமன் கோவலனைக் கள்ளன் என நினைத்துக் கள்வனை வெட்டக் கொண்டுவாருங்கள் என்பதற்குப் பதிலாக, கள்வனை வெட்டிக் கொன்று வாருங்கள் என நா குளறிப் பேச, பணியாளரும் அவ்வாறே இயற்றினர். நடந்த காரியத்தை உணர்ந்து பத்தினி பரிதபித்து இமையவருலகில் இறுதியிற் சேர்ந்தாள்.

சொல்	பெயர்	திணை	பால்	எண்	இடம்	வேற்றுமை.
காவிரிப் பூம்பட்டினத்தில்	இடம்	அஃறிணை	ஒன்றன்	ஒருமை	படர்க்கை	7-ம்
வணிகன்	ஜாதி	உயர்திணை	ஆண்	,,	,,	6-ம் (உடைய)
மகன்	முறை	உயர்திணை	ஆண்	,,	,,	1-ம்

வினைச்சோல். தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். வினைச்சொல் முற்று என்றும், எச்சம் என்றும் இரு வகைப்படும். (முற்று=முடிவு பெற்றது. எச்சம்=முடிவு பெறாதது.)

மணிமேகலை மறைந்தாள். இவ்வாக்கியத்தில் மறைந்தாள் என்னும் சொல் மணிமேகலை செய்த வினையை முடித்துக் காட்டுவதால் அஃது வினைமுற்று என்று சொல்லப்படுகிறது.

எச்சம் இருவகைப்படும். (1) பெயரெச்சம், (2) வினையெச்சம். பெயரெச்சம் ஒரு பெயரையும், வினையெச்சம் ஒரு வினையையும் தழுவுகிறது

படித்த பையன் சிரித்து உட்காந்தான். படித்த என்னும் சொல்லைத் தனியாகப் பார்ப்போமாயின், அது எவ்வித முடிவும் காட்டாது நிற்கின்றது: வாக்கியத்திலோ பையன் என்னும் பெயரைத் தழுவி நிற்கிறபடியால் அது பெயரெச்சம் என்று சொல்லப்படும். அவ்வாறே சிரித்து என்னும் பதமும் தன்னில் முடியாதபடி, வாக்கியத்திலுள்ள உட்காந்தான் என்னுங் வினைமுற்றைச் சேர்ந்து முடிவதால் வினையெச்சம் என்று சொல்லப்படும்.

வினைமுற்று. ஒரு வினைச்சொல் தன் பொருளை முடித்து நிற்பது.

வினையெச்சம். ஒரு வினைச்சொல் தன் பொருளை முடியாது பிறிதொரு வினையைத் தழுவி முடிய நிற்பது.

பெயரெச்சம். ஒரு வினைச்சொல் தன்னில் முடியாது ஒரு பெயரைத் தழுவி முடிய நிற்பது.

பகுபத இலக்கணம்.

பகுதி, விகுதி, இடைநிலை.

பகுதி. வினைச்சொற்களின் முதலில் நின்று தொழிலை உணர்த்தும் சொற்கள் பகுதியாம். (இவையே முன்னிலையில் ஏவும்போது ஏவல் வினைமுற்று என்று சொல்லப்படும். பகுதி முதனிலை என்றும் சொல்லப்படும்.

சொல்	பகுதி	உணர்த்தும் தொழில்
நடந்தான்	நட	நடத்தல்
வந்தான்	வா	வருதல்

" தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும்." (21)

விகுதி. வினைச் சொற்களின் ஈற்றில் நின்று திணை, பால், எண், இடத்தை உணர்த்தும் சொற்கள். இது கடைநிலை என்றும் அழைக்கப்படும்.

சொல்	விகுதி	திணை	பால்	எண்	இடம்
படித்தனன் படிக்கிறான்	அன் ஆன்	உயர்	ஆண்	ஒருமை	படர்க்கை
படித்தனள் படிக்கிறாள்	அள் ஆள்	உயர்திணை	பெண்	ஒருமை	படர்க்கை
நடந்தனர் நடந்தார் நடப்ப நடமார்	அர் ஆர் ப மார்	உயர்திணை	பலர்	பன்மை	படர்க்கை
செய்தது ஆயிற்று	து று	அஃறிணை	ஒன்றன்	ஒருமை	படர்க்கை
உண்டு	டு	2 திணை	5 பால்	2 எண்	3 இடம்
நடந்தன	அ	அஃறிணை	பலவின்	பன்மை	படர்க்கை
செய்தனென் செய்தேன் செய்வல் செய்வன்	என் ஏன் அல் அன்	உயர்திணை	பொது	ஒருமை	தன்மை
நடப்பம் நடப்பாம் நடப்பெம் நடப்பேம் நடப்போம்	அம் ஆம் எம் ஏம் ஓம்	பொது	பொதுப்பால்	பன்மை	தன்மை
சென்றனை சென்றாய் சேறி	ஐ ஆய் இ	பொது		ஒருமை	முன்னிலை

நடமின் நடந்தனிர் நடந்தீர்	மின் இர் ஈர் }		பன்மை	முன்னிலை
நடவா	ஆ }	எதிர்மறை	பன்மை	படர்க்கை
மருல் அழேல்	ஆல் ஏல் }	எதிர்மறை	ஒருமை	முன்னிலை

இடை நிலை. வினைச்சொல், பெயர்ச்சொற்களில் பகுதி விகுதிகட்கு இடையில் நிற்பது இடைநிலையாம். பின் வரும் உதாரணத்தால் இடைநிலையை அறிக.

சொல்.	பகுதி.	இடைநிலை.	விகுதி.
சென்ருன்	செல்	ற்	ஆன
செல்கிருன்	செல்	கிறு	ஆன்
செல்வான்	செல்	வ்	ஆன்

மேற்கண்ட உதாரணத்தில், செல் என்னும் பகுதி செல்லுகிற தொழிலையும், ஆன் என்னும் விகுதி ஆண் பாலையும் உணர்த்த, இடைநிலை எதை உணர்த்துகிறது என்பதை யோசியுங்கள்.

ற் இடைநிலை பெற்ற சென்ருன் என்னும் சொல் அது முற்காலத்தில் நடந்ததையும், கிறு இடைநிலை பெற்ற செல்கிருன் என்னும் சொல் அது தற்காலம் நடக்கிறதையும், வ் விகுதிபெற்ற செல்வான் என்னும் சொல் அக்காரியம் பிற்காலம் நடைபெறுவதையும் அறிவிக்கின்றன வல்லவா? இதனுல் இடைநிலை காலங் காட்டும் என அறிகிரேம். முற்காலம், தற்காலம், பிற்காலம் என நாம் கூறியவை இலக்கண மரபில் முறையே இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் எனச் சொல்லப்படும்.

இறந்தகாலம்=முன்னமே கடந்த காலம்.

நிகழ்காலம்=நடந்துகொண்டிருக்கிற காலம்.

எதிர்காலம்=வருங் காலம்.

பின்வரும் உதாரணங்களிலிருந்து ஒவ்வொரு காலத்தையும் குறிப்பிடும் இடைநிலைகளைக் கண்டு கொள்க,

பகுதி.	இடைநிலை.	விகுதி.	
வா	த்	ஆன்	இவ்வினைகளில் த், ட், ற், இன் இறந்த காலத்தைக் காட்டி நின்றன.
காண்	ட்	ஆன்	
செல்	ற்	ஆள்	
பாடு	இன்	ஓம்	
செய்	கிறு	ஆன்	கிறு, கின்று, ஆனின்று நிகழ்காலத்தைக் காட்டின.
செய்	கின்று	ஆன்	
செய்	ஆனின்று	ஆன்	
உண்	ப்	ஆன்	ப், வ் எதிர்காலத்தைக் காட்டின.
செய்	வ்	ஆன்	

த, ட, ற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்தகாலந்தநம் தொழில் இடைநிலை. (22)

ஆநின்று, கின்று, கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை யிடைநிலை. (23)

ப, வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலையாம். (24)

[ஐம்பாலில், மூவிடங்கட்கும் வினைமுற்றுகள் உதாரணமாகக் கொடுத்து மூன்று காலத்தையும் தோன்றும்படி செய்து, பகுபத இலக்கண விளக்கத்தால், இடைநிலை காலத்தைக் காட்டி நிற்பதை ஆசிரியர்கள் மாணுக்கர்கட்கு விளக்குவார்களாக]

பகுதி மெய் இரட்டித்துக் காலங் காட்டுவதுமுண்டு. (உ-ம்.) புகு + ஆன் = புக்கான் : விடு + ஆன் = விட்டான்.

தன்வினை, பிறவினை. தானே செய்கின்ற ஒரு வினை தன்வினை, ஒன்றைப் பிறரால் செய்விக்கும் வினை பிறவினை.

நான் ஓடினேன்—இதில் ஓடினது தன்னையே குறிப்பதால் தன்வினை எனப்படும்.

நான் ஓட்டுவித்தேன்—இதில் நான் பிற ஒன்றை ஓடச்செய்தேன் எனப் பொருள் தரலால் பிறவினை.

தன்வினைப் பகுதிகள் வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதி பெற்றுப் பிறவினையாகின்றன.

(உ-ம்.) செய்—செய்வி, உண்—உண்பி, போ—போக்கு, பாய்—பாய்ச்சு, உருள்—உருட்டு, நட—நடத்து, எழு—எழுப்பு, பயில்—பயிற்று.

இனவையன்றி (1) தன்வினையிலுள்ள மெல்லொற்று வல்லினமாக மாறியும், (2) பகுதி மெய் இரட்டித்தும் பிறவினையாதலுண்டு.

(உ-ம்.) (1) அறுந்து—அறுத்து, திருந்து—திருத்து, (2) ஓடு—ஓட்டு, உருகு—உருக்கு.

பகுபத இலக்கணம்.

பதங்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் உறுப்புக்களுக் கியைந்தவாறு பிரித்துக் காட்டுவது பகுபத இலக்கண மென்னப்படும்.

பகுதி.	சந்தி.	இடைநிலை.	சாரியை.	விகுதி.
உண்	—	ட்	—	ஆன் = உண்டான்.
உண்	—	ட்	அன்	அன் = உண்டனன்.
பார்	த்	த்	அன்	அன் = பார்த்தனன்.
வீழ்	*த்	த்	அன்	அன் = வீழ்ந்தனன்.

* த் ந் என மாறியது விகாரம்.

பகுதி, விகுதி, இடைநிலைகளை முதலில் அமைத்துப் பின்னர் சாரியை, சந்தி காண்க.

பெயரெச்சம். ஒரு வினைச்சொல் தன்னில் முடியாது ஒரு பெயரைக்கொண்டு முடியுமாயின் பெயரெச்சம் என முன்னர்க் கூறியிருக்கிறோம். இப் பெயரெச்சங்கள் மூன்று காலத்திலும் வருவதோடு செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் ஆறையும் தெரிவிக்கும்.

(உ-ம்.) வாசித்த பள்ளிக்கூடம்—இறந்தகாலம்
வாசிக்கிற ,, —நிகழ்காலம்
வாசிக்கும் ,, —எதிர்காலம்
படித்த பையன்—செய்பவனைக் காட்டுகிறது
,, புத்தகம்—கருவி
,, பள்ளி —இடம்
,, படிப்பு —தொழில்
,, வருடம் —காலம்
,, பாடம் —செயப்படுபொருள்

படித்த, படிக்கிற, படிக்கும் என்பன போன்ற மூன்று விதங்களும் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் என்று இலக்கண முறையில் சொல்லப்படும்.

செய்த, செய்கின்ற, செய்யும் என் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வதாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே. (25)

பெயரெச்சங்களில் இடைநிலை இறந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் காட்டி நிற்கும். இருகாலங்கட்கும் விகுதி அ ஆகும்.

செய்+த்+அ செய்+கின்று+அ	த், கின்று என்பன முறையே இறந்த, நிகழ் கால இடை நிலைகள். அ பெயரெச்ச விகுதி.

உம் என்பதே எதிர் காலம் காட்டும் விகுதியாகும்.
செய்யும் மனிதன்—உம் எதிர்காலம்.

வினையெச்சம். ஒருவினைச்சொல் தன்னில் முடியாது ஒரு வினையை, வினையெச்சத்தை, பெயரெச்சத்தை, தொழிற்பெயரை அல்லது வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிவது.

(உ-ம்.) படித்துத் தேறினான்—வினை முற்றில் முடிந்தது.
படித்துத் தேறி—வினை எச்சத்தில் ,,
படித்துத் தேறிய—பெயரெச்சத்தில் ,,
படித்துத் தேறுதல்—தொழிற்பெயரில் ,,
படித்துத் தேறினவன்—வினையாலணையும் பெயரில் முடிந்தது.

வினையெச்ச விகுதிகள்.

படித்து நின்றான்	உ	இறந்த கால வினை எச்ச விகுதிகள்
பாடி நின்றான்	இ	
போய் நின்றான்	ய்	
உண்ண நின்றான்	அ	நிகழ்கால வினை எச்ச விகுதி.

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச்சம்மே. (26)

உண்ணின் நன்று	இன்	எதிர்கால வினை எச்ச விகுதிகள்.
உண்டால் நன்று	ஆல்	
உண்டக்கால் நன்று	கால்	
உண்பான் வந்தான்	பான்	
செய்வான் வந்தான்	வான்	
உண்பாக்குவந்தான்	பாக்கு	

எதிர்மறை. வினை உடன்பாடு என்றும், எதிர்மறை என்றும் இருவித மாகும். உடன்பாடாவது உடன்பட்டுச் செய்தல். எதிர் மறையாவது எதிராக மறுத்துச் சொல்லுதல்.

நான் உண்டேன்—உடன்பாடு.
நான் உண்ணேன்—எதிர்மறை.

எதிர்மறை வினைமுற்று, வினை எச்சம், பெயரெச்சம் என்னும் மூவித வினைகளிலும் கொள்ளப்படும்.

செய்வேன்	—	உடன்பாட்டு வினைமுற்று
செய்யேன்	—	எதிர்மறை ,,
செய்த	—	உடன் பாட்டுப் பெயரெச்சம்
செய்யாத	—	எதிர்மறை ,,
செய்து	—	உடன் பாட்டு வினை எச்சம்
செய்யாது	—	எதிர்மறை ,,

எதிர்மறைப் பெயரெச்ச இடைநிலை ஆ. விகுதி அ.

(உ-ம்.) உண் + ஆ + (த்) அ = உண்ணாத. (த் எழுத்துப் பேறு)

பெயரெச்சம் விகுதி கெட்டு எதிர்மறைப் பொருளை உணர்த்தும் போது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்று சொல்லப்படும்.

(உ-ம்.) உண்ணா குதிரைகள், வாடா மலர்கள்.

உண்ணாத, வாடாத என்பனவற்றில் ஆ எதிர் மறை இடைநிலை. த் எழுத்துப் பேறு. அ விகுதி. எழுத்துப் பேறும் விகுதியும் மறைந்து உண்ணா, வாடா என்றாயின.

இஃதன்றி ஆ எதிர்மறை விகுதி. உண் + ஆ = உண்ணா. வாடு + ஆ = வாடா எனினும் ஒக்கும்.

எதிர்மறை வினை எச்சமாவது தொழிலை நடவாது மறுத்துக் கூறும் வினை எச்சமே.

உண்ணாமல் நின்றான்	மல், ஏ, து, மை என்னும்
உண்ணாமே ,,	விகுதிகளைச் சேர்த்து ஆ என்னும்
உண்ணாது ,,	இடைநிலை எதிர்மறை
உண்ணாமை நன்று	வினைஎச்சங்காட்டிற்று.

உண்ணாமல் நின்றான் என்பதை உண்ணா நின்றான் எனக்கூறுமிடத்து 'உண்ணா' ஈறுகெட்ட எதிர் மறைவினை எச்சம் என்று சொல்லப்படும்.

இடைச்சொல்.

தனித்து இயங்கும் ஆற்றலின்றி, பெயர்ச்சொல், வினைச்சொல் லுடன் இடப்பெற்று வழங்கப்படும் சொற்கள் இடைச்சொற்கள் என அறிவித்திருக்கிறோம். அவையாவை? (1) வேற்றுமை உருபுகள், (2) விகுதிகள், (3) இடைநிலைகள், (4) சாரியைகள், (5) உவமை உருபுகள், (6) சுட்டு, (7) வினா, (8) இசைநிறை, (9) அசைநிலை, (10) பொருளைக் குறிப்பால் தருவன.

விளக்கம். (1) வேற்றுமை உருபுகள். இரண்டிலிருந்து எட்டு வரையுமுள்ளதை முன்னர்த் தெரிவித்திருக்கிறோம். (2) விகுதிகள். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், வினைமுற்று, வினைஎச்சம், பெயரெச்ச விகுதிகளையும் வினைசொற் பகுதியில் காட்டியுள்ளோம். (3) இடைநிலை. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், எதிர்மறை காட்டும் இடைநிலைகளையும் அறிவித்திருக்கிறோம். (4) சாரியை. மரம்+ஐ=மரத்தை, பல+ஐ=பலவற்றை செல்+ற்+அன்+அன்=சென்றனன். இச்சொற்களுடே அத்து, அற்று, அன் என்னும் சொற்கள் சார்ந்து வருகின்றன அல்லவா? இவை போல்வன சாரியை என்னப்படும். (5) உவமை உருபுகள். புலி என நின்றான். குருவிபோல கூப்பிட்டான். சிங்கம் போன்ற தோற்றம். சந்திரன் ஒத்த அழகு இவற்றிலுள்ள என, போல, போன்ற, ஒத்த முதலிய உவமிப்புக்காக இடைநிற்கும் சொற்கள் உவமை உருபுகள் என்னப்படும். (6) சுட்டு. எழுத்துக்கள் வார்த்தை முன்னின்று பெயரைச் சுட்டிக் காட்டுவதுண்டு. அம்மனிதன், இம்மனிதன், உவ்வீடு. அ, இ, உ என்னும் எழுத்துக்கள் அந்த, இந்த, உந்த எனப்பொருள் தந்து மனிதனையும் வீட்டையும் சுட்டிக்காட்டி நிற்பதால் அவை இடைச்சொல்லாம். (7) வினா. சுட்டெழுத்துக்கள் போன்றே வினா எழுத்துக்களும் பொருள் தந்து பெயர்களை அடுத்து நிற்பதால் யா, ஆ, ஓ, எ முதலியவையும் இடைச்சொற்களாம். (8) இசைநிறை. "கள்வனும் நானுமல்ல, கபடனும் நானுமல்ல" இவ்வாக்கியத்தில் உம், உம் என்பவை பாடற்கு இனிய ஓசை தருவதற்காகவே வந்து இடை நிற்பதால் இவைபோன்ற இசைக்காக வரும் சொற்கள் இடைச்சொற்களாகும். (9) அசைநிலை. இலக்கண அமைப்பிற்காகத் தோன்றும் பொருளற்ற சொற்களும் இடைச்சொற்களாம். மற்று இனி உரைப்பதென்னே, நான் சொல்வதைக் கேண்மியா. இவை போன்ற ஓ, ஓ, மாதோ, அன்று, அரோ, மதி போன்றவை. (10) குறிப்பு. சள சள; மொள் மொள்; தட தட; புஸ் புஸ்; சட்டென்று; இம் என்னுமுன்; ஆஹா! அம்ம! முதலிய சமயத்திற்கேற்பப் பொருள் காட்டி நிற்பவையும் இடைச்சொல்.

உரிச்சொல். தனித்து இயங்காது பெயர் வினைகளுடன் சேர்ந்து நின்று அவற்றுக்குரிய குணத்தைக்கூறும் சொல் உரிச்சொல்.

சில உரிச் சொற்கள். சால, உறு, தவ, நனி, கூர், கழி. இவை "மிகுதி" எனப்பொருள் தந்து நிற்கும்.

உ-ம். சாலப்பலர், உறுபுகழ், தவப்பல, நனிபேதை,
கூர்மனம், கழிபெருங்காதல்.

"சால, உறு, தவ, நனி, கூர், கழி மிகல்." (27)

கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, வாசனை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு எனப் பொருள் தரும். உ-ம்:—

கடிநகர், கடிவேல், கடிமாலை, கடிமார்பன், கடிப்பேய், கடியரண், கடிசென்றான், கடிகாற்று, கடிமணம், கடிமுரசு, கடிமது, கடிவினை, கடிமிளகு

புணரியல்.

சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தும் முறை இங்குக் கூறப்படுகிறது. புணர்ச்சி=பொருந்துதல்.

நிலைமொழி வருமொழி. முதலில் நிற்பது நிலைமொழி என்றும், பின்னர் வந்து தோன்றும் மொழி வருமொழி என்றும் கூறப்படும்.

இலக்கணம் படிப்பேன். இவ்வாக்கியத்தில் முதலாவது நிற்கும் 'இலக்கணம்' என்னும் பதம் நிலைமொழி. இரண்டாவது வந்த 'படிப்பேன்' என்னும் மொழி வருமொழியாம். இவ்வாறுள்ள நிலைமொழி வருமொழி பொருந்தும் முறைகள் இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இரண்டு.

இயல்புப் புணர்ச்சி. நிலைமொழியுடன் வருமொழி சேரும் போது எழுத்துக்களில் எவ்வித மாறுபாடுமுண்டாகாது இயல்பாகவே இருத்தல்.

உ-ம். பாடம்+படி=பாடம்படி
பால்+இனிது=பாலினிது

விகாரப் புணர்ச்சி. நிலைமொழியுடன் வருமொழி சேரும்போது, (1) புதிய எழுத்துக்கள் தோன்றுதல், (2) ஒரு எழுத்து மற்றொன்றாகத் திரிதல், (3) இருந்த எழுத்து கெடுதல் முதலிய வித்தியாசங்களைப் பெறுதல்.

உ-ம். (1) தோன்றல்—கல்வி+களஞ்சியம்=கல்விக்களஞ்சியம்.
(2) திரிதல்—பால்+குடம்=பாற்குடம்
(3) கெடுதல்—குணம்+சீலன்=குணசீலன்
மூன்று விகாரமும்—பனை+காய்=பனங்காய்

பனை என்பதின் ஈற்று ஐ கெட்டு பன் என நின்று அம்சாரியை தோன்றி பனம் ஆகி, பின்னர் ம், ங் ஆகத்திரிந்து பனங்காய் என வந்தது.

"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிக்கு மூவிடத்து மாகும்." (28)

புணர்ச்சி.

பெரும்பாலும் நிலைமொழி ஈற்றில் உயிர் நின்று வருமொழி முதலில் க, ச, த, ப, தோன்றுமாயின் அவை இரட்டிக்கும்.

உ-ம். மிக + கருணை = மிகக்கருணை
ஆட + சென்றான் = ஆடச்சென்றான்
வாழை + பழம் = வாழைப்பழம்
ஓடி + குதி = ஓடிக்குதி.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
க, ச, த, ப, மிகும்..... .... (29)

நிலைமொழி ஈற்று மெய்மேல் வருமொழி ஆரம்ப உயிர் சேர்வது இயல்பே.

உ-ம். பாடம் + எது = பாடமெது
நன்றாய் + இருக்கிறது = நன்றாயிருக்கிறது.

" உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே " (30)

நிலைமொழி ஒரு குறிலும் ஒரு மெய்யுமாக இருக்க, வருமொழி முதலில் உயிர் வருமாயின் நிலைமொழி ஈற்றுமெய் இரட்டிக்கும்.

பல் + உடைந்தது, பல் ல் + உடைந்தது = பல்லுடைந்தது
கண் + அகன்ற, கண் ண் + அகன்ற = கண்ணகன்ற

தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். (31)

ஆ, மா, கோ என்னும் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போது ன் சாரியை பெறும்.

ஆ + ஐ = ஆனை ; மா + ஐ = மானை ; கோ + ஐ = கோனை.

ஆ, மா, கோ, ன அணையவும் பெறுமே (32)

விதியில் அணையவும் பெறுமே என்றதால் அணையாமலும் வரலாமெனக் கொள்க. உ-ம் :— ஆவை, மாவை, கோவை.

எ என்னும் வினு வெழுத்து, அ, இ, உ என்னும் மூன்று சுட்டு, இவைகட்கு முன் வருமொழியில் உயிர் எழுத்தாவது, யகரமாவது முதல் நின்றால் வ் தோன்றும். வல்லினம், மெல்லினமாகிய பிறவரின் அவையே தோன்றும். சுட்டு நீளுமாயின் ய தோன்றும்.

எ + அரசன் = எவ்வரசன்
அ + அரசன் = அவ்வரசன்
இ + அரசன் = இவ்வரசன்
உ + அரசன் = உவ்வரசன்
எ + யானை = எவ்யானை
அ + யானை = அவ்யானை

எ + குதிரை = எக்குதிரை
அ + மனிதன் = அம்மனிதன்
இ + ஞாயிறு = இஞ்ஞாயிறு
எ + சேனை = எச்சேனை
அ + புலி = அப்புலி
அ + இடை = ஆயிடை
சுட்டு நீள, யகரம் தோன்றிற்று.

" எகரவினு முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வ வ்வும்,
பிறவரின் அவையும், தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே (33)

நிலைமொழி ஈற்றில் இடைச்சொற்களாகிய ஏ, ஓ, நிற்குமாயின் வருமொழி முதலெழுத்து இரட்டாது.

அவனே + சென்றான் = அவனே சென்றான்
அவனோ + கண்டான் = அவனோ கண்டான்.

" இடைச்சொல் ஏ, ஓ முன்வரின் இயல்பே " (34)

நிலைமொழி யா என நிற்பினும், ஆ, ஓ, ஏ என்னும் வினாவாக நிற்பினும், விளியாக நிற்பினும் வருமொழி முதல் எழுத்து இரட்டாது, இயல்பாகவே நிற்கும்.

உ-ம். யா + சிறியன = யா சிறியன
செய்வாயா + கந்தா = செய்வாயா கந்தா
இராமா ! + படி = இராமா படி
அவனா + கண்டான் = அவனா கண்டான்
அவனோ + கண்டான் = அவனோ கண்டான்
அவனே + கண்டான் = அவனே கண்டான்.

" ஈற்று யா, வினா, விளிப்பெயர் முன் வலி இயல்பாம் " (35)

செய்யிய என்னும் வாய்பாட்டு வினைஎச்சம், பல்வகைப் பெயரெச்சங்கள், வினைமுற்று, 6-ம் வேற்றுமை உருபு, அஃறிணைப் பன்மை, அம்ம இவைகட்கு முன் வருமொழி முதலெழுத்து இயல்பாகவே நிற்கும்.

உண்ணிய + குதிரைகள் = உண்ணிய குதிரைகள்
உண்ட + குதிரை = உண்டகுதிரை—தெரிநிலைப்பெயர் எச்சம்.
உண்டு + போனான் = உண்டுபோனான் ,, வினை எச்சம்
பெரிய + புத்தகம் = பெரிய புத்தகம்—குறிப்புப்பெயர் எச்சம்
உண்டன + குதிரைகள் = உண்டன குதிரைகள். தெரிநிலைவினைமுற்று
வாழ்க + பல்லூழி = வாழ்க பல்லூழி—வியங்கோள் வினைமுற்று
எனது + குடை = எனது குடை—6-ம் வேற்றுமை உருபு
சில + கோடுகள் = சில கோடுகள்—அஃறிணைப்பன்மை
அம்ம + தேவா = அம்ம ! தேவா—அம்ம

செய்யிய எனும் வினைஎச்சம், பல்வகைப்
பெயரினெச்சம், முற்று, ஆறன் உருபு,
அஃறிணைப்பன்மை, அம்ம, முன் இயல்பே " (36)

பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் மெய்எழுத்தை ஈற்றில் பெற்று நிலைமொழியாக நிற்பின், வருமொழியில் வரும் வல்லினம் இரட்டிக்காது. இயல்பாகவே இருக்கும்.

நான் + சிறியன் = நான் சிறியன்
ஆண் + குறியன் = ஆண் குறியன்
மன்னன் + பெரியன் = மன்னன் பெரியன்

உயர்திணைப் பொதுப்பெயர்கள் நிலைமொழியாக நின்று ஈற்றில் உயிர் எழுத்தையாவது, ய், ர் எழுத்துக்களையாவது பெற்றிருப்பினும் வருமொழி ஆரம்ப வல்லினம் மிகாது.

நம்பி + குரிசில் = நம்பி குரிசில்
சாத்தி + சென்றாள் = சாத்தி சென்றாள்
தாய் + கொடுத்தாள் = தாய் கொடுத்தாள்
தாயார் + கொடுத்தார் = தாயார் கொடுத்தார்

குறிப்பு :—இவற்றுள் சில விகாரப்படுவதும் உண்டு.
குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம்
கபிலன் + பரணர் = கபிலபரணர்.

" பொதுப்பெயர், உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம், ஆவி, ய, ர முன்
வன்மை மிகா, சில விகாரமாம் உயர்திணை. (37)

பல, சில என்னும் சொற்கள் தொடர்ந்துவரின் (1) இயல்பாகவும் நிற்கும், (2) வருமொழி ஆரம்ப மெய் இரட்டித்தும் நிற்கும், (3) நிலை மொழி ஈற்று அ நீங்க லகரம் ற கரமாகவும் மாறும், (4) வருமொழியாக வேறு வார்த்தைகள் வரின் பிற விகாரங்களையும் பெறும்.

(1)	பல + பல = பல பல	சில + சில = சில சில
(2)	பல + பல = பலப்பல	சில + சில = சிலச்சில
(3)	பல + பல = பற்பல	சில + சில = சிற்சில
(4)	பல + கலை = பலகலை, பல்கலை.	பல + நாள் = பன்னாள்
	சில + கலை = சிலகலை, சில்கலை.	சில + நாள் = சின்னாள்

" பல சில எனும் இவை தம்முன் தாம்வரின்
இயல்பும், மிகலும், அகரம் ஏக
லகரம் றகர மாகலும், பிறவரின்
அகரம் விகற்ப மாத லும் உள, பிற." (38)

ஒருதிசைப் பெயருடன் மற்றொரு திசைப்பெயராவது வேறு பெயராவது சேருமாயின், (1) நிலைமொழி ஈற்று எழுத்தும், அயலி லுள்ள க என்னும் மெய்யும் கெடும். (2) றகரம் ன, ல வாகத்திரியும்.

(1) வடக்கு+கிழக்கு=வடகிழக்கு
(2) தெற்கு+மேற்கு=தென்மேற்கு
மேற்கு+காற்று=மேல்காற்று

" திசையோடு திசையும் பிறவும் மேவின்
நிலையீற்று உயிர்மெய், க ஒற்று நீங்கலும்
றகரம் ன, ல வாத்திரிதலுமாம், பிற." (39)

நிலைமொழி யீற்றுக்குற்றியலுகரம், (1) வருமொழி ஆரம்பத்தில் உயிர் இருக்குமாயின் தனது மெய்யெழுத்தை விட்டு விலகிக் கொள்ளும். (2) வருமொழி ஆரம்பத்தில் யகரம் இருக்குமாயின் இ என மாறும். (3) முற்றியலுகரமும் இவ்வாறு சில சமயங்களில் வரும்.

(1) பாக்கு+இல்லை. பாக்க்+இல்லை=பாக்கில்லை
(2) பாக்கு+யாது=பாக்கியாது
(3) கதவு+யாது=கதவியாது.

" உயிர் வரின் உ குறள் மெய்விட்டோடும்
ய வரின் இ யாம், முற்றும் அற்று ஒரோவழி." (40)

(1) நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ முதலிய உயிர்கள் இருந்து, வருமொழி ஆரம்பத்திலும் உயிர் இருக்குமாயின் இடையில் ய் தோன்றும். (2) நிலைமொழியில் இம்மூன்றும் நீங்கிய மற்ற உயிர்கள் இருப்பின் இடையில் வ் தோன்றும். (3) நிலைமொழி யீற்றில் ஏ இருப்பின் ய், வ், இரு மெய்களில் எதுவும் தோன்றலாம்.

(1) மணி+அழகு=மணியழகு
தீ+அழகு=தீயழகு
யானை+அழகு=யானையழகு
(3) சே+அடியார்=சேயடியார்
(2) குண+அழகன்=குணவழகன்
பலா+ஆடிற்று=பலாவாடிற்று.
சிறு+அகப்பை=சிறுவகப்பை
(3) சே+அடியார்=சேவடியார்

" இ, ஈ, ஐ வழி ய வும், ஏனைய
உயிர்வழி வ வும், ஏ முன் இவ் இருமையும்,
உயிர் வரின் உடன்படு மெய் என்றாகும். (41)

உயிருடன் உயிர் புணரும்போது இடையில் தோன்றிய யகர வகரங்களை உடன்படு மெய் என்பர்.

மகர ஒற்றை ஈற்றுடைய சொற்கள் வருமொழியுடன் புணரும் போது மகர ஒற்றுக்கெட்டு, அங்கு நிற்கும் உயிர் ஈற்றுக்குரிய விதிப்படி சேர்வதும், வருமொழி முதலில் வல்லினம் வரின் இன மெல்லினம் தோன்றுவதும் உண்டு.

வட்டம்+ஆழி=வட்டவாழி. ம் கெட்டு, முன் உயிர் புணர்ந்தது
வட்டம்+கல்=வட்டக்கல். ம் கெட்டு உயிர் முன் மெய் புணர்ந்தது
தம்+கை=தங்கை. மகரம் வல்லினத்திற்கு இனமாயிற்று.

"மவ்வீறு ஒற்று ஒழிந்து உயிர் ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்." (42)

மையீற்றுப் பண்புப் பெயர்களுடன் பிற வார்த்தைகள் சேரும் போது (1) நிலைமொழி ஈற்றுமை கெடுகிறது. (2) இடையிலுள்ள உ, இகரமாக மாறுகிறது. (3) நிலைமொழியின் முதலிலுள்ள குறில் நெடிலாகிறது. (4) முதலிலுள்ள அகரம் ஐகாரமாகிறது. (5) தன்னிலுள்ள மெய் இரட்டிக்கிறது. (6) மை விகுதிக்கு முன் நின்ற மெய் வேறொரு மெய்யாகத்திரிகிறது. (7) இன எழுத்துக்கள் தோன்றுகின்றன. (8) வேறு பிற விகற்பங்களும் நடைபெறும்.

சிறுமை+பொருள்=சிறுபொருள்.	விகற்பம்	1
பெருமை+ஆர்=பெரியார்	—	1, 2
பசுமை+இ=பாசி	—	1, 3
பசுமை+கூழ்=பைங்கூழ்	—	1, 8, 4, 7
சிறுமை+ஆறு=சிற்றாறு	—	1, 5
வெம்மை+அவன்=வெய்யவன்	—	1, 6, 5

"ஈறுபோதல், இடை உகரம் இ ஆதல்,
ஆதி நீடல் அடி அகரம் ஐ ஆதல்,
தன் ஒற்று இரட்டல், முன்னின்ற மெய்த்திரிதல்,
இனமிகல், இனையவும் பண்பிற்கியல்பே." (43)

அகம் என்னும் மொழியுடன் செவி, கை என்பன சேரும்போது, இடையிலுள்ள க கெடுகின்றது.

அகம்+செவி=அஞ்செவி. அகம்+கை=அங்கை.

"அகம் முன்னர் செவி, கைவரின் இடையன கெடும்." (44)

கீழ் என்னும் மொழியுடன் வல்லின ஆரம்ப வருமொழி தோன்றின் விகற்பித்து நிற்கின்றது.

கீழ்+குலம்=கீழ் குலம். கீழ்+குலம்=கீழ்க்குலம்.

"கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்." (45)

தெங்கு என்னும் மொழியுடன் காய் என்னும் வருமொழி சேரின் தெங்கு என்பதின் முதற் குறில் நெடிலாகி, ஈற்று உயிர் மெய்யும் கெடுகிறது.

தெங்கு+காய்=தேங்காய்.

"தேங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய்வரின்." (46)

பூ என்னும் பெயருக்கு முன்வரும் வல்லினங்கள் மெல்லின மாகத் திரிந்தும் திரியாமலும் வரும்.

பூ+சோலை=பூச்சோலை, பூஞ்சோலை
பூ+கொடி=பூக்கொடி, பூங்கொடி

"பூப் பெயர் முன்இன மென்மையும் தோன்றும்" (47)

அறுசுவைகளுள் ஒன்ருகிய புளி என்னும் நிலைமொழி முன்னர் வல்லினம் வரின் மெல்லினமாகத் திரிதலும் உண்டு.

புளி+கறி=புளிக்கறி, புளிங்கறி
புளி+தயிர்=புளித்தயிர், புளிந்தயிர்

"புளிப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்." (48)

Form—V.

எழுத்திலக்கணம்.

சுட்டெழுத்து. அ, இ, உ இம் மூன்று எழுத்துக்களும் வார்த்தைக்கு முதலில் நின்று ஒன்றைச் சுட்டிக் காட்டுமாயின் சுட்டெழுத்து என அறிந்திருக்கிரும். அச் சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவிதப்படும். அகம்=உட்பக்கம், புறம்=வெளிப் பக்கம். சுட்டப்படும் பெயரிற் கலந்தே சுட்டெழுத்து நிற்குமாயின் அது அகச்சுட்டு. அவர், அது, அவை, இவை, உவன். இவற்றின் அ, இ, உ அவ்வார்த்தைகளிலிருந்து பிரியாது நிற்பதைக் கவனிக்கவும். அம் மனிதன், இம் மாடு, உவ் வீடு, இம்மொழிகளில் அ, இ, உ சுட்டப் படும் பொருளுக்கு வெளியில் நிற்கின்றன அல்லவா? மனிதன், மாடு, வீடு என அப்பெயர்களை நாம் சுட்டு நீங்கவும் உச்சரிக்கின்ரும். ஆகவே சுட்டெழுத்துக்கள் ஒரு பெயருக்குப் புறத்தில் நின்று சுட்டிக் காட்டுமாயின் அவை புறச்சுட்டு என்றழைக்கப்படும். [அ தூரத்தி லுள்ளதையும், இ சமீபத்திலுள்ளதையும், உ மத்தி, மேல், கீழ் பின் உள்ளதையும் குறிப்பிட்டு நிற்கும்.]

சுட்டுப் பொருள் தரா அ, இ, உ சுட்டெழுத்தாகா. அரசன், இரும்பு, உரல் இவற்றின் அ, இ, உ உயிரெழுத்தேயன்றி சுட்டெழுத் தல்ல.

வினு எழுத்து. சுட்டெழுத்துக்களைப் போன்றே வினு எழுத்துக்களும் அகவினு, புறவினு என இருவிதப்படும். வினுவைக் குறிக்கும் எழுத்து வினவிக் கூறும் சொல்லின் அகத்தில் இருப்பின் அகவினு என்றும், புறத்திலிருப்பின் புறவினு என்றும் சொல்லப்படும்.

எவன், யாவன், ஏவன், ஏது, யார், எவண்—அகவினு, எம் மனிதன், யாங்ஙனம், பொன்னனு, பொன்னனே, பொன்னனே—இவற்றில் எ, யா, ஆ, ஓ, ஏ வார்த்தைக்கு முன்னும், பின்னும் புறத்தில் நிற்பதால் புறவினு வாகும்.

இன எழுத்து. ஒலி பிறக்கின்ற இடம், உச்சரிக்கும் முறை, உருவம் இவைகள் ஒத்திருக்கும் எழுத்துக்கள் ஒன்றுக்கொன்று இன எழுத்தாகக் கூறப்படும். கீழே நாம் குறிப்பிட்டிருப்பதை வாசித்து, அவற்றில் இனம் நிலேப்பதை உணர்க.

அ—ஆ, இ—ஈ, உ—ஊ, எ—ஏ, ஒ—ஓ, ஐ—இ, ஔ—உ, க்—ங், ச்—ஞ், ட்—ண், த்—ந், ப்—ம், ற்—ன். ஐ என்னும் எழுத்தைச் சொல்லுங்கள். அ இ என்று நீளுகிறதல்லவா? ஆகவே இ இன எழுத்தாயிற்று. ஔ என்னும் எழுத்தைச் சொல்லுங்கள். அஉ என நீளுகிறது. ஆகவே உ இன எழுத்தாயிற்று. ஒவ்வொரு உயிர்க் குறிலுக்கும் அதற் கயலில் எழுதப்பட்ட உயிர் நெடிலும், ஒவ்வொரு வல்லின மெய்க்கும் அதற் கயலிலுள்ள மெல்லினமெய்யும் இன எழுத்து. அவ்வாறே நெடிலுக்குக்குறிலும், மெல்லினத்திற்கு வல்லினமும் இன எழுத்தாகக் கூறப்படும்.

மாத்திரை. மாத்திரை=கால அளவு. இங்கு இஃது எழுத்துக்கள் ஒலிக்கவேண்டிய அளவைக் குறிக்கும்.

குற்றெழுத்து	மாத்திரை	1
நெட்டெழுத்து	,,	2
மெய் எழுத்து	,,	½
குற்றியலுகம்	,,	½
குற்றியலிகரம்	,,	½
ஆய்தம்	,,	½

ஒரு மாத்திரை அளவென்பது இயல்பாகவே நம்மில் எழக்கூடிய ஒரு கண் இமைத்துடிப்பு அல்லது கை நொடிப்பின் (சொடக்கு) நேரமாம்.

இயல்பெழு மாந்தர் இமை நொடி மாத்திரை. (1)

உயிர்மெய்யெழுத்து அதிலுள்ள உயிரின் மாத்திரை அளவு உச்சரிக்கப்படும். க-இங்கு அ என்னும் உயிர்க்குறில் இருப்பதால் 1 மாத்திரையளவும், கா-இங்கு ஆ என்னும் நெடில் இருப்பதால் 2 மாத்திரையளவும் உச்சரிக்கப்படும்.

(1) பாடும்போதும், (2) பிறரை அழைக்கும்போதும், (3) வியாபார முறையிலும், (4) புலம்பலிலும் எழுத்துக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள மாத்திரை யளவைக் கடந்து நீண்டு ஒலிக்கும்.

(உ-ம்.) 1. ஆராரோ ஆராரோ ஓஓஓஓ.
2. ராமா அஅஅ
3. தயிரோ ஓஓஓ தயிர்
4. ஐயோ ஓஓஓ நான் என்ன செய்வேன்

ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலு
மேவும் இசை, விளி பண்டமாற் றாதியின். (2)

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள். தமிழ்மொழியின் வார்த்தைகள் எந்த எழுத்துக்களை ஆரம்பமாகக் கொள்ளும் என்று இங்குக் கூறப்படுகிறது. பின் வரும் மொழிகளின் முதல் எழுத்தைக் கவனியுங்கள் :—அறிவு, ஆதி, இன்பம், ஈகை, உடை, ஊக்கம், எண், ஏடு, ஐக்கியம், ஒழுக்கம், ஓதல், ஔடதம். இதனால் (1) உயிர் எழுத்துக்கள் 12-ம் மொழிக்கு முதலாக வரும் என அறிகிறோம். (2) க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து இனங்களும் உயிரெழுத்துடன் சேர்ந்து வார்த்தைக்கு முதலில் வரும். (உ-ம்.) கல்வி, சமம், தகுதி, நம்பிக்கை, பண்பு, மலர், வன்மை, யௌவனம், ஞாயிறு, (அங்)ஙனம்.

பன்னீருயிரும், கசதநபமவயஞங
ஈரைந்துயிர்மெய்யும் மொழிமுதல். (3)

(க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங்) இப்பத்து மெய்களில் முதல் ஆறு எழுத்துக்களே 12 உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலாக வரும். உதாரணங்கள் கூறுக :—

வகர மெய்யில் தோன்றிய வு, வூ, வொ, வோ வார்த்தைக்கு முதலில் வரா.

உ ஊ ஒ ஓ அலவோடு வ முதல். (4)

உ-ம்.—வரம், வாரம், விடு, வீடு, வெளி, வேழம், வையம், வௌவால்.

யகர மெய்யில் தோன்றிய யி, யீ, யெ, யே, யை, யொ வார்த்தைக்கு முதலில் வரா.

அ ஆ உ ஊ ஓ ஔ ய முதல். (5)

உ-ம்.—யவனர், யானை, யுகம், யூதம், யோகம், யௌவனம்.

ஞகர மெய்யில்தோன்றிய ஞ, ஞா, ஞெ, ஞொ தவிர மற்ற எழுத்துக்கள் மொழி முதலாக வரா.

அ ஆ எ ஒ வோடுஆகும் ஞ முதல். (6)

உ-ம்.—ஞமலி, ஞாலம், ஞெகிழ், ஞொள்கல்.

ஙகர வருக்கத்தில் ங நீங்கிய மற்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரா. ஙகரமும் சுட்டு, வினு எழுத்துக்களை முன்கொண்டே மொழி முதலாகும்.

சுட்டு யா எகர வினுவழி
அவ்வை ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே. (7)

உ-ம்.—அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்.

மொழிக்கு முதலில் வரா என நாம் குறிப்பிட்ட எழுத்துக்களில் வார்த்தைகள் உண்டா என யோசித்துப் பாருங்கள். க், ச், த், ங், ப், ம் இவற்றோடு 12 உயிரையும் சேர்த்து வார்த்தைக்கு முதலாகக் கொண்டு உதாரணம் கொடுங்கள்.

போலி. போலியைப்பற்றி முன்பு நன்கு சொல்லியிருக்கிறோம். இங்கு அதன் சில முக்கிய பிரிவுகளை விவரமாகச் சுட்டிக் காட்டுகிறோம். வார்த்தையின் பொருள் மாறுபடாது, எழுத்து மாறுபட்டு நிற்பது போலியாகும். இம்மாறுபாடு மொழிக்கு முதலிலும், இடையிலும், நடுவிலும் ஏற்படலாம். மொழி முதல் மாறுபடின் முதற்போலி என்றும், இடை மாறுபடின் இடைப்போலி என்றும், கடை மாறுபடின் கடைப்போலி என்றும் சொல்லப்படும்.

முதற்போலி	பசல் — பைசல் மஞ்சு — மைஞ்சு மயல் — மையல்	முதலிலுள்ள அ; ஐயாக மாறியிருக்கிறது.
இடைப்போலி	அரசு — அரைசு இலஞ்சி— இலைஞ்சி அரயர் — அரையர்	இடையிலுள்ள அ, ஐயாக மாறியிருக்கிறது.
கடைப்போலி	நிலம் — நிலன் அறம் — அறன்	ஈற்று ம், ன் ஆக மாறியது.
	குடல் — குடர் சாம்பல்— சாம்பர்	ல்—ர் ஆக மாறியது.
	மறம் — மறல் திறம் — திறல்	ம்—ல் ஆக மாறியது.
	வண்டு — வண்டர் சிறகு — சிறகர்	குற்றியலுகரம்அர் ஆக மாறியது.

போலியில் சில விதிகள்.

(1) ச, ஞ, ய என்னும் எழுத்துகட்கு முன், வார்த்தையின் முதலிலும், இடையிலும் அகரம் ஐ யாக மாறுகிறது. முதற்போலி, இடைப் போலியின் உதாரணங்களைக் கவனிக்க.

அ, ஐ முதல், இடை ஒக்கும் ச, ஞ, ய, முன். (8)

(2) ஐ, ய் எழுத்துக்களுக்குப் பின் வார்த்தைகளின் இடையில் நகரம் ஞகரமாக மாறும். மைந்நின்ற—மைஞ்ஞின்ற, கைந்நின்ற—கைஞ்ஞின்ற, செய்ந்நின்ற—செய்ஞ்ஞின்ற, நெய்ந்நின்று—நெய்ஞ்ஞின்று, ஐந்நூறு—ஐஞ்ஞூறு, சேய்நலூர்—சேய்ஞலூர்.

ஐகான் யவ்வழி நவ்வோடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மனார் புலவர். (9)

(3) அஃறிணைப் பெயர்களின் மகர இறுதி னகரமாக மாறும். மரம்—மரன், அறம்—அறன்.

மகர இறுதி அஃறிணைப் பெயரில்
னகரமோ டுறழ நடப்பன வுளவே. (10)

(4) அயி, அய் இவை ஐ போல வரும். வைத்தியர்—வயித்தியர், வையம்—வய்யம்.

(5) அவு, அவ் இவை ஔ போல வரும். ஔடதம்—அவுடதம், ஔவியம்—அவ்வியம்.

அ, மூன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐ ஒத்து இசைக்கும். அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔ வோரன்ன. (11)

மற்றப் போலிகளைப் பின்னுள்ள உதாரணத்தை வாசித்துக் கூறுக:—மதில்—மதிள், செதில்—செதிள், பித்து—பிச்சு, வைத்து—வைச்சு, நேயம்—நேசம், கயம்—கசம், ஐந்து—அஞ்சு, உய்ந்தனன்—உய்ஞ்சனன்.

குறிப்பு:—போலியின் எழுத்து மாற்றங்கள் வழக்கவாயிலாய் வந்தவையாகும். அவையன்றி நாம் போலி எனப் புதிய எழுத்து மாற்றம் செய்வோமாயின் அது பிழையேயாகும்.

சொல் இலக்கணம்.

வடசொல். தமிழ் வடிவில் தமிழ் இலக்கியத்திற் கலந்துவரும் சம்ஸ்கிருத மொழிகள் வடமொழி எனச் சொல்லப்படும். தமிழில் வழங்கும் வடமொழிகள் தற்பவம், தற்சமம் என இருவகைப்படும். அவற்றை விளக்குவோம்.

தற்பவம். சம்ஸ்கிருத மொழிகள் உருவிலும் ஒலியிலும் விகார மடைந்து தமிழில் வழங்குவன தற்பவமாகும்.

உதாரணம்:—ஹரி—அரி, ஹர—அரன், ஜய—சயம், ஜ்ஞான—ஞானம், விசேஷ—விசேடம்.

தற்சமம். தமிழ் மொழியிலுள்ள உயிர் வருக்கத்தின் எ, ஒ என்னும் இரண்டும், மெய்வருக்கத்தின் ழ, ற, ன என்னும் மூன்றும் ஆகிய ஐந்து எழுத்துக்களும் வடமொழியிற் கிடையா. இவை ஐந்தும் தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் என்று கூறப்படும். இவ்வாறே ஆரிய மொழிக்கு மட்டும் உரியனவாய், தமிழுக்கு இல்லாதன வாகும் வடமொழிச் சிறப்பெழுத்துக்கள் 22 ஆகும். இத்தகைய சிறப்பு எழுத்துக்களாலன்றி இருமொழிக்கும் பொதுவான எழுத்துக் களால் ஆக்கப்பட்டு எவ்வித விகாரமும் இன்றி ஒரே பொருளில் இரு மொழியிலும் வழங்கப்படும் சொற்கள் தற்சமம் எனப்படும்.

உ-ம் :—கமலம், காரணம், குங்குமம், அமலம். (தற்சமம்—தனக்குச் சமமாக நிற்பது.)

குறிப்பு :—இத்தகைய சில சொற்களைச் சிலர் வடமொழி எனவும் சிலர் தமிழ் மொழியே எனவும் வாதிப்பர்.

பெயர்ச்சொல். காரண இடுகுறிப்பெயர். காரணப் பெயரையும் இடுகுறிப்பெயரையும் நீங்கள் அறிவீர்கள். இனி காரண இடுகுறி யாதென விளக்குவாம். பின்வரும் கதையைக் கவனியுங்கள் :—

ஓர் ஊரில் ஒரு புலவர் இருந்தார். 'புலவர் வீட்டுக்குப் போகி றோம், புலவர் வீட்டுக்குப் போகிறோம்' எனப் பலர் அங்குச் சென்று வருவர். நாளடைவில் புலவர் இறந்துபோனார். அவர் மகன் பிறகு அவ்வீட்டில் ஒரு கடை வைத்திருந்தான். கடைக்குப்போகிற ஜனங்களை 'எங்கே போகிறீர்கள்?' என எவரும் கேட்டால், அவர் கள் பழைய வழக்கத்திலேயே 'புலவர் வீட்டுக்குப் போகிறோம்' எனக் கூறுவர். சரி; நிற்கட்டும்.

புலவர் முன் வாழ்ந்தபோது காரணப்பெயராகப் புலவர் வீடு என்று சொல்லப்பட்டது. ஆனால் புலவர் இறந்து வீடு கடையாக மாறிய பின்னும் அதற்கு ஏன் அப்பெயர் சொல்லவேண்டும்? இது பழைய வழக்கமேயன்றி வேறன்று.

இவ்வாறே, பாடசாலை உபாத்தியாயர் ஒருவர் தமது பதவியினின் றும் விலகிக் கடைக்காரரானார். ஆனால் ஜனங்களோ அவரைச் செட்டி எனக் கூறாது உபாத்தியாயர் என்றும் அவர் கடையை உபாத்தியாயர் கடை என்றும் கூறினர். இவ்வாறு (1) காரணத்தால் வந்த பெயரைக் கொண்ட ஒரு பொருள், அப்பெயர் வந்த காரணத்தை இழந்த காலத்தும் அப் பெயராலே சொல்லப்படுவது காரண இடுகுறியாம்.

(2) காரணத்தினால் வந்தபெயர் அக்காரணத்துக்குரிய பல பொருள்களையும் குறியாமல் ஒரு பொருளை மட்டும் குறித்து நிற்பதும் காரண இடுகுறியாம்.

உ-ம் :—முள்ளையுடைய செடிகள் யாவும் முள்ளி என்றழைக்கப் படலாம்; ஆனால் உலக வழக்கத்தில் முள்ளி என்பது ஒரு தனிப்பட்ட செடியையே குறிக்கிறது. அந்தணர் என்பது அருள் நோக்குடைய யாவருக்கும் கூறத்தக்க ஒரு பெயர்; ஆனால் உலக வழக்கில் பார்ப்பார் எனப் படும் ஒரு சாதியினரையே குறிக்கிறது. இத்தகைய உதாரணங்கள் தேடிக்கொள்க.

போதுப்பெயர், சிறப்புப்பெயர். பொதுப்பெயராவது பல வற்றைச்சேர்த்துப் பொதுவாகக்கூறும் பெயர் (உ-ம்) மக்கள், மரம், அணி (ஆபரணங்கள்). சிறப்புப்பெயராவது தனிப்பட்ட ஒன்றுக்கு இட்டபெயராம். உ-ம் :—உதயணன், வேம்பு, காப்பு.

இடுகுறிப்பெயரிலும், காரணப்பெயரிலும் பொது, சிறப்பு என்னும் இருபகுதிகளும் உண்டு.

இடுகுறிப் பொதுப்பெயர்—மக்கள், மரம், நிலம்.
,, சிறப்புப்பெயர்—உதயணன், வேம்பு, ஆசியா.
காரணப்பொதுப்பெயர் அறவோர், அணி, மலர்.
காரணச்சிறப்புப்பெயர் நால்வர், சிலம்பு, வளையல், அலரி.

சிலம்புதல்=சப்தித்தல். சிலம்புவதால் சிலம்பு என்றும் வளைந் திருப்பதலால் வளையல் என்றும் அலர்ந்திருப்பதால் அலரி என்றும், நான்கு மனிதர் ஆனதால் நால்வர் என்றும் காரணம்பற்றி வந்த பெயர் கள் சிறப்பாக ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்பதை அறிக.

"இடுகுறி, காரணப்பெயர் பொது, சிறப்பின" (12)

ஆகுபெயர். ஒன்றின் பெயர் மற்றொன்றுக் காகி (தொன்று தொட்டு வழங்கி) வருதல் ஆகுபெயராம். அவற்றில் சிலவற்றை உதாரணத்துடன் விளக்குவாம் :—

(1) பொருளாகுபெயர் :—ஒரு பொருளின் பெயர் அதிலுள்ள ஒருபாகத்தைக் குறிப்பது.

உ-ம் :—தாமரைக்கண்ணன். தாமரை என்பது ஒரு பொருள். ஆனால் இங்குத் தாமரை என்பது அப்பொருளைக் குறி யாமல் அதன் ஓர் பாகமாக நிற்கும் (தாமரைப் பூப் போன்ற கண்ணன் என்ற பொருளால்) மலரைக் குறிக் கிறது. ஒரு பொருளின் பெயர் அதனொரு பாகத்திற் காகியதால் இது பொருளாகுபெயர் எனச் சொல்லப் படுகிறது.

(2) இடஆகுபெயர். ஒரு இடப்பெயர் அது சம்பந்தமான பிறிதொன்றைக் குறிப்பது.

உ-ம் :—ஊர் அடங்கிற்று. இதில் ஊர் என்னும் இடப்பெயர் ஊரிலுள்ள மக்களைக் குறிப்பிடுவதை அறிக. இந்தியா சுதந்தரம் பெற விரும்புகிறது.—இந்தியா=இந்திய மக்கள்.

(3) காலஆகுபெயர். ஒரு காலப்பெயர் அது சம்பந்தமான மற்றொன்றைக் குறிப்பது.

உ-ம் :—கோடை பழுத்தது. இங்குக் கோடை என்னும் காலப் பெயர் அக்காலத்திற்றோன்றும் பழங்களைக் குறித்தது.

(4) சினையாகுபெயர். ஒரு உறுப்பின் பெயர் அது பொருந்தியுள்ள முழுப்பொருளைக் குறிப்பது.

உ-ம் :—வெற்றிலை நட்டான், புகையிலை விதைத்தான் ; இவற்றில் வெற்றிலை, புகையிலை என்னும் மொழிகள் இலையைக் குறியாமல், அது உண்டாகும் கொடியையும் செடியையும் குறிப்பதை உணர்க.

(5) குண ஆகுபெயர். ஒரு குணத்தின் பெயர் அது சம்பந்தமான பொருளைக்குறிப்பது. நீலம் சூடினாள். இங்கு நீலம் என்பது நீலநிறத்தைக் குறிக்காமல் நீலமலரைக் குறிக்கின்றது.

(6) தொழில் ஆகுபெயர். ஒரு தொழிற்பெயர் அது சம்பந்தமான பொருளைக் குறிப்பது.

உ-ம் :—சுருட்டுப் பிடித்தான். இங்குச் சுருட்டு என்பது சுருட்டும் தொழிலைக்குறிக்காது சுருட்டப்பட்ட புகையிலையைக் குறிப்பதை உணர்க.

பின் வருபவை ஆகுபெயரில் எந்த இனத்தைச் சேர்ந்தவை? வற்றல் உண்டான், வெள்ளை அடித்தான், தலையை உதறிக்கட்டு, கார் அறுத்தது, குட்டையை வண்டியிற் பூட்டினேன், தலைக்கு நாலணா கொடு, அவ்வீடு பட்டினி, அவியல் மிக ருசி.

வேற்றுமை. வேற்றுமையைப்பற்றி முன் நாம் அறிவோம். மூன்றும் வேற்றுமை வரைக்கும் பொருளுடன் தெரிவித்திருக்கிறோம். 4-ம், 5-ம், 6-ம், 7-ம் வேற்றுமைகள் இங்கு அவற்றின் பொருளுடன் விளக்கப்படுகின்றன.

4-ம் வேற்றுமை. இதன் உருபு கு. இவ்வுருபு கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை என்னும் பொருளில் வரும்.

புலவருக்குப் பொன்கொடுத்தான்—கொடை
பாம்புக்குப் பகை கருடன்—பகை

அறிவாளிக்கு நண்பர் அறவோர்—நேர்ச்சி (நட்பு)
அரசருக்கு உரியது இவ்வாசனம்—தகுதி
தாலிக்குப் பொன் கொடுத்தான்—அது வாதல்
கூலிக்கு வேலை செய்தாய்—பொருட்டு, நிமித்தம், ஆக
மணிமேகலைக்குத்தாய் மாதவி—முறை
மதுரைக்கு வடக்கு சிதம்பரம்—எல்லை.

"நான்காவதன் உருபு ஆகும் கு வே:
கோடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்,
பொருட்டு, முறையாதியின், இதற்கிது எனல் பொருளே." (13)

5-ம் வேற்றுமையின் உருபு இன், இல். சொல் உருபுகள் நின்று, இருந்து. இவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப்பொருளில் வரும்.

மலையின் வீழ் அருவி	நீங்கல் (நின்று, இருந்து)
காக்கையிற் கரியவன் கண்ணன்	ஒப்பு
மதுரையின் வடக்கு சிதம்பரம்	எல்லை
கல்வியிற் பெரியவர் கம்பர்	ஏது

(ஏது=காரணம்)

ஐந்தாவதனுருபு இன்னும் இல்லும்:
நீங்கல், ஒப்பு, எல்லை ஏதுப்பொருளே. (14)

6-ம் வேற்றுமை உருபுகள் அ, அது, ஆது என்பவையாம். அவற்றின் பொருள்—பொருள், இடம், காலப் பிறிதின் கிழமையும், குணம், தொழில் தற்கிழமையும், ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கத் தற்கிழமையுமாம்.

முதலாவதாக நீங்கள் தற்கிழமை, பிறிதின் கிழமை என்பவற்றின் பொருளை உணரவேண்டும். தற்கிழமை=தனது உரிமை. பிறிதின் கிழமை=மற்றொன்றின் உரிமை. தன்னைவிட்டுப் பிரிக்கப் படாமை தற்கிழமை என்றும், பிறிதாகப் பிரிக்கப்படும் தன்மை பிறிதின் கிழமை என்றும் கூறப்படும். கையின் விரல்—இங்கு விரல் கையோடு அமைந்துள்ள உறுப்பாதலின் அது தற்கிழமை. கையில் காப்பு. காப்பு கையிலிருந்து நீக்கிவிடக்கூடிய வேறுபொருளாதலின் பிறிதின் கிழமை. இனி உதாரணங்கள் தருவோம் :—

பொருட் பிறிதின் கிழமை	கோவலனது சிலம்பு
இடப் ,,	கோவலனது மனை
காலப் ,,	கோவலனது காலம்
சினைத் தற்கிழமை	கோவலனது கை
குணத் ,,	கோவலனது அழகு
தொழில் ,,	கோவலனது வாழ்வு

ஒன்றன் கூட்டத் தற்கிழமை மாந்தரது தொகுதி
பலவின்ஈட்டத் ,, பறவைகளது கூட்டம்
திரிபின் ஆக்கத் ,, நெல்லினது பொரி

ஒன்றன்கூட்டமாவது ஒரு இனத்தவரின் கூட்டம். பலவின்ஈட்டம்—பல இனங்களின் கூட்டம். திரிபின் ஆக்கம்—ஒரு பொருள் திரிந்து மற்றொன்று ஆவது. மாந்தரது தொகுதி என்பது மனித இனம் ஒன்றையும், பறவைகளது கூட்டம் என்பது பறவைகளின் பல இனங்களையும், நெல்லினது பொரி என்பது நெல் திரிந்து பொரி ஆகியதையும் குறிப்பதை உணர்க.

"ஆறன் ஒருமைக்கு அதுவும், ஆதுவும்:
பன்மைக்கு அவ்வும் உருபாம். பண்பு, உறுப்பு,
ஒன்றன்கூட்டம், பலவின்ஈட்டம்,
திரிபின் ஆக்கமாம் தற்கிழமை,
பிறிதின்கிழமையும் பேணுதல் பொருளே." (15)

7-ம் வேற்றுமை உருபு இல், இடம், கண் முதலியன. அவற்றின் பொருள்—பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆறும் தற்கிழமையிலும் பிறிதின் கிழமையிலும் தோன்றுவதாகும்.

மணியின் ஒளி — பொருட் தற்கிழமை
மரத்திற் கூடு ,, பிறிதின்கிழமை
ஊரின்கண் வீடு இடத் தற்கிழமை
ஆகாயத்தில் பருந்து ,, பிறிதின்கிழமை
நாளின்கண் நாழிகை காலத் தற்கிழமை
கோடையிற் பழம்வரும் ,, பிறிதின்கிழமை
கையில் விரல் சினைத் தற்கிழமை
கையில் காப்பு ,, பிறிதின்கிழமை
பச்சையில் அழகு பண்புத் தற்கிழமை
இளமையிற் செல்வம் ,, பிறிதின்கிழமை
ஆட்டத்தில் அபிநயம் தொழில் தற்கிழமை
ஆட்டத்திற் பாட்டு ,, பிறிதின்கிழமை

"ஏழன் உருபு கண் ஆதிமாகும்
பொருள் முதல் ஆறும் ஓரிரு கிழமையில்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப" (16)

விளி ஏலாத பெயர்கள்.

8-ம் வேற்றுமை உருபேலாப் பெயர்கள் எவை?

தன்மைப்பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், நு என்னும் எழுத்திலாரம்பிக்கும் முறைப் பெயர்களும், எ, யா, ஏ முதலிய

எழுத்துக்களில் வரும் வினைப்பெயர்களும் அ, இ, உ எழுத்துக்களில் வரும் சுட்டுப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் விளியில் வரா.

உ-ம். நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்
நீ, நீர், நீங்கள், நீவிர், நீயிர், எல்லீர்
நுமன், நுமள், நுமர்,
எவன், எவள், எவர், எது, எவை,
யாவன், யாவள், யாவர், யாது, யாவை
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை,
அவன், அவள், அவர், அது, அவை,
இவன், இவள், இவர், இது, இவை,
உவன், உவள், உவர், உது, உவை,
தான், தாம். (இவற்றை விளித்துப் பார்க்க)

உருபேற்கும்போது வரும் சாரியைகள். ஒரு பதத்துடன் விகுதி, உருபு முதலியன சேரும்போது அவைகட்கிடையே சார்ந்து நிற்கும் சொல்லுக்குச் சாரியை என்பது பெயர். அவைகளிற் சில:— அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஏ, தம், ஐ, நம், கு, உ, நும், அ.

(1) எல்லாம் என்பது அஃறிணையில் உருபு ஏற்கும்போது அற்றுச் சாரியையும் உயர்திணையில் நம் சாரியையும் பெறும்.

எல்லாம்+ஐ=எல்லாவற்றையும்—அஃறிணை
எல்லாம்+ஐ=எல்லார்நம்மையும்—உயர்திணை

(2) எல்லாரும் எல்லீரும் என்பவை வேற்றுமை உருபை ஏற்கும்போது முறையே தம், நும் சாரியைகளையும் வேற்றுமை உருபுகளையும் தமக்கிடையிற் கொள்ளும்.

எல்லாரும்+ஐ=எல்லார்தம்மையும்
எல்லீரும்+ஐ=எல்லீர்நும்மையும்.

(3) தான், தாம், நாம், யான், யாம், நீ, நீர் என்பன வேற்றுமை உருபேற்கும்போது தன், தம், நம், என், எம், உன், நும் எனத் திரிவதோடு, 4-ம் வேற்றுமை கு உருபேற்கும்போது அ சாரியை பெறும். தன்+கு—தனக்கு, நும்+கு—நுமக்கு.

(4) ஆ, மா, கோ என்பன வேற்றுமை உருபேற்கும்போது னகரச் சாரியை கொள்ளும்.

ஆ+ஐ=ஆனை, மா+ஐ=மானை, கோ+ஐ=கோனை.

(5) அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்களுடன் உருபு சேரும்போது அற்றுச் சாரியை தோன்றும்.

அவ்+ஐ=அவற்றை, இவ்+ஐ=இவற்றை, உவ்+ஐ=உவற்றை.

(6) அது, இது முதலியவை உருபேற்கும்போது அன் சாரியை பெறும்.

அது+ஐ=அதனை, இது+கு=இதற்கு.

(7) மகரமெய்யை ஈற்றில் கொண்ட பெயர்கள் உருபேற்கும் போது அத்துச் சாரியை பெறும்.

மரம்+ஐ=மரத்தை, கலம்+ஐ=கலத்தை.

(8) சில, பல என்பவை வேற்றுமை உருபை ஏற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

சில+ஐ—சிலவற்றை, பல+ஐ—பலவற்றை.

சில பிற சாரியைகள் :—

வண்டு+கால்	— வண்டின் கால்	— இன்
அவன்+ஐ	— அவன்றனை	— தன்
நாடு+கண்	— நாட்டின்கண்	— இன்
இருபது+கு	— இருபாற்கு	— ஆன்
பத்து+பத்து	— பதிற்றுப்பத்து	— இற்று
ஒன்று+கால்	— ஒன்றே கால்	— ஏ
செய்+வாய்	— செய்குவாய்	— கு
ஒன்று+கூட்டம்	—ஒன்றன் கூட்டம்	— அன்

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம்
தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன
இன்ன பிறவும் பொதுச் சாரியையே, (17)

வினைச்சொல். வினை தெரிநிலைவினை என்றும் குறிப்பு வினை என்றும் இருவிதப்படும். தெரிநிலைவினை. வினையைச் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் முதலியவைகள் தெரியும்படியாக நிற்பது தெரிநிலைவினை.

உ-ம். எழுதினான் என்பது ஓர் வினைமுற்று. மாணவன் எழுதினான் எனச் செய்தவனையும், பென்சிலால் எழுதினான் எனக் கருவியையும், பாடசாலையில் எழுதினான் என இடத்தையும், எழுதுதலாகிய செயலையும், முன்னரே எழுதியதாக இறந்த காலத்தையும், பாடத்தை எழுதினான் எனச் செயப்படு பொருளையும் உணர்த்த ஏதுவாக இவ்வினை நிற்பதால் தெரிநிலை வினை என்னப்படும்.

குறிப்புவினை. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் பெயர்களினடியாகப் பிறந்து, வினையாலணையும் பெயர்கள்

வினைச்சொற்களாகப் பொருள் தந்து நிற்பின் குறிப்பு வினையாம். இது தெரிநிலைவினை காட்டுகிற கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருளை நேராக அறிவிக்காது ; செய்பவனைமட்டுமே அறிவிக்கும்.

இவன் பொன்னன். பொன் என்னும் பொருளடியாகப் பிறந்த பொன்னன் என்னும் சொல், பொன்னை யுடையவன் என வினைப் பொருள் தந்து நிற்பதைக் கவனிக்க. பொன்னன் என்பதே இவ்வாக்கியத்தின் பயனிலை.

இவன் மதுரையன். இடத்தினடியாக வந்த வினையாலணையும் பெயர் வினையாயிற்று.

இவன் பரணியன். காலத்தினடியாக வந்த வினையாலணையும் பெயர் வினையாயிற்று.

இவன் கண்ணன். சினையினடியாக வந்த வினையாலணையும் பெயர் வினையாயிற்று.

இவன் சத்தியன். குணத்தினடியாக வந்த வினையாலணையும் பெயர் வினையாயிற்று.

இவன் பிரசங்கி தொழிலினடியாக வந்த வினையாலணையும் பெயர் வினையாயிற்று

வேறு, இல்லை, உண்டு இம்மூன்றும் ஐம்பால், மூவிடங்கட்கும் உரிய குறிப்பு வினைமுற்றுக்களாம்.

பின்வரும் பெயர்களுடன் ஒவ்வொரு வினையையும் சேர்க்க :—

நான், நாம், யான், யாம், நாங்கள்
நீ, நீர், நீங்கள், நீவிர், எல்லீர்
அவன், அவள், அவர், அது, அவை
} வேறு, இல்லை, உண்டு.

வேறு, இல்லை, உண்டு ஐம்பால் மூவிடத்தன. (18)

விளக்கம். தெரிநிலை வினைமுற்று (1) ஒருவினைப் பகுதியினடியாகப் பிறக்கும். (2) காலங்காட்டும்.

குறிப்பு வினைமுற்று (1) ஒரு பெயரினடியாகப் பிறக்கும். (2) தெளிவாகக் காலங்காட்டாது.

செய்தான் செய்-பகுதி தெரிநிலை வினைமுற்று

நன்று நன்மை என்னும் பண்பு-முதலிலிருப்பதால் குறிப்பு வினைமுற்று. காலம் தெளிவாகக் காட்டவில்லை.

பெயர், வினை எச்சங்கள். வினை முற்றைத் தெரிநிலை, குறிப்பு என இருவிதமாக விளக்கினோம். இனி எச்சங்களைப்பற்றிக் கூறுவோம். எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என இருவிதங்களாகும். வினையினடியாகப் பிறந்த முற்று தெரிநிலை வினைமுற்று என்றும்

பெயரினடியாகப் பிறந்தது குறிப்பு வினைமுற்று என்றும் கண்டீர்கள். அவ்வாறே வினையினடியாகப்பிறந்த பெயரெச்சம் தெரிநிலைப்பெயரெச்சம், பெயரினடியாகப் பிறந்த எச்சம் குறிப்புப் பெயரெச்சமாகும். வினையினடியாகப் பிறந்த வினை எச்சம் தெரிநிலை வினைஎச்சம்; பெயரினடியாகப் பிறந்த வினைஎச்சம் குறிப்பு வினை எச்சமாகும்.

சாத்தன்	வந்தான்	தெரிநிலை வினை முற்று
சாத்தன்	நல்லவன்	குறிப்பு ,,
வந்த	சாத்தன்	தெரிநிலைப் பெயரெச்சம்
நல்ல	சாத்தன்	குறிப்புப் ,,
வந்து	பேசினன்	தெரிநிலை வினை எச்சம்
நன்கு	பேசினன்	குறிப்பு ,,

தெரிநிலை வா என்னும் வினையினடியாகவும்

குறிப்பு நன்மை என்னும் பண்பினடியாகவும் பிறந்திருப்பதை அறியுங்கள்.

தெரிநிலைப்பெயரெச்ச விகுதிகள் அ, உம்.

உ-ம். வந்த பையன். அ
வருகிற பையன். அ
வரும் பையன். உம்

குறிப்புப் பெயரெச்ச விகுதி அ

உ-ம். நல்ல, சிறிய, தூய.

தெரிநிலை வினை எச்ச விகுதிகள். (1) உ, பு, ஆ, ஊஉ, என என்பவை இறந்த காலத்தையும், (2) அ நிகழ் காலத்தையும், (3) இன், வான், பான், பாக்கு, இய, இயர், எதிர்காலத்தையும் காட்டும்.

1	2	3
நடந்து—உ	நடக்க—அ.	உண்ணின்—இன்
உண்குபு—பு		உண்ணுவான்—வான்
பெய்யா—ஆ		உண்பான்—பான்
காணூஉ—ஊஉ		உண்பாக்கு—பாக்கு
உண்டென—என		உண்ணிய—இய
		உண்ணியர்—இயர்.

செய்து, செய், செய்பா, செய்யூ,
செய்தன; செய; செயின், செய்யிய, செய்யியர்,
வான், பான், பாக்கு, இன வினை எச்சம்
பிற ஐந்தொன் றுறும் முக்காலும் முறைதரும். (19)

குறிப்புவினை எச்ச விகுதிகள். வழி, இடத்து, கால், ஆல் கடை, மல், அ, றி, து.

உ-ம். அல்லாவழி, அல்லாவிடத்து, அல்லாக்கால், அல்லால், அல்லாக்கடை, அல்லாமல், மெல்ல, அன்றி அல்லது (இவற்றுள் அ மட்டுமே உடன்பாட்டு வினை எச்ச விகுதி.)

பகுபத உறுப்புகள். பதங்களை உறுப்புக்களாகப் பகுக்கும் இலக்கணம் இங்குக் கூறப்படும். பதத்தின் உறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறுவகைப்படும். எப்பகுபதத்திற்கும் பகுதியும் விகுதியும் உண்டு. மற்றைய உறுப்புக்கள் தோன்றியும் தோன்றாமலும் வரலாம். (பகுதி=முதனிலை. விகுதி=கடைநிலை.)

பகுதி	சந்தி	இடைநிலை	சாரியை	விகுதி	
கூன்	—	—	—	அன்	கூனன்
கலை	—	ஞ்	—	அன்	கலைஞன்
உண்	—	ட்	அன்	அன்	உண்டனன்
படி	த்	த்	அன்	அன்	படித்தனன்
நட	*த்	த்	அன்	அன்	நடந்தனன்

*(த், ந் ஆனது விகாரம்)

மாணவர்கள் பகுபத உறுப்பு இலக்கணம் கூறப் பெரிதும் வருந்துகின்றனர். வினைச்சொற்கட்கு நீங்கள் உறுப்பு இலக்கணம் கூற ஆரம்பிக்கும்போது, முதலாவது பகுதியைக் குறிப்பிடுங்கள். அது ஏவல் வினை முற்றாக வரும் வார்த்தை என்பதைக் கருத்தில் வையுங்கள். ஏவல் வினைமுற்றுப்பதத்தை நீங்கள் பகுதியாக நாட்டாவிட்டால், உங்கள் இலக்கணம் தப்பு. இரண்டாவதாக அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அன், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, மின், இர், ஈர், ஈயர், க, ய, உம் முதலிய விகுதிகளில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தையிலிருக்கும் விகுதியைக் குறிப்பிடுங்கள். மூன்றாவதாக இறந்த கால, நிகழ்கால, எதிர்கால, இடைநிலைகளாகிய த், ட், ற், இன்,—கிறு, கின்று, ஆநின்று,—ப், வ், என்பனவற்றில் அங்குத் தோன்றுவதையும் எழுதிக்கொள்ளுங்கள். இப்போது பகுபத இலக்கணம் பாதிக்குமேல் முடிந்தாயிற்று. இனி வார்த்தையைச் சேர்த்துப் பார்த்துத் தேவையான எழுத்துக்களைச் சரியான இடங்களில் நிரப்புங்கள். கடந்தனன். இச்சொல்லுக்கு உறுப்பு இலக்கணம் கூறுவோம். இதில் ஏவல் வினையாக வரத்தக்கது கட. விகுதியாக நிற்பது அன். இது இறந்தகால வினைமுற்று. இடைநிலை த். வார்த்தை தனன் என்று முடிந்திருக்கிறது. த் இடைநிலைக்கும் அன் விகுதிக்கும் இடையில் அன் சேர்த்தால் தனன் என ஆகும். இப்பொழுது கட—தனன் எனக்கொண்டோம். கட என்பதற்குப் பின் நாம் கொண்டுள்ள தவுக்குச் சந்தியாக த் என்னும் எழுத்தை நாட்ட

வேண்டும். அந்த த் பின்னர் ந் என விகாரமாகிக் கடந்தனன் என நின்றது.

விகுதி இடைநிலைகளுக் கிடையில் சார்ந்து நிற்பது சாரியை. உறுப்புக்கள் சந்திக்கும்போது உண்டாகும் தோன்றல், திரிதல், கெடுதல் மூவிதங்களும் சந்தி என்றும், வலித்தல், மெலித்தல் முதலிய விகற்பங்கள் விகாரமென்றும் கூறப்படும். ஆசிரியர்கள் இவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

ஏவல்வினை. ஏவல்=கட்டளை. முன்னிற்பவனைப் பார்த்துக் கட்டளையிடும் வினை ஏவல் வினையாம். இது எதிர்காலத்தில் மட்டும் வரும். வினைப்பகுதிகளும், ஆய், இ விகுதிபெற்று கட்டளைப் பொருளில் வருகிற வினைச்சொற்களும் ஏவல் ஒருமை வினைமுற்றும்.

உ-ம். நட, வா, இரு, சொல்லாய், செல்தி.

மின், உம், ஈர், ஏவல் பன்மை விகுதிகள்.

உ-ம். கேண்மின், பாரும், வாரீர்.

கள் என்னும் துணை விகுதி ஏற்று வருவது முண்டு.

உ-ம். கேளுங்கள், பாருங்கள், வாருங்கள்.

ஏவல் ஒருமை எதிர்மறை வினைமுற்று ஆ இடைநிலை பெற்று ஏ, இ, விகுதி ஏற்றவரும்.

செய்யாதே	செய் + ஆ + (த்)ஏ.	(த் எழுத்துப்பேறு)
செய்யாதி	செய் + ஆ + (த்)இ.	

எதிர்மறைப் பன்மை ஏவல் வினை முற்று அல் இடைநிலை பெற்று ஈர் விகுதியும் ஏற்றவரும்.

செய்யன்மின் —செய் + அல் + மின்

செய்யாதீர் —செய் + ஆ + (த்)ஈர்

வியங்கோள்வினை. வியம்=ஏவல்; கோள்=கொள்ளுதல்; எனப் பொருள் கொள்க. ஏவல் கொள்ளுவதே வியங்கோள்வினை. க, இ, இய, இயர் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாம். இஃது ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவானது.

வாழ்க— வாழ் + க	
போற்றி—போற்று + இ	அழிய—அழி + அ
வாழிய— வாழ் + இய	உண்ணிய—உண் + இய
வாழியர்— வாழ் + இயர்	நிலீயர்—நில் + ஈயர்.

இவ்வினை முற்றுக்களை நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர் முதலிய பெயர்களுடன் சேர்த்துக்கூறி அவை பால், இடங்கட்குப் பொதுவாக நிற்பதை அறிக.

எதிர்மறை வியங்கோள்வினை அல் இடைநிலை பெற்று வரும்.

உ-ம். செய்யற்க—செய்+அல்+க.
கொள்ளற்க—கொள்+அல்+க.

வேண்டும் என்பது உம் விகுதிபெற்ற வியங்கோள்.

வியங்கோட் பொருள்கள்.

வெல்க, சிறக்க — வாழ்த்து (1)
வருக, உண்க — உபசாரம் (2)
அருளுக, ஈக — வேண்டுகோள் (3)
கெடுக, அழிக — வைதல், சாபம் (4)

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு.

1. ஏவல் முன்னிலையில் கட்டளைப் பொருளில்வரும். வியங்கோள் மூவிடத்திலும் வாழ்த்துப் பொருளில் வரும்.

2. ஏவலுக்கு ஒருமைப் பன்மை வித்தியாசமுண்டு; வியங்கோளுக்கு ஒருமைப் பன்மைப் பேத மில்லை.

தன்மை முதலிய இடப்பெயர்கள் விரவி ஒரு சொல் கொண்டு முடிதல். தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் கலந்தபோது அம், ஆம் விகுதி பெற்ற வினைகளும், தன்மையும் படர்க்கையும் கலந்தபோது எம், ஏம், ஓம் விகுதிபெற்ற வினைகளும் தோன்றி முடியும்.

யானும் நீயும்	உண்டனம்	உண்கின்றனம்	உண்பம்	அம்
	உண்டாம்	உண்கின்றாம்	உண்பாம்	ஆம்
யானும் அவனும்	உண்டெனம்	உண்கின்றனெம்	உண்பெம்	எம்
	உண்டேம்	உண்கின்றேம்	உண்பேம்	ஏம்
	உண்டோம்	உண்கின்றோம்	உண்போம்	ஓம்

தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் விரவி வரும்போது ஓம் விகுதிபெற்ற வினைகளே தோன்றுகின்றன.

உ-ம். நானும் நீயும், அவனும் சென்றோம், செல்கின்றோம், செல்வோம். முன்னிலைப் பெயருடன் படர்க்கைப்பெயர் கலந்து வரும் போது முன்னிலை வினைகொண்டே முடியும்.

உ-ம். நீங்களும், அவர்களும் வந்தீர்கள்.

இடைச்சொல்.

(1) ஏ என்னும் இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளில் வரும்.

உ-ம். இவர்களில் இவனே சமர்த்தன்—பிரிநிலை. ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்துக்காட்டுகிறது.

இவனே கள்ளன் ? இவனா என வினவுதலால் வினா.

மானே, மரமே, மயிலே, முகிலே—எண்ணும்போது வருவதால் எண்.

—அசை நிறை என ஆறு ஏகாரம்மே—ஈற்று அசை.

உண்டே மறுமை—தேற்றம். திட்டமாகக் கூறுவது.

ஏ, ஏ, இவளொருத்தி பேடி—இசைநிறை. வேறு பொருளின்றி இசையை நிரப்புவதற்காக நிற்பது.

பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம்,
இசைநிறை என் ஆறு ஏகாரம்மே. (20)

ஓ என்னும் இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என எட்டுவிதப் பொருளில் வரும்.

நீ படித்தற்கோ வந்தாய் ?–இல்லை, விளையாடற்கு :—எனப் பொருள் தருதலால் ஒழியிசை

இக்குழந்தை ஆணோ பெண்ணோ ? வினா

ஓ ! இவர் பெரியர் —உயர்வு சிறப்பு

ஓ ! கொடியன் —இழிவு சிறப்பு

அவனோ கொண்டான் ?—(இல்லை) எதிர்மறை

இது ஆணோ அதுவுமன்று பெண்ணோ

அதுவுமன்று.—தெரிநிலை. (அலி எனத்தெரிவிக்கிறது.)

ஓ ! உள்ளதும் போயிற்று. கழிவு (இரங்கல்)

சொல்வன் கேண்மினோ அசை நிலை

இவன் செய்வான் அவனோ செய்யான்—பிரிப்பு அல்லது பிரிநிலை

ஓகாரம் ஐயப்பொருளில் வருவது முண்டு.

உ-ம். பத்தோ பதினொன்றோ ?

ஒழியிசையாவது சொன்னதை மறுத்து அது ஒழிந்த மற்றொன்றைக் குறித்து நிற்பது. தெரிநிலையாவது ஒன்றின் உண்மை நிலையைத் தெரிவிப்பது. கழிவாவது இரக்கப்படுதல். அசை நிலையாவது எவ்விதப் பொருளுமின்றி ஓசையை நிரப்பி நிற்பது.

ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை,
கழிவு, அசைநிலை, பிரிப்பு என எட்டுஓவே (21)

உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுவிதப் பொருளில் வரும்.

அவன் வருதற்கும் உரியன் —எதிர்மறை. வாராமைக்கும் உரியன் எனக் காட்டுகிறது.
குறவரும் மருளும் குன்று —உயர்வுசிறப்பு
புலையனும் விரும்பாயாக்கை —இழிவுசிறப்பு
ஐந்தாயினும் ஆறாயினும் கொடு —ஐயம்
சோறிட்டுத் தண்ணீரும் வார்த்தான்—இறந்தது தழுவிய எச்சம்
சோறும் இட்டு தண்ணீரும் வார்த்தாள்—எதிரது தழுவிய எச்சம்
முத்தமிழும் கற்றவன் —முற்றும்மை
கோவலனும் கண்ணகியும் இறந்தனர்—எண்
இது ஆணுமன்று, பெண்ணுமன்று—தெரிநிலை (அலி)
கோதுமை அரிசி உணவும் ஆயிற்று—ஆக்கம்.
(மருந்தும் ஆயிற்று எனப் பொருள்தருகிறது.)

உயர்வு சிறப்பாவது ஒன்றின் மிகுதியான உயர்வைக் கூறுவது. குறவர்கள் பயமின்றிக் குன்றிலே வாழ்கிறவர்கள் என அவர்களின் சிறப்பையும், அவர்களும் மருளும்படியான குன்று எனக் குன்றின் உயர்வையும் காட்டுகிறது. இழிவு சிறப்பு ஒன்றின் மிகுதியான இழிவைக்காட்டுவது. புலையன் புலால் உண்ணும் வழக்கத்தினன் என அவன் இழிவையும் அவனும் தின்னாத யாக்கை என்றதால், மனித யாக்கை மிக இழிவானது எனவும் பொருள் பெற்றது. ஐயம்—சந்தேகம். இறந்தது தழுவிய எச்சம் முன் உள்ள ஒன்றைத் தழுவி நிற்பது; தண்ணீரும் என்றது முன் நின்ற சோற்றைத் தழுவுதலை அறிக. எதிரது தழுவிய எச்சமாவது பின் உள்ளதொன்றைத் தழுவி நிற்பது. சோறும் என்றது பின் நின்ற தண்ணீரைத் தழுவுதலை அறிக. முற்றும்மை—குறைவில்லாமல் முழுவதும் என்னும் பொருள் தருவது. தமிழ் இயல், இசை, நாடகம் என மூவிதமே. மூவிதத்தையும் என முழுவதையும் குறிப்பதால் முற்று. ஆக்கம் ஒரு காரியம்பற்றி நின்றபொருள் பிறிது ஒரு காரியத்திற்கும் ஆகிவருதல். கடிகாரமும் ஆயிற்று என்னும்போது, கடிகாரமும் ஆயிற்று கைக்கு ஆபரணமும் ஆயிற்று எனப்பொருள் தருதலை உணர்க.

எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை,
தெரிநிலை, ஆக்கமோடு உம்மை எட்டே. (22)

பின் வருவனவற்றின் உம்மைப்பொருள் யாவை? எல்லாரும் வந்தனர். அரசரும் கௌரவிக்கும் காந்தியடிகள். ஆசிரியரும், மாணவரும் வருவார். நாயும் தின்னாச்சோறு. மூவேந்தரும் கூடினர். அவர் சென்றிருந்தாலும் இருக்கலாம். யானைக்கும் அடி பிசகும். கம்பரும் ஔவையும் வாதிட்டனர்.

உரிச்சோல். உரிச்சொல் பெயருரிச்சொல் என்றும் வினை உரிச்சொல் என்றும் இருவிதங்களாம். வினையைத் தழுவுவது வினை உரிச்

சொல் என்றும், பெயரைத் தழுவுவது பெயருரிச்சொல் என்றும் சொல்லப்படும். பின்வரும் உதாரணங்களில் பெயர் உரிச்சொற்களையும் வினை உரிச்சொற்களையும் கண்டுகொள்க :—

உறுபுகழ், ' நனிபேதை, கழிபேருவகை,
சாலப்பேசினுன், நனிதின்ருன்.

170907

பொதுவியல்.

குறிப்பும் வெளிப்படையும். சொற்கள் பொருளைத் தெரிவிக்கும் முறை இங்கு விளக்கப்படுகிறது. வெளிப்படையாவது சொல்லின பொருள் யாவருக்கும் விளங்கும்படி பேசுவது. குறிப்பு—நேர் முகமாகப் பொருளைத் தெரிவிக்காது மறைமுகமாகக் காட்டுவது. குறிப்பு (1) ஒன்றொழிபொதுச் சொல், (2) விகாரம், (3) தகுதி, (4) ஆகுபெயர், (5) அன்மொழி, (6) வினைக்குறிப்பு, (7) முதற்குறிப்பு, (8) தொகைக்குறிப்பு, பிற குறிப்பு எனப் பலவிதப்படும்.

ஒன்றொழி பொதுச்சொல். ஆயிரம் மக்கள் போர் செய்தார். மக்கள் என்பது ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாயினும் போர் செய்தார் என்னும் வினையால் அம்மக்கள் ஆண் மக்களே எனக் குறிப்பிட்டு, பெண் இனத்தை ஒழிப்பதைக்காண்க.

இம்மாடு பால் கறக்கும். மாடு இருபாலுக்கும் பொதுவான பெயராயினும், பால் கறக்கும் என்னும் வினைச்சொல் பசுவைக் குறித்து, ஆண் இனத்தை ஒழித்தது ; ஆகவே இவை ஒன்றொழி பொதுச்சொல்.

விகாரம்.

மரைமலர். மரை என்பது மலர் என்னும் சொல்லைச் சேர்த்து நிற்பதால் தனக்குரிய வேறு பொருள்களை ஒழித்து, தாமரை என்னும் பொருளைத் தருவதை உணர்க. தா என்னும் முதலெழுத்து முதலிற் குறைந்தது முதற்குறை செய்யுள் விகாரம்.

தகுதி. வழக்கிலுள்ள இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக் குறிகள் இவ்வாறே சொல்லிலுள்ள பொருளை ஒழித்துக் குறிப்பால் வேறு பொருள் தருவதை உணர்க. கால்கழுவச்சென்ருன் (மலங் கழுவ). சிவ பதமடைந்தார் (இறந்தார்). குதிரை ஏறியுள்ளான் (கள் குடித்திருக்கிருன்).

ஆகுபெயர். பொருள் முதல் தொழில் வரையும் உள்ள ஆகு பெயர்கள் சொல்லின் பொருளை ஒழித்துப் பிறிதொன்றைக் குறிப்பதைக் காண்க. தாமரை முகம்—தாமரை=தாமரைப்பூ.

அன்மொழி. தாழ்குழல் வந்தாள். தாழ்குழல் என்பது தாழ்ந்த கூந்தல் எனப்பொருளாயினும், பின்னர் 'வந்தாள்' என

ஒரு வினை வந்ததால், தாழ்குழல் பெண் வந்தாள் என்று பொருள் தருகிறது. பெண் என்றது அங்கு அல்லாத மொழியாதலால் அன் மொழியாம்.

குறிப்புவினை. இவன் பொன்னன்: பொன்னன் என்பது பொன்னை உடையவனாயிருக்கிறான் என்று வினையைக் குறிப்பாய்க் காட்டுவதை அறிக.

முதற்குறிப்பு. வெற்றி வேற்கை வைத்திருக்கிறான்—என்பது வெற்றி வேற்கை என ஆரம்பிக்கும் நூலைக் குறித்து நிற்பதை உணர்க. (நூலின் முதல் மொழியால் நூல் குறிக்கப்படுவதால் முதற் குறிப்பு என்றாயிற்று.)

தொகைக்குறிப்பு. படுக்கையிலேயிருந்து வாயில்கள் ஒன்பது அடைபட்டன என்பதில் ஒன்பது என்பது தேகத்தின் நவதுவாரங் களையும் குறிக்கிறது. ஐவருடன் குந்தி வந்தாள் என்பதில் ஐந்து என்னும் எண் பாண்டவரைக் குறிக்கிறது. தொகை=எண். பொருளின் தொகை பொருளைக் குறிப்பது தொகைக் குறிப்பு.

பிறகுறிப்புகள். கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய் (நன்றாய்ச் சமைக்கவில்லை), பாயாவேங்கை (வேங்கைமரம்) சாதத்தில் சிறிய சாமிகள் கிடக்கின்றன. (கற்கள் கிடக்கின்றன) வாழைப்பழம் வெட்ட நல்லகத்தி (நல்லகத்தி அல்ல) இவை போன்றவை.

வெளிப்படை. ஒரு சொல் நேரே தெளிவாகப் பொருள் தந்து நிற்பது வெளிப்படை. உ—ம்:—இலக்கணம் கற்பது இனிமையாக இருக்கிறது. அனல் அதிக வெப்பமானது.

வழக்கு.

வழக்கு=வழக்கம். தமிழ்மொழிகள் வழக்கத்தில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்பதைக் காட்டுவது. அவ்வழக்கு இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ, இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி என ஆறுவிதம்.

இலக்கண முடையது. இலக்கணமுறை வழுவாது நடைபெறும் செந்தமிழ்ச் சொற்கள் உ—ம்:—நிலம், நீர், தீ, பொன்.

இலக்கணப்போலி. இலக்கணத்தைவிட்டுச் சிறிது விலகினும் சான்றோர்களால் தொன்றுதொட்டு ஆதரிக்கப்பட்டு வருவது.

இல்முன்	—	முன்றில்	வைகாசி	—	வைசாகி
இல்வாய்	—	வாயில்	தசை	—	சதை
நகர்ப்புறம்	—	புறநகர்	கோவில்	—	கோயில்.

மரூஉ. உலக வழக்கத்தில் வார்த்தைகளின் இலக்கணம் மாறிப் பலவிதமாகச் சிதைந்து வருவது.

அருமருந்தன்ன—அருமந்த பெயர்—பேர்
சோழனுடு—சோணுடு தஞ்சாவூர்—தஞ்சை
பாண்டியனுடு—பாண்டிநாடு ஆயிற்று—ஆச்சு
பொழுது—போது வாயில்—வாசல்
அ, இ, உ—அந்த, இந்த, உந்த யானை—ஆனை
வருகிறது—வருகுது யார்—ஆர்.

இம்மூன்றுவித வழக்கும் எப்பொருளுக்கு எச்சொல் இயல்பாகவே அமைந்ததோ, அச்சொல்லாலே அப்பொருளைக் கூறலால் 'இயல்பு வழக்கு' என்னப்படும்.

இடக்கரடக்கல். இடக்கர்+அடக்கல். பெரியார்களிடத்துக் கூறுவதற்கு ஆபாசமானவற்றை அடக்கி மறைமுகமாகப் பொருள் தெரிவிப்பது இடக்கர் அடக்கல்.

பீ என்பதை பவ்வீ. (பகரவருக்கத்தின் ஈ எனப்பொருள்.)

மலங்கழுவினுன்—கால் கழுவினுன்.

மங்கலம். அமங்கலமான காரியத்தை மங்கலமான சொற்களால் தெரிவிப்பது.

செத்தான்—இறந்தான் (சென்ருன்) ஓலை—திருமுகம்

சுடுகாடு—நன்காடு தாலி அறுந்தது—தாலி பெருகிற்று

நிலையற்ற பொய்யான உடம்பை மெய் என்பதும், சுபதினமில்லாததாகக் கொள்ளப்படும் செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்பதும் மங்கல வழக்கே.

குழூஉக்குறி. குழூஉ=கூட்டம். குறி=பெயர். ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்குத் தமக்குள் ஒரு பெயர் வைத்துக்கொள்வது குழூஉக்குறி.

பொன்னைப் பறி எனத் தட்டார் கூறுவர்
கள் குடித்தல்—வெள்ளைக் குதிரை ஏறல்,
சாராயங் குடித்திருக்கிருன்—கருப்பு சாத்தியிருக்கிருன்.

இம்மூன்று வழக்கிலும் பொருளுக்கு இயல்பாயமைந்த சொற்களை நீக்கி வேறு தகுந்த சொற்களை உபயோகிப்பதால் இவை தகுதி வழக்கு என்னப்படும்.

புணரியல்.

புணர்ச்சி. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என இருவிதப்படும். நிலைமொழிக்கும் வருமொழிக்கு மிடையில் வேற்றுமை உருபுகள் பொருந்திவருவது வேற்றுமைப் புணர்ச்சியாம்.

உ-ம். நீர் குடித்தான், நீரைக் குடித்தான். இவ்வாக்கியங்களில் வேற்றுமையுருபு மறைந்தும், வெளிப்பட்டும் நிற்கிற

தல்லவா ? அல்வழிப்புணர்ச்சியாவது நிலைமொழிக்கும் வருமொழிக்கு மிடையில் வேற்றுமை உருபுகள் பொருந்த அவசியமில்லாத புணர்ச்சியாம்.

உ-ம். மரம் காய்த்தது, பெரிய குதிரை. இவ்வாக்கியங்களில் எவ்வித வேற்றுமை உருபுக்கும் அவசியமில்லையே.

வேற்றுமைப் புணர்ச்சி. தொகை, விரி என இருவிதப்படும். நிலைமொழி வருமொழிக்கு இடையில் 2 லிருந்து 7 வரையுமுள்ள வேற்றுமை உருபுகள் தொக்கு (மறைந்து) நின்றால் தொகை என்றும், அவ்வுருபுகள் தோன்றி நின்றால் விரி என்றும் கூறப்படும்.

உ-ம். வேற்றுமை.	தொகை	விரி
2.	நீர் குடித்தான்	நீரைக்குடித்தான்
3.	தலை வணங்கினன்	தலையால் வணங்கினன்
4.	தாலிப்பொன்	தாலிக்குப்பொன்
5.	மலைவீழருவி	மலையிலிருந்து வீழருவி
6.	மன்னன்புகழ்	மன்னனது புகழ்
7.	அடிவீழ்ந்தான்	அடியில் வீழ்ந்தான்

இவ்வாறு பிற உதாரணங்களும் கூறுக.

முதல் வேற்றுமையும் 8-ம் வேற்றுமையும் தமக்கென ஒரு உருபு பெற்று நில்லாமையால் இவற்றுடன் சேர்க்கப்பெறவில்லை.

"இரண்டு முதலாம் இடை ஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே." (23)

அல்வழிப் புணர்ச்சியும் தொகைநிலை, தொகாநிலை என இருவகைப் படும். தொகை நிலையாவது நிலைமொழி வருமொழிகட்கு இடையில் பதம் தொக்கு நிற்பது. இந்த அல்வழித் தொகைநிலை 5 வகைப்படும். அவையாவன.

உ-ம். 1.	வினைத்தொகை	உ-ம். ஊறுகாய், வளர்பிறை
2.	பண்புத்தொகை	வட்டக்கல், கருங்குதிரை
3.	உவமைத்தொகை	குருவிகூப்பிடு, மழைக்கை
4.	உம்மைத்தொகை	ராமலட்சுமணர், நாலரை
5.	அன்மொழித்தொகை.	துடியிடை. (வந்தாள்)

விளக்கம். (1) வினைத்தொகையில் நிலைமொழி ஒரு வினைப் பகுதியாகவும், முக்காலத்துக்கும் பொதுவாகவும் நின்று ஒரு பெயரைச் சேர்கிறது அப்பகுதி விரியின், பெயரெச்சமாக மூன்று காலங்களிலும் தோன்றிப் பெயரெச்சத் தொடராகும். ஊறுகாய் என்னும் வினைத்தொகை விரியின், ஊறிய காய், ஊறுகிற காய், ஊறும் காய் என்றாகும்.

"காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை." (24)

(2) பண்புத் தொகையாவது வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியவற்றுள் ஒரு பண்புப் பெயருக்கும் வருமொழிக்கும் இடையில் 'ஆகிய' என்பது தொக்கு நிற்பது:—கருங்குதிரை, இது கருமை யாகிய குதிரை என விரியும்.

"பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்,
ஒரு பொருட்கு இரு பெயர் வந்தவும் குணத்தொகை" (25)

(3) உவமைத்தொகை. இருவார்த்தைகட்கு இடையில் போல, போன்ற முதலிய உவமை உருபுகள் மறைந்து வருதல். குருவி கூப்பிடு—இது குருவிபோலக் கூப்பிடு என்று பொருள் தருவதை உணர்க.

"உவமை உருபிலது உவமைத்தொகையே." (26)

(4) உம்மைத்தொகை. இரு வார்த்தைகட்கு இடையில் உம் என்பது மறைந்து வருதல்:—ராம லட்சுமணர் என்பது ராமனும் லட்சுமணனும் என வருதலைக் காண்க.

"எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்
எனும் நான்கு அளவையுள் உம் இலது அத்தொகை." (27)

(5) அன்மொழித்தொகை. மேற்கூறிய நான்குடன் வேற்று மைத்தொகையும் சேர்த்து ஐந்து தொகைகளிலும் வந்தமொழி, அங்கு இல்லாத மற்றொன்றைக் குறிப்பது. துடியிடை என்பது துடி போன்ற இடை என உவமைத் தொகையாகும்; ஆனால் துடியிடை வந்தாள் என்று கூறும்போது அத்தகைய இடையை உடைய ஒரு பெண் வந்தாள் என்று அங்கு இல்லாத மொழியாகிய பெண்ணை வரு விப்பதால் அன்மொழித்தொகை.

"ஐந்தொகை மொழிமேல் பிற தொகல் அன்மொழி." (28)

கீழ்க்கண்டவை என்ன தொகை எனக்கூறுக:—உழுபடை, சதுரக்கல், இன்சொல், வேய்த்தோள், முக்குணம், செந்தாமரை, தோய் தயிர், சுடுகாடு, பவளவாய், இராப்பகல், நாழியாழாக்கு, பொற்றொடி (வந்தாள்) பூங்குழல் (தோன்றினாள்), கயற்கண், மோர்குடி.

குறிப்பு:—ஒரு சிறப்புப்பெயரும் ஒரு பொதுப் பெயருமாகத் தொடர்ந்து ஒரு பொருளைக் குறிப்பிடுவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

உ-ம். பனைமரம், சாரைப்பாம்பு.

பண்புத்தொகை வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் நான்கு விதத்தில் வரும்.

உ-ம்.	கருங்குதிரை	வண்ணப் பண்புத்தொகை.
	வட்டக்கல்	வடிவுப் ,,
	முக்குணம்	அளவுப் பண்புத்தொகை
	துவர்க்காய்	சுவைப் ,,
	செங்நிறக் குவளை—பன்மொழித்தொடர்.	

உவமைத்தொகை வினை, பயன், மெய், உருபு என நான்குவிதப் படும்.

உ-ம்.	குருவி கூப்பிட்டான்	—வினை உவமைத்தொகை
	மழைக்கை	—பயன் ,,
	வேய்த்தோள்	—மெய் ,,
	பவளவாய்	— உருபு ,,
	மரகதக் கிளிமொழி	—பன்மொழித்தொடர்.

தொகை. வேற்றுமைத் தொகையும், அல்வழித்தொகை 5 மாக மொத்தம் 6 ஆகிறது.

"வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை,
அன்மொழி என அத்தொகை ஆறும்." (29)

தொகாநிலைத் தொடர். தொகை நிலை எனின் நிலைமொழி வரு மொழிகட்கிடையில் வார்த்தைகள் தொக்கு நிற்பன என்று கண்டோம். தொகாநிலை எனின் நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் வார்த்தை கள் மறையாது நிற்பதாம். எடுத்துக்கொண்ட சொற்றொடரில் நிலை மொழியின் இலக்கணத்தைக்கொண்டே இன்னதொடர் எனக் கூறுவது வழக்கு. தொடர்களாவன :—

உ-ம்.	1. எழுவாய்த்தொடர்	மன்னன் வந்தான்
	2. விளித் ,,	மன்ன ! கேள்
	3. தெரிநிலை பெயரெச்சத்தொடர்	—படித்த மாணவன்
	குறிப்புப் ,,	நல்ல மாணவன்
	4. தெரிநிலை வினை எச்சத்தொடர்	—ஓடிச்சென்றான்
	குறிப்பு ,,	மெல்லச்சென்றான்
	5. தெரிநிலை வினைமுற்றுத்தொடர்	—கண்டான் சீதையை
	6. குறிப்புவினை முற்றுத்தொடர்	—கொடியன் கட்டியங் காரன்
	7. இடைச்சொல் தொடர்	மற்றொன்று
	8. உரிச்சொல் தொடர்	நனிபேதை, மாதவம்
	9. அடுக்குத்தொடர்	பாம்பு பாம்பு.

"வேற்றுமை ஐ முதல் ஆறும். அல்வழி
தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி
எழுவாய், விளி, ஈரெச்சம், முற்று, இடை, உரி,
தழுவுதொடர், அடுக்கு என ஈரேழே." (30)

குறிப்பு:—வேற்றுமைப் புணர்ச்சியில் 2-லிருந்து 7 வரையுமுள்ள ஆறிலும் தொகையும் தொடரும் உண்டு. அல்வழிப் புணர்ச்சியில் தொகை:—வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என 5 விதங்களும், தொடர்:—எழுவாய், விளி, பெயரெச்சம், வினைஎச்சம், தெரிநிலை வினைமுற்று, குறிப்புவினை முற்று, இடைச்சொல், உரிச்சொல், அடுக்குத்தொடர் என 9 விதங்களுமாக மொத்தம் 14 ஆகின்றன.

பொருட் புணர்ச்சி. முந்திய வருடத்திற்குரிய பாகத்தில் நிலைமொழி ஈற்றெழுத்துடன் வருமொழி ஆரம்பம் எவ்வாறு சேர்கிறதெனத் தெரிவித்தோம். அது எழுத்துப்புணர்ச்சி என்று சொல்லப்படும். இனி நிலைமொழி வருமொழிகளின் சேர்க்கை வேற்றுமை சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது வேற்றுமை சம்பந்தப்படாத அல்வழியானால் எவ்வாறு புணரும் என, பொருள்பற்றிச் சேர்க்க வேண்டியதிருக்கிறது. இவ்வகைப் புணர்ச்சியே பொருட்புணர்ச்சி என்னப்படும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று ண், ன் (1) வருமொழி முதலில் வல்லினம்வரின் முறையே ட், ற் என்று மாறும்.

(2) வருமொழி முதலில், மெல்லினம், இடையினம் வரினும், (3) அல்வழிப்புணர்ச்சியாயினும் இயல்பாகவே இருக்கும்.

1. மண்+குடம்=மட்குடம். பொன்+குடம்=பொற்குடம். 2. மண்மலை, பொன்மலை, மண்யானை, பொன்யானை, வேற்றுமையில் பிற இனங்கள் வர, ண, ன—இயல்பாயிற்று. 3. மண், பொன்—என்பவற்றோடு பெரிது, மலர்ந்தது, வலிது என்னும் சொற்களைச் சேர்த்து அல்வழியில் ண, ன மூன்றினத்திற்கும் இயல்பாயிருப்பதைக் காண்க.

"ண, ன வல்லினம் வர ட, ற வும்
பிறவரின் இயல்புமாதும் வேற்றுமைக்கு.
அல்வழிக்கு அனைத்து மெய்வரினும் இயல்பாதும்மே." (31)

நிலைமொழியீற்று ல, ள (1) வேற்றுமையில் வருமொழி முதலில் வல்லினம் வரின் முறையே ற, ட வாக மாறும். (2) அல்வழியில் மாறியும் மாறாமலும் வரும். (3) மெல்லினம் வரின் முறையே ன, ண வாக மாறும். (4) இடையினம் வரின் இயல்பாகவே இருக்கும்.

(1) பாற்குடம், கட்குடம். (2) கோல்+கொடிது=கோற்கொடிது. வாள்+கொடிது=வாட்கொடிது. (3) கல்+மலை=கன்மலை, வாள்+மாண்பு=வாண் மாண்பு. (4) கால் யாது, முள்வலிது.

"ல, ள வேற்றுமையில் ற, ட வும் ;
அல்வழி அவற்றேடு உறழ்வும் வலிவரினும்.
மெலிமேவின் ன, ண வும், இடைவரின்
இயல்பும் ஆதும், இருவழியாலும் என்ப." (32)

வருமொழி ஆரம்ப	(1) த	நிலைமொழி	ன்,	ல்	முன்	ற	ஆகும்
,,	(2) ந	,,	,,	,,	,,	ன	,,
,,	(3) த		ண்,	ள்	,,	ட	,,
,,	(4) ந	,,	,,	,,	,,	ண	,,

1. பொன்+தீது=பொன்றீது. கல்+தீது=கற்றீது.
2. பொன்+நன்று=பொன்னன்று. கல்+நன்று=கன்னன்று
3. மண்+தீது=மண்டீது. கள்+தீது=கட்டீது
4. மண்+நலம்=மண்ணலம். எள்+நெய்=எண்ணெய்.

"ன, ல, முன் ற, ன வும்
ண, ள, முன் ட, ண வும்
ஆகும் த, ந க்கள் ஆயும் காலே." (33)

அல்வழியில் வருமொழி முதலில் தகரம் வர, தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்து நிற்கிற நிலைமொழியீற்று ல், ள், ஆய்தமாக மாறும்.

கல்+தீது=கஃறீது. முள்+தீது=முஃடீது.

"குறில்வழி ல, ள்—த அணையின்
ஆய்தமாகவும் பெறும் அல்வழியானே." (34)

தனிக்குற்றெழுத்தோடன்றி, மொழிக்கு ஈற்றில் நிற்கும் ல், ள் (1) அல்வழியில் வருமொழி முதலின் த மாறுபட்டவுடன் கெடும். (2) அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டிடத்திலும் வருமொழி முதலின் ந மாறுபட்டவுடன் கெடும், (3) வல்லினம் வரின் இயல்பாகியும், மாறுபட்டும் வரும்.

1. வேல்+தீது=வேறீது. வேள்+தீயன்=வேடீயன்
2. தோன்றல்+நன்மை=தோன்றனன்மை. வேள்+நன்மை=வேணன்மை.
3. கால்+கடிது=கால்கடிது. வேல்+படை=வேற்படை
கள்+கொடிது=கள்கொடிது, கள்+கொடுமை=கட்கொடுமை

"குறில் செறியா ல, ள
அல்வழிவந்த தகரம் திரிந்தபின் கெடும்,
ஈரிடத்தும் வரும் ந திரிந்தபின் மாய்வும்,
வலிவரின் இயல்பும் திரிபும் ஆவன உள, பிற." (35)

தனிக்குற்றெழுத்தோடன்றி மொழிக்கு ஈறுகவரும் ண், ன், வருமொழி முதலின் ந திரியவும் கெடுகின்றன.

தூண்+நன்று=தூணன்று. கோன்+நல்லன்=கோனல்லன்.

"குறிலணைவில்லா ண, னக்கள்
வந்த நகரம் திரிந்துழி நண்ணும் கேடே." (36)

வருமொழியுடன் சேரும்போது, மென்றொடர் குற்றியலுகர மொழிகளின் சில மெல்லினங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லின மாகின்றன.

இரும்பு+பாதை=இருப்புப்பாதை. கரும்பு+கட்டி=கருப்புக்கட்டி. மருந்து+பை=மருத்துப்பை. குரங்கு+மனம்=குரக்குமனம்.

"மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில்
தம் இன வன் றொடர், ஆகா மன்னே." (37)

நெடில் தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களிலுள்ள ட், ற் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டிக்கின்றன.
ஆடு+கால்=ஆட்டுக்கால். முரடு+மனிதன்=முரட்டு மனிதன்.
வயிறு+கடுப்பு=வயிற்றுக்கடுப்பு. சோறு+வளம்=சோற்றுவளம்.

"நெடிலோடு உயிர்த்தொடர் குற் றுகரங்கள்
ட, ற, ஒற்று இரட்டும், வேற்றுமை மிகவே." (38)

நிலைமொழியீற்று ய், ர், ல் மெய்களின் முன் க, ச, த, ப அல் வழியில் (1) இயல்பாகவும் இருக்கும். (2) இரட்டிக்கவும் செய்யும். (3) வேற்றுமையில் வந்தால் இரட்டிக்கவும் செய்யும்; இன எழுத் தாகவும் மாறும்.

1. வேய் கடிது, வேர் சிறிது, தாழ்குழல்.
2. மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், யாழ்க்கருவி.
3. நாய்க்கால், தேர்த்தட்டு, ஊழ்ப்பயன்.
4. வேய்ங்குழல், ஆர்ங்காடு, பாழ்ங்கிணறு.

"ய, ர, ழ முன்னர் கசதப அல்வழி
இயல்பும் மிகலுமாகும். வேற்றுமை
மிகலும், இனத்தோடுறழ்தலும் விதிமேல்." (39)

ஆ, மா என்னும் பெயர், மியா என்னும் இடைச்சொல், எதிர் மறை வினைமுற்று இவைக்குப் பின்வரும் வல்லினம் இரட்டிக்காது.

உ-ம். ஆ+குறிது=ஆகுறிது. மா+சிறிது=மாசிறிது. கேண் மியா+தேவா=கேண்மியா தேவா. உண்ணு+பன்றிகள் =உண்ணு பன்றிகள்.

"அல்வழி ஆ, மா, மியா, மூற்று முன்மிகா." (40)

தனிக்குற்றெழுத்தை அடுத்து நிற்கின்ற ஆ குறுகி, உகரம் சேர்த்து வருகிறது.

உ-ம். நிலா—நிலவு. கனா—கனவு

"குறியதன்கீழ் ஆ குறுகலும்
அதனோடு உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்." (41)

வகர இறுதி என்னும் வ் பெற்று நிற்கும் சுட்டுப்பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது 'அற்று'ச் சாரியை பெறுகின்றன.

உ-ம். அவ் + ஐ=அவற்றை. இவ்+ஐ=இவற்றை. உவ்+ஐ =உவற்றை.

"வவ்விறு சுட்டுக்கு அற்று உறல் வழியே." (42)

'அத்து' என்னும் சாரியையின் அ, நிலைமொழி யீற்றில் அகரம் இருப்பின் கெடுகிறது.

உ-ம். மக+அத்து=மகத்து. மர+அத்து=மரத்து

"அத்தின் அகரம் அகர முனை இல்லை." (43)

'வாழிய' என்னும் மொழியின் ஈற்று ய வருமொழியோடு புணரும்போது கெட்டு, இயல்பாகவே இருக்கின்றது.

வாழிய+கொற்ற=வாழிகொற்ற.

"வாழிய என்பதன் ஈற்று உயிர்மெய்
ஏகலும் உரித்து, அஃது ஏகினும் இயல்பே." (44)

யாப் பிலக்கணம்.

யாப்பு=செய்யுள். செய்யுளைப்பற்றிக்கூறும் இலக்கணம் யாப் பிலக்கணம் எனப்படும். பின்வரும் பாட்டைக் கவனியுங்கள் :—

நன்றி—ஒரு வருக் குச்—செய் தக் கா—லன் னன்றி
என் று—தருங் கொ—லென வேண் டா—நின்று
தள ரா—வளர் தெங் கு—தா ளுண் ட—நீ ரைத்
தலை யா லே—தான் தரு த—லால்.

இப்பாட்டில் நான்கு வரிகள் இருக்கின்றன. யாப்பில் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு அடி எனச் சொல்லப்படும். இனி ஒவ்வொரு அடியையும் கவனியுங்கள்.

முதல் மூன்று அடிகள் 4 பிரிவுகளாகவும், 4-வது அடி மூன்று பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஒவ்வொரு பிரிவும் சீர் எனச் சொல்லப்படும். மேற்கண்ட வெண்பாவில் 15 சீர்கள் இருப்பதை எண்ணிப்பாருங்கள்.

இனி ஒவ்வொரு சீரையும் கவனியுங்கள். சில சீர்கள் இரு பிரிவுகளாகவும், சில சீர்கள் மூன்று பிரிவுகளாகவும் தோன்றுகின்றன. இச்சிறு உட்பிரிவுகளுக்குப் பெயர் அசை யாகும். இவ்வசை எவ்வாறு உண்டாகிறது? வசனத்தில் நாம் எழுதுவதிலிருந்து சொல்லும், அதிலிருந்து சொற்றொடரும் வாக்கியங்களும் கொள்கிறோமல்லவா? அவ்வாறே செய்யுளில் எழுத்துகட்குரிய ஒலியில் அசையும், பின் சீரும், பின் அடியும் கொள்ளப்படுகின்றன.

எழுத்து. எழுத்துக்களை அவற்றின் ஒலி அளவாகப் பிரிப்பின் அவை குறில், நெடில் என்னும் இருவிதங்களுள் அடங்கும். (மெய் எழுத்துக்கள் தமது அரை மாத்திரை ஒலியை யாப்பிற் பிரயோஜனப் படுத்தா.) இவ்வெழுத்துக்களுடைய ஒலியின் அசைவே அசை எனப்படும்.

அசை. ஒலி எவ்வாறு கேட்கப்படுகிறது?

ஹார்மோனியத்தின் சரிகமபதநி என்னும் 7 சுரங்களில் முதல் இரண்டையும் நான் கூறும் முறையிற் கவனியுங்கள். ச என்னும் முதல் சுரம் சா என்ன ஒலிக்கும்போது அதன் ஒலி எவ்வாறு கேட்கிறது? இடையில் அலைவுறுது நேராக இருக்கின்றதல்லவா? இனி 1-ம் 2-ம் சுரங்களை சரி என வாசிக்கும்போது இதன் சத்தம் வளைந்து செல்கிறதல்லவா? இம்முறையிலேயே எழுத்துக்களின் ஒலியசை கணக்கிடப் பெறவேண்டும்.

சா என்பது போன்று நேரே ஒலிப்பது நேரசை.
சரி என்பது போன்று வளைந்து ஒலிப்பது நிரையசை.

ப, பல், பா, பால்:—இவை நேர் என்பது போன்று ஒலிப்பதால் நேரசை.

பல, பலம், பலா, இலான்:—இவை நிரை என்பது போன்றொலிப்பதால் நிரையசை.

நேரசை யாவதென்ன? ஒரு குறில், ஒரு நெடில் தனித்தாவது மெய்யெழுத்துக்களைச் சேர்த்தாவது இசைப்பதாம். நிரையசை யாவதென்ன? இரண்டு குறில் அல்லது ஒரு குறிலுடன் ஒரு நெடில் சேர்ந்து தனித்து, இன்றேல் மெய்யெழுத்துப் பெற்று ஒலிப்பதாம்.

பின் வருவனவற்றின் அசைகளைக் கூறுக:—இவர், ஈ, இது, கொடா, ஆ, நிலா, மதி, பூ, மலர், சிறு, ஆம், சுரு, வை, ஏன், நில், படு, எடா, விடான், வ, வா, இடா, மான், மரை, மது, சுபம்.

சீர். நேர், நிரையசைகள் தனித்தாவது, இரண்டு, மூன்று, நான்கு சேர்ந்தாவது நிற்பது சீர். "நன்றி ஒருவருக்கு" என்ற முதலிற் குறிப்பிட்டிருக்கும் பாட்டின் சீர்களைக் கவனியுங்கள்.

நேர் நேர்-நிரை நிரை நேர்-நேர் நேர் நேர்-நேர் நேர் நேர்-
நேர் நேர்—நிரை நேர்—நிரை நேர் நேர்—நேர் நேர்
நிரை நேர்—நிரை நேர் நேர்—நேர் நேர் நேர்—நேர் நேர்.
நிரை நேர் நேர்—நேர் நிரை நேர்—நேர்

இப்பொழுது உங்களுக்கு அசைகள் சேர்ந்து சீராகி நிற்கும் முறை விளங்குமென நினைக்கிறேன். நேர், நிரை என்னும் இரு அசைகளும் ஒன்றுடனொன்று முன்னும் பின்னுமாகச் சேர்ந்து பல விதமான சீர்களை உண்டாக்கி விடுகின்றன அல்லவா?

நான் பின்காட்டியுள்ள வார்த்தைகளின் சீர்களைக்கூறுக :— (1) தேமா, (2) புளிமா, (3) கூவிளம, (4) கருவிளம். 1. நேர் நேர், 2. நிரை நேர், 3. நேர் நிரை, 4. நிரை நிரை அல்லவா? நீங்கள் இனி நேர், நிரை எனச் சொல்லுவதற்குப் பதிலாக இரண்டு அசைச் சொற்களை இப்போது நான் கூறியுள்ள வாய்பாட்டால் சொல்லுங்கள்.

ஈந்தான், இருந்தான், ஈகிறான், இருக்கிறான். இவைகட்கு வாய்பாடு என்ன?

நேர் நேர்—தேமா நிரை நேர்—புளிமா
நேர் நிரை—கூவிளம் நிரை நிரை—கருவிளம்.

ஈரசைச் சீர்களுடன் நேரும், நிரையும் சேர்ந்து மூவசைச் சீராக்கும். நேரசை சேருமாயின் காய் என்றும், நிரையசை சேருமாயின் கனி என்றும் வாய்பாடு கூறப்படும்.

நேர் நேர் நேர்—தேமாங்காய்	நேர் நேர் நிரை—தேமாங்கனி
நிரை நேர் நேர்—புளிமாங்காய்	நிரை நேர் நிரை—புளிமாங்கனி
நேர் நிரை நேர்—கூவிளங்காய்	நேர் நிரை நிரை—கூவிளங்கனி
நிரை நிரை நேர்—கருவிளங்காய்.	நிரை நிரை நிரை—கருவிளங்கனி.

(காய்ச்சீர் வெண்சீர் எனவும், கனிச்சீர் வஞ்சிச்சீர் எனவும் அழைக்கப்பெறும். ஓர் அசைச்சீர் வெண்பாவின் ஈற்றில்தோன்றும். மாச்சீரும் விளச்சீருமாகிய ஈரசைச் சீர்கள் இயற்சீர் என்றும் அகவற் சீர் என்றும் கூறப்படும்.)

அடி. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் நின்று தளைகளை அடுத்து முடிவது அடியாம்.

(தளை=சீர்கள் ஒன்றோடொன்று சேரும் ஒழுங்கு.)

அவ்வடி—குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்துவகைப்படும்.

குறளடி. இரண்டு சீர்கள் பெற்று நிற்பது குறளடி.

உ-ம். திரைத்த பாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்.

சிந்தடி. மூன்று சீர்கள் பெற்று நிற்பது சிந்தடி.

உ-ம். இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுரக் கத்தினே
ளரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினுய்.

அளவடி. நான்கு சீர்கள் பெற்று நிற்பது. இஃது நேரடி என்றும் கூறப்படும்.

உ-ம். உலகம்யா வையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

நெடிலடி. ஐந்து சீர்களைக் கொண்டுநிற்பது. (நெடில்=நீளம்)

உ-ம். மழைக்கண் மங்கையர் பயிறர மரகத மணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்த
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்கள்
தழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கரிக்கும்.

கழிநெடிலடி. ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களை ஒவ்வொரு அடியும் கொண்டு முடிவது. (கழி=மிகுதியும்)

6 சீர் கழிநெடிலடி.

விடங்கொண்ட மீனைப் போலும் வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பாம்பின் வாயிற் பற்றிய தேரை போலும்
திடங்கொண்ட ராம பாணம் செருக்களத் துற்ற போது
கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினுன் இலங்கை வேந்தன்.

7 சீர் கழிநெடிலடி.

ஒழுகொழி விரிந்த கதிர்மணி வண்ணன் உந்தியந் தாமரை வந்தோன்
முழுமதி கலையுள் நிறைந்தபே ரழகை மொண்டுகொண் டரிபரந் தகன்ற
மழைமதர் நெடுங்கண் தமயந்தி வதனம் வகுத்தனன் கரத்தினு லெடுத்த
புழைவழி தோன்றும் விசும்பினை யன்றோ களங்கமென் றின்னமும் புகல்வர்.

8 சீர் கழிநெடிலடி.

இடம்பொருளே வலைக்குறித்து மடம்புகுந்த நாயெனவே
எங்கேநீ அகப்பட்டாய் இங்கே வாடா

மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே நிராசை
மன்னிடமே இடமந்த மானிலத்தே பொருளும்
திடம்பெறவே நிற்கினெல்லா உலகமும்வந் தேவல்செயும்
இந்தநிலை நின்றோர்கள் சனகன்முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழப் பாரே.

குறிப்பு :—இவ்வாறே 9, 9-க்கு மிக்க சீர்கொண்டுவரும் பாக்களைக் கண்டு கொள்க.

அணி இலக்கணம்.

அணி=அழகு. செய்யுளின் சொற்களை, பொருளை அழகுபெற அமைத்துவரும் முறை அணி என அழைக்கப்படும். சொற்களிற் காட்டப்படும் அழகு சொல்லணி என்றும், பொருளிற் காட்டப்படும் அழகு பொருளணி என்றும் அழைக்கப்படும்.

பொருளணி. தனது கருத்தைப் பலவித அழகுகளுடன் வல்லவன் ஒருவன் கவியில் அமைப்பதுவே அணியாம். இது நூறு வகைப்படும். அவற்றுள் சிலவற்றை இங்கு வரைவாம்.

1. தன்மையணி. இயற்கையிலமைந்துள்ள ஒன்றின் குணம் அல்லது தொழிலின் தன்மையைக் கூறுவது.

உ-ம். (1) யானைக்குங் காலை நில நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

(2) தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தரும்—

இது தன்மை நவிற்சி அணி என்றும், வடமொழியில் சுவபாவோக்தி அலங்காரமென்றும் அழைக்கப்படும்.

2. உவமையணி. "பவளம்போல் செந்துவர் வாய்" இதில் உபமானம், உபமேயம், பொதுத்தன்மை, உவமை உருபு இந்நான்கும் தோன்றி நிற்பதால் விரி உவமை எனப்படும். பவளவாய்—இதில் பொதுத் தன்மையாகிய சிவப்பும், உவமை உருபாகிய போல் என்பதும் மறைந்து வருவதால் தொகை உவமை என்னப்படும்.

மங்கை வதனம் மதியிப் படிமீது
தங்கி யிருந்ததன் மைத்து.

சந்திரன் பூமியிற் கிடப்பது எக்காலத்துமில்லாத காரியமாதலால் இது இல் பொருளுவமை என்னப்படும்.

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—இதில்

உவமை உருபு இடையில் இல்லாது உபமானமும் உபமேயமும் தனித் தனி எடுத்துக்காட்டப்பட்டிருப்பதால் எடுத்துக்காட்டுவமை யணி. உவமை அணி வடமொழியில் உபமாலங்காரம் எனப்படும்.

3. உருவக அணி. உபமேயத்துடன் உபமானத்தை அதன் குணம் அல்லது செய்கை ஒற்றுமையால் ஒப்பிடுவது.

உ-ம். அரக்கர் பாலைத் தயிரானர்
அனுமான் அதற்கோர் மத்தானன். இது

ரூபாலங்காரம் என்றழைக்கப்படும்.

4. தற்குறிப்பேற்ற வணி; இயற்கையாயுள்ள ஒன்றைக் கவி தன் கருத்துக்கு ஏற்ற முறையில் அமைத்துக் கூறுவது.

காலை எழும்பி ; காகுத்தன்
கானம் சென்ருன் என்றறிந்து
சாலப் புலம்புந் தன்மையதாய்த்
தானுய்ச் சேவல் கூவிற்றே.

எழுத்திலக்கணம்.

Form—VI.

எழுத்தின் பிறப்பு. சப்தங்கள் உண்டாகும் விதம் இங்குக் கூறப் படுகிறது. ஒரு ஹார்மோனியத்தை வாசிக்கும்போது அதில் பல சுரங்கள் தோன்றுகின்றன. இதன் காரணம் என்ன? உள்ளிருக் கும் துருத்தியில் நிறைந்த காற்று வெளியேறி வரும்போது அது வெளிப்படும் இசைவாய் (Reeds)க்குத் தக்கதாக ஒலி மாறுகிற தல்லவா? ஒரு மோட்டாரோட்டி தனது வருகையை அறிவிக்க என்ன செய்கிருன்? தனது குழலின் (Bulb) அடி உண்டையை அழுத்த ; அதனுள் நிறைந்தகாற்று குழல் வழியாகச் சென்று வெளிப் படுகிறது. குழலின் உடலமைப்பு, வாயினமைப்பிற்குத் தக்கதாக அதன் சத்தம் மாறுபடுகிறது. அவ்வாறே மனித உடலுள் இருக்கும் காற்றுப் பையிலிருந்து வெளிவரும் காற்ருல், அவனது கருத்துக் கேற்ப தொண்டை, நா, பல், உதடு, மேல்வாய் முதலியன இயங்கு வதால், பற்பல குரல்கள் தோன்றி நிற்கின்றன.

உயிர் எழுத்துக்களையும், வல்லின மெல்லின இடையின மெய் களையும் விளக்கமாக உச்சரித்து அவை உற்பத்தியாகு மிடத்தைக் கூறுங்கள்.

உயிரெழுத்துக்கள் பிறக்குமிடம்		கழுத்து
வல்லினம்	,,	மார்பு
மெல்லினம்	,,	மூக்கு
இடையினம்	,,	கழுத்து
ஆய்த எழுத்து	,,	தலை

உயிர்மெய் எழுத்துக்கள் அவற்றின் முதலெழுத்துக்களின் ஸ்தானங்களிற் பிறக்கும்.

ஆவி, இடைமை இடம் மிடறு ஆகும்,
மேவும் மென்மை மூக்கு, உரம்பெறும் வன்மை. (1)

ஆய்தக்கு இடந்தலை, அங்கா முயற்சி.
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. (2)

இனி ஒவ்வொரு எழுத்தின் ஒலிக்கும் நமது உடம்பின் அவயவங்களின் முயற்சியைக் கவனியுங்கள்.

அ, ஆ—வாய்திறக்கின்றது.
இ, ஈ, எ, ஏ, ஐ—வாய்திறப்பதுடன், அடி நாக்கின் ஓரம் மேல் வாயைப் பொருந்துகிறது.
உ, ஊ, ஒ, ஓ, ஔ—உதடுகள் குவிகின்றன.
க, ங—நாக்கின் அடி மேல்வாயின் அடியைத் தொடுகிறது.
ச, ஞ—நாக்கின் மத்தி மேல்வாய் மத்தியைத் தொடுகிறது.
ட, ண—நாக்கின் நுனி மேல்வாய் நுனியைத் தொடுகிறது.
த, ந—நாக்கின் நுனி மேல்வாய்ப்பல்லின் அடியைப்பொருந்துகிறது.
ப, ம—இரு உதடுகளும் பொருந்துகின்றன.
ற, ன—மேல் வாயில் நுனி நாக்குப் பொருந்துகிறது.
ய—அடிநாக்கு மேல்வாய் அடியைப் பொருந்துகிறது.
ர, ழ—நாக்கின் நுனி மேல்வாயைத் தடவுகிறது.
ல—நாவின் நுனி மேலவாய்ப் பல்லின் அடியைத் தடவுகிறது.
ள—நாவின் நுனி மேல்வாயின் மத்தியைத் தடவுகிறது.
வ—மேல் வாய்ப் பல்லில் கீழ் உதடு பொருந்துகிறது.

உயிரளபெடை. உயிர் எழுத்துக்கள் தமக்கு ஏற்பட்ட மாத்திரைக்கு அதிகமாக அளவு எடுத்து ஒலிப்பது உயிர் அளபு எடையாம் (அளபு எடை=அளவின் மிகுதி). எழுத்துக்கள் எப்போது அளபெடுக்கும் என இனிக்கூறுவோம்.

செய்யுளில் முந்திய சீருடன் பிந்திய சீர் பொருந்தச் சில விதிகள் உண்டு. அவற்றை நீங்கள் யாப்பிலக்கணம் கற்கும்போது அறிவீர்கள். செய்யுளில் முன் சீருடன் பின் வரும் சீர் சேரும்போது ஓசை குறையுமாயின், முன் சீரின் முதல், இடை அல்லது கடையிலுள்ள ஒரு

நெட்டெழுத்து தனது இரண்டு மாத்திரை அளவுக்கு அதிகமாக ஒலிக்கும்படியாக, அந்நெட்டெழுத்தின் இனக்குறிலே அயலில் நாட்டுவர். இதனால் இரண்டு மாத்திரையுள்ள நெடில் மூன்று மாத்திரையாக ஒலிக்கும். இதுவே உயிரளபெடை.

உ-ம். ஓதல் வேண்டும்—ஓஒதல் வேண்டும்.
உறூர்க் குறுநோய் உறூஅர்க் குறுநோய்.
அடா அடுப்பினர்—அடாஅ அடுப்பினர்.

என வார்த்தையின் முதலிலும், இடையிலும், கடையிலும் வருவது காண்க.

இவ்வாறு அளபெடுப்பவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு நெட்டெழுத்துக்களுமாம். 7 நெடில்களும் வார்த்தைக்கு முதல், இடை, கடையாகிய மூவிடங்களிலும் அளபெடுப்பதால் உயிரளபெடை $7 \times 3 = 21$ ஆகிறது. ஆனால் இவற்றில் ஔ வார்த்தைக்கு இடையிலும், கடையிலும் வராத ஒரு எழுத்து ஆதலால் இரண்டு நீங்க உயிரளபெடை 19 ஆகிறது.

பாட்டில் இனிய ஓசை தருவதற்காக குறில், நெடில் எழுத்துக்கள் அளபெடுப்பதுண்டு. அது இன்னிசை அளபேடை எனப்பெயர் பெறும்.

உ-ம். கெடுப்பதும் கெட்டார்க்கு—கெடுப்பதூஉங் கெட்டார்க்கு.
உரனசை உள்ளம்—உரனசைஇ உள்ளம்.

சில சொற்கள் விகாரப்பட்டு அளபெடுத்து, அதேபொருளைத் தருவதுண்டு. இவை சோல்லிசை அளபேடை என்றழைக்கப்படும்.

உ-ம். தழுவி—தழீஇ. குருவி—குரீஇ, வளைந்து—வளைஇ.

	செய்யுள் இசைநிறை அளபெடை	19
	இன்னிசை அளபெடை	1
	சொல்லிசை அளபெடை	1
ஆக உயிரளபெடை		21 ஆகும்.

இசை கெடின் மொழி முதல் இடைகடை நிலை நெடில்
அளபெழும் : அவற்றின் இனக்குறில் குறியே. (3)

ஒரு நெடில் அளபெடுத்து மூன்று மாத்திரையாக ஒலிப்பதை விளக்கினோம். அதற்கு மேலாக அளபெடுக்குமாயின் அது ஈரளபெடை என்று கூறப்படும்.

உ-ம். செறாய்—செறாஅஅய்.

மொழிக்கு ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள். அ முதல் ஔ வரையுமுள்ள 12 உயிர் எழுத்துக்களும் (1) தனியாகவும், (2) மெய்

யெழுத்துக்களுடன் சேர்ந்து உயிர் மெய்யெழுத்தாகவும், (3) ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் மெய்களும் (4) குற்றியலுகரமும் மொழிக்கு ஈற்றில் வரும்.

பின்வரும் மொழிகளின் ஈற்றெழுத்துக்கள் யாவை ?

(1) பொருள்	(2) பொருள்	(3)
அ—	சில—	உரிஞ்—தேய்த்தல்.
ஆ—	நிலா—	மண்
இ—	கிளி—	பொருந்—பொருந்துதல்
ஈ—	தீ—	மரம்
உ—உந்த	பசு—	பொன்
ஊ—மாமிசம்	பூ—	வேய்—மூங்கில்
எ—	தேஎ—கடவுள்	வேர்
ஏ—அம்பு	சே—எருது	வேல்
ஐ—அழகு	மனை—	தெவ்—பகை
ஒ—ஒத்தல்	நொ—வருந்து	புகழ்
ஓ—நீர்மடைப்பலகை	போ—	வாள்
ஔ—பற்றுதல்	வௌ—கொள்ளையிடு.	நன்று (4)

பன்னிரு உயிரும் என்றபோதே உகரம் சேருமாயினும் அது முற்றியலுகரத்தைக் குறிக்கும்படியாக, பிந்தி குற்றியலுகரத்தைத் தனித்துக் கூறப்பட்டது.

ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயுமுகரம் நாலாறும் ஈறே. (4)

சொல் இலக்கணம்.

மொழிகள். மொழிகள் மூவிதமாகும். (1) ஒரு மொழி (2) தொடர் மொழி (3) பொதுமொழி.

ஒருமொழி. தனி வார்த்தை பொருள் தந்து நிற்பது.

உ-ம். நிலம், மலை, சுகம், வந்தான்.

தொடர் மொழி. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வார்த்தைகள் தொடர்ந்து பொருள் தருவது.

உ-ம். இலக்கணம் படிக்கிறேன். இதுவே இன்பம்.

பொதுமொழி. ஒருமொழியாகவும் தொடர்மொழி யாகவும் பொருள்தரக் கூடிய சொல் பொதுமொழி. எவ்வாறு ?

1. பொது மொழி,	2. ஒரு மொழியாக,	3. தொடர் மொழியாக.
தாமரை	தாமரைச்செடி	தாவுகிற மான்
நங்கை	பெண்	நமது கை
கற்றவர்	படித்தவர்	கல் மலை
வேங்கை	வேங்கை மரம்	வேகின்ற கை

தா+மரை, நம்+கை, கல்+தவர், வேம்+கை—தொடர்மொழி' ஒரு மொழியைத் தனிமொழி என்றும், தொடர்மொழியைச் சொற்றொடர் என்றும் கூறினும் ஒக்கும்.

பெயர்ச்சொல், ஆகு பெயர், பொருளிடங் காலம் சினை குணந் தொழிலினடியாகப் பிறந்த ஆகுபெயரை நீங்கள் அறிவீர்கள். வேறு சில ஆகுபெயர்களுண்டு. அவற்றை விளக்குவோம்:—

7. அளவை ஆகுபெயர். அரையில் உடுத்தான். அரை= பாதி அளவு. இது தேகத்தின் பாதியாயிருக்கும் இடத்தைக் குறிப்பதால் ஆகுபெயர். ஒரு எண் அது சம்பந்தமான பொருளைக் குறிப்பின் எண்ண லளவையாகுபெயர். கடையில் பென்சில் விலை கேட்டுவிட்டு, ஒன்று கொடு எனின் ஒன்று என்பது ஒரு பென்சிலைக் குறிக்கிறது. இது எண்ண லளவையாகு பெயர் சர்க்கரையின் விலையை வினவி ஒரு வீசை கொடு எனின், வீசை என்பது வீசை சர்க்கரையைக் குறிக்கிறது. இது நிறுத்தலளவையாகுபெயர். கடலையின் விலையைக் கேட்டு, ஒருபடி கொடு எனின், படி என்பது படிக் கடலையைக் குறிப்பது முகத்தலளவையாகுபெயர். துணியின் விலையைக் கேட்டுவிட்டு 4 கஜம் கொடு என்னும்போது, கஜம் துணியைக் குறிப்பது நீட்ட லளவாகுபெயர்.

8. சொல்லாகுபெயர். சொல்லின் பெயர் அது சம்பந்தமான பொருளைக் கொடுப்பது. அவன் சொல் இனிமையாக இருக்கும்; இதில் சொல் என்பது பதம் எனப் பொருள்படாது நாவன்மையைக் குறிப்பதால் ஆகுபெயர்.

9. தானியாகுபெயர். (தானி=ஸ்தானக்கு உரியது) ஒரு இடத்திலுள்ள பொருளின் பெயர், அது இருந்த இடத்தைக் குறிப்பது; விளக்கு ஒடிந்தது—இதில் விளக்கு என்பது தீபத்தைக் குறியாது தீபம் நின்ற தண்டுக்கு ஆயிற்று. படம் உடைந்தது. படம் என்னும் மொழி சித்திரத்தைக் குறியாது அதன் மீதிருந்த கண்ணாடியைக் குறித்தது.

10. கருவியாகுபெயர். ஒரு காரணத்தால் வந்தபெயர் அதைக் கொண்டுள்ள மற்றொன்றைக் குறிப்பது. திருக்குறள் கற்றான், திருவாசகம் படித்தான் (குறள்=குறுகியது. வாசகம்=வாசிப்பு) என்னும் வாக்கியங்களில் குறள் என்பது குறுகியது என்னும் பொருள் நீக்கி, குறுகிய பாட்டுக்களையுடைய நூலையும், திருவாசகம் என்பது

வாசிப்பு என்னும் பொருளை நீக்கி (மணிவாசகர்) பாக்களையும் குறிப்பதைக்காண்க.

11. காரியஆகுபெயர். ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்துக்கு ஆகிவருவது.

அணி=அழகு. இலக்கியத்திற்கு அழகு செய்யும் முறைபற்றி அணி என்று சொல்லப்படும்.

அணி கற்றவர்—இதில் அணி என்பது அழகைக் குறியாது, அணியிலக்கணத்தைக் குறிப்பதைக் கவனிக்க. (யாப்பு=சேர்மானம்) யாப்பு கற்றேன்—இதில் யாப்பு என்பது அசை, சீர்களின் சேர்மான காரியத்தால் வந்த செய்யுளைக் குறியாது யாப்பிலக்கணத்தைக் குறிக்கிறது. அலங்காரம் கற்றான்—இதில் அலங்காரம் என்னும் இலக்கண காரியம் அவ்விலக்கண நூலை உணர்த்துகிறது.

12. கருத்தாவாகுபெயர். செய்தவன் பெயர் அவனால் செய்யப்பட்ட பொருளுக்கு வழங்குவது.

திருவள்ளுவர் கற்றான்—திருவள்ளுவர் என்பது அவரால் செய்யப்பட்ட குறளைக் குறிக்கின்றது.

சாதிக்கொரு நீதி தருவது மனு. மனு என்பது அவரால் எழுதப்பட்ட மனுநீதியைக் குறிக்கிறது.

13. உவமையாகுபெயர். ஓர் உவமைப்பொருளின் பெயர் அதை ஒத்துள்ள பெரும் பொருளைக் குறிப்பது. பாவை வந்தாள் என்பதில் பாவை என்பது (பதுமை என்னும் பொருளை நீக்கி) அதை ஒத்த பெண்ணைக் குறிப்பதைக் கவனிக்க.

காளை வந்தான்—காளை என்பது அதைப்போன்ற ஆடவனைக் குறித்தது.

இவை அடையடுத்த ஆகுபெயர், இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயரென்றும் வரப்பெறும். எவ்வாறு?

அடையடுத்தவாகுபெயர். நாம் கூறிய ஆகுபெயர்களில் வெற்றிலை, புகையிலை, திருவள்ளுவர் என்னும் பெயர்ச்சொற்களைக் கண்டீர்கள். இவ்வார்த்தைகளால் குறிக்கப்படும் பெயர் இலை, இலை வள்ளுவர் ஆகும். ஆனால் உபயோகத்தில் அவை வெறு, புகை, திரு என அடைமொழிகள் பெற்று வருகின்றன. இவ்வாறு அடைமொழிகள் பெற்றுள்ள ஆகுபெயர்கள் அடையடுத்த ஆகுபெயர்கள். உ-ம்:— திருவாசகம், திருமந்திரம், திருமூலர், மருக்கொழுந்து.

இன்னும் சில பெயர்கள் இருமுறை மும்முறை மடிந்து பொருள் தருதல் உண்டு. அவை முறையே இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர் எனச் சொல்லப்படும்.

உ-ம் :—வரை ஏறினன். (வரை=கோடு) இஃது ஆகுபெயராக கோடு (கணுக்) களையுடைய மூங்கிலைக் குறித்தது. இவ்வாகுபெயர் பின் இரண்டாம் முறையாக மூங்கில் விளையும் மலையைக் குறிக்கிறது. ஆகவே இது இருமடியாகு பெயர்.

கார் அறுவடையாயிற்று. (கார்=கருப்பு) இஃது ஆகுபெயராக கருநிறங்கொண்ட மேகத்தைக்குறித்து, பின்னர் இருமடியாகுபெயராக அம்மேகந்தோன்றும் கார் காலத்தைக் குறித்து, மூன்றுவதாக அக்காலத்தில் விளையும் நெல்லைக்குறித்து நிற்பதால் மும்மடியாகு பெயர்.

பொருள் முதல் ஆறோடு, அளவை, சொல், தானி
கருவி, காரியம், கருத்த னுதியுள்
ஒன்றன் பெயரால் அதற்கியை பிறிதைத்
தொன் முறை உரைப்பன ஆகுபெயரே. (5)

வேற்றுமை. வேற்றுமை உருபுகளையும் அவற்றின் பொருள் களையும்பற்றி முந்திய இரு வகுப்புக்களிலும் கற்றிருக்கிறோம். இன்னும் சில விவரங்கள் அறிவிப்போம்.

1. செய்பவன் முதல் வேற்றுமையாக இருந்தால், செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகத் தோன்றும்; செயப்படு பொருள் முதல் வேற்றுமையானால், செய்பவன் மூன்றும் வேற்றுமை யாகும் :—

கண்ணகி மதுரையை எரித்தாள்.
கொலைஞர் கோவலனை வெட்டினர்.

இவ்வாக்கியங்களில் காரியத்தைச் செய்த 'கண்ணகி,' 'கொலைஞர்' இரண்டும் முதல் வேற்றுமை. செயப்படு பொருளாகிய 'மதுரையை,' 'கோவலனை' இரண்டும் இரண்டாம் வேற்றுமை.

மதுரை கண்ணகியால் எரிந்தது
கோவலன் கொலைஞரால் வெட்டப்பட்டான்

இவ்வாக்கியங்களில், முன்பு செயப்படுபொருளாக விருந்த 'மதுரை,' 'கோவலன்' இருசொற்களும் எழுவாயாக வர, முன்பு முதல் வேற்றுமையிலிருந்த கண்ணகி, கொலைஞர் இரண்டும் மூன்றும் வேற்றுமையில் வந்தன.

2. முதல் வேற்றுமைக்கருத்தா திணை, பால், இடங்கள் ஒத்த செய்வினையையும், மூன்றும் வேற்றுமைக்கருத்தா செயப்படுபொருள் பெற்ற செயப்பாட்டு வினையையும் கொண்டு முடியும்.

நான் சென்றேன். நான் முதல் வேற்றுமை; சென்றேன். செய்வினை.

தச்சனால் வீடு கட்டப்பட்டது. தச்சனால்—மூன்றாம் வேற்றுமை; வீடு—செயப்பொருள். கட்டப்பட்ட—செயப்பாட்டு வினை.

3. ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள் 4 விதப்பொருளில் வரும்.

மதுரையின் வடக்குச் சிதம்பரம் —திசை
மதுரையின் நெல்வேலி நூறு மைல் —வழி அளவு
கண்ணனில் மூவாண்டு மூத்தவன் —கால அளவு
அரசரிற் பெரியோர் அடிகள் —பண்பு அளவு

ஒப்புப்பொருள்.

காக்கையிற் கரிது களம்பழம்—போல: ஒப்புப்பொருள்.
—விட: எல்லைப்பொருள்.

5. 7-ம் வேற்றுமை உருபுகள்.

"கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின்,
முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல்,
பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி,
உள், அகம், புறம், இல், இடப்பொருள் உருபே." (6)

வினைச்சொல்.

பலவித வினைகள். வினைச்சொற்கள் (1) தன்வினை, பிறவினை என்றும், (2) எதிர்மறைவினை, உடன்பாட்டு வினை என்றும், (3) ஏவல் வினை, வியங்கோள் வினை என்றும், (4) செய்வினை, செயப்பாட்டு வினை என்றும் (5) செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை என்றும் 10 விதங்களாகும்.

(1) தானே ஒருவினையைச் செய்வது தன்வினை என்றும், பிறருக்குச் செய்விப்பது பிறவினை என்றும் அழைக்கப்படும்.

உ-ம். நான் உண்டேன், நான் உண்பித்தேன்.

(2) ஒரு காரியம் செய்ய உடன்பட்டு நிற்றல் உடன்பாட்டு வினை என்றும், எதிர்த்து மறுத்தல் எதிர்மறை என்றும் சொல்லப் பெறும்.

உ-ம். நான் வருவேன், நான் வரேன்.

(3) முன்னிற்போனைக் கட்டளையிடுவது ஏவல்வினை என்றும், யாவருக்கும் பொதுவாகும் முறையில் வாழ்த்துதல் வியங்கோள்வினை என்றும் சொல்லப்பெறும்.

உ-ம். நீவா, வாழ்க.

(4) ஒருவன் ஒரு காரியத்தைச் செய்தான் என்பது செய்வினையாகவும். ஒரு காரியம் ஒரு கர்த்தாவால் செய்யப்பட்டதென்பது செயப்பாட்டு வினையாகவும் கூறப்படும்.

உ-ம். நான் அப்பாட்டைப் பாடினேன், அப்பாட்டு என்னால் பாடப்பட்டது.

(5) செயப்படுபொருள் ஏற்காதவினை செயப்படுபொருள் குன்றியவினை என்றும், செயப்படுபொருள் ஏற்கும் வினை செயப்படுபொருள் குன்றாவினை என்றும் சொல்லப்படும்.

(குன்றுதல்=குறைதல்)

உ-ம். நான் நின்றேன். நான் (பகைவனைக்) கொன்றேன்.

பொதுவினை.

1. உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவினை.
உண்ணாய் — உண் , உண்ணாதே.
சாவான் — இறப்பான், இறவான்.

2. ஏவலுக்கும் வியங்கோளுக்கும் பொதுவினை.

வேண்டும். நீ செய்யவேண்டும். கட்டளை, (ஏவல்). நாம் செய்யவேண்டும்—வேண்டுதல், வியங்கோள். (இதை ஏவலுக்கும், வியங்கோளுக்கும் பொதுவெனக்கூறாது, ஏவற் கண்ணிய வியங்கோள் எனப் பேர் கூறுவர் சான்றோர்.)

3. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.

அரிகொன்ற கரி. அரியால் கொல்லப்பட்ட கரி என்றும், அரியைக்கொன்ற கரி என்றும் பொருள் தருகிறது. (அரி-சிங்கம், கரி—யானை).

பெண் பார்த்த பையன். பெண்ணால் பார்க்கப்பட்ட பையன் என்றும், பெண்ணைப் பார்த்த பையன் என்றும் பொருள் தருகிறது.

முதலைகண்ட பையன். முதலையால் காணப்பட்ட பையன் என்றும், முதலையைக்கண்ட பையன் என்றும் பொருள் தருகிறது.

4. செயப்படுபோருள் குன்றியதற்கும் குன்றாததற்கும் போதுவினை.

இரத்தமின்மையால் அவன் தேகம் வேளுத்தான்-குன்றியவினை.
அழுக்கு நீங்க, அவன் தன் ஆடைகளை வேளுத்தான்—குன்றாவினை.
களைப்படைந்த அவன் கட்டிலிற் படுத்தான்—குன்றியவினை.
பகைவரைப் போர்க்களத்தில் அவன் படுத்தான்—குன்றாவினை.

5. தன்மை, முன்னிலை, ஏவல் வினைமுற்றுக்கள் இருதிணைக்கும் பொதுவாக வருவன.

6. வியங்கோளும், வேறு, இல்லை, உண்டு, அன்று முதலிய குறிப்புவினை முற்றுக்களும் ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாக வருவன.

7. தன்மையிலும், முன்னிலையிலும், பலர்பால் படர்க்கையிலும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்றுக்கள் வரா; ஆனால் ஆண் பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் படர்க்கைப் பால்களில் வரும். உ-ம். அவன் வரும், அவள் வரும், அது வரும், அவைவரும். இக்காலத்தில் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று முன்னிலைப்பன்மை ஏவலாயும் வரும்.

உ-ம். நீர் எழுதும்.

செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம்.

செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சமெனின், செய்யா என்பது போன்று வருகிற வினை எச்சங்கள் எனப்பொருள்.

உ-ம். தோன்றா, உண்ணா, சொல்லா.
இவற்றின் பொருள்கள் உடன்பாட்டில் உள்ளன.
தோன்றா நின்றான்—தோன்றி நின்றான்.
உண்ணா நின்றான்—உண்டு நின்றான்.
சொல்லா நின்றான்—சொல்லி நின்றான்.

செய்யா என்னும் விதிபற்றிய சொற்கள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும், ஈறுகெட்ட எதிர்மறை வினை எச்சமாகவும், பலவின்பால் எதிர்மறை வினை முற்றாகவும் வரும்.

உ-ம் :—

உண்ணா (த) குதிரை—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
உண்ணா (து) நின்றான்— ,, ,, வினையெச்சம்
இக்குதிரைகள் உண்ணா—எதிர்மறை பலவின்பால் வினைமுற்று.

ஏவலுக்கும் பகுதிக்கும் வித்தியாசம்.

ஏவல் ஒருமை வினைமுற்று—நீ நட
வினைப்பகுதி (நடந்தனன்) நட

(1) வினைப்பகுதிக்கும் ஏவல் ஒருமை வினை முற்றுக்கும் உருவில் எவ்வித பேதமும் இல்லை ஆயினும், சொற்கள் பிரயோகிக்கப் படும் முறையில் பேதமுண்டு. ஏவல் வினைமுற்று முன்னிற்போனை ஏவுகிறது; பகுதியோ வினையின் தொழிலைக்காட்டுவதன்றி வேறு எதுவும் செய்வதில்லை.

(2) வினைப்பகுதி ஏவல் வினைமுற்றின் உருவத்திலேயே எப்போதும் இருக்க, ஏவல்வினைமுற்று ஆய், தி, உம். ஈர், ஆ+தே, அல்+மின் விகுதிகள் பெற்று வருகிறது.

உ-ம். உண்ணுய், செல்தி, செய்யும், செய்யீர், செய்யாதே செய்யன்மின்.

(3) ஏவல் எடுத்துச் சொல்லும், பகுதி படுத்துச் சொல்லும் (எடுத்து=வேகமாய், படுத்து=சாதாரணமாய்)

முற்றெச்சம்.

(1) வினைமுற்று எச்சமாகப் பொருள் தரின் முற்றெச்சமென்று சொல்லப்படும்.

உ-ம். கண்ணன் வந்தான், படித்தான், சென்ருன். இவ் வாக்கியம் கண்ணன்வந்து படித்துச்சென்ருன் எனப் பொருள் தருகிறது. வந்தான், படித்தான் என்னும் தெரிநிலை வினைமுற்றுக்கள் எச்சமாயின.

(2) வேடன் வில்லினன் வந்தான்—இதில் வில்லினன் என்னும் குறிப்புவினைமுற்று, வில்லையுடையவனுக எனக் குறிப்பு வினையெச்சமாகப் பொருள் தந்தது.

(3) வில்லினன் வேடன் வந்தான்—இதில் வில்லினன் என்னும் குறிப்புவினைமுற்று வில்லினனுகிய வேடன் எனப் பெயரெச்சமாகப் பொருள் தந்தது.

(4) வந்தான் மனுஷன் ஏன் வாய்திறப்பான்!—இதில் வந்தான் என்னும் தெரிநிலை வினை முற்று வந்த என்னும் பெயரெச்சமாகப் பொருள் தந்தது.

இடைச்சொல்.

மற்று. மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை, பிறிது என்னும் முப்பொருளிலும் வரும்.

1. உ-ம். ஆக்கலும் மற்று அழித்தலும் ஆண்டவன் திரு விளையாட்டே. அடிப்பதும் மற்று அணைப்பதும் அன்னையர் இயல்பே. ஆக்கலும், அடித்தலும் என்னும் இருவினைகளும் அவைகட்கு மாறுபாடான அழித்தலும், அணைத்தலும் என்னும் வினைகளை 'மற்று' என்னும் சொல்லை இடையிற்கொண்டு வந்ததைக் கவனிக்க. (வினைமாற்று=மாறுகியவினை.)

2. மற்றென்னையாள்க—இங்கு மற்று என்பதற்கு எவ் விதப் பொருளுமின்மையால் அசைநிலை.

3. ஊழிற் பெருவலியாவுள மற்ருென்று சூழினும் தான் முந்துறும்—மற்ருென்று=வேருென்று எனப் பிறிதொரு காரியத்தைக் குறிப்பிடலால் பிறிது. (பிறிது=வேறு.)

4. மற்று 'பின்' என்னும் பொருளிலும் வரும்.

உ-ம். மற்றிவரும் இறப்பர் ஒருநாள். மற்று=பின்.

"வினைமாற்று, அசைநிலை, பிறிது எனும் மற்றே." (7)

கோல். இஃது ஐயம், அசைநிலை என்னும் இருபொருளிலும் வரும்.

1. உ-ம். இங்கு வந்தது நம் மன்னன் கொல்—மன்னனோ என ஐயுற்று வினவுதலால்—ஐயம்.
2. கற்றதனாலாய பயனென் கொல்?—அசைநிலை.
3. கொல்—வினைப்பொருளில் வருவதுமுண்டு நீ கொல் செய்தாய்? நீயா செய்தாய்? என வினவு தலால்— வினை.

"கொல்லே ஐயம், அசைநிலைக் கூற்றே." (8)

தான். இஃது (1) அசைநிலைப் பொருளிலும் (2) தேற்றத்திலும் வரும். உ-ம். கல்லைத்தான், மண்ணைத்தான் காய்ச்சித்தான், குடிக்கத்தான் கற்பித்தானா? என்றதில் 'தான்' என்பது எவ்விதப் பொருளும் தராததால் அசைநிலை.

(2) அவன் தான் திருடன்—அவனே திருடன் எனப்பொருள் தரலால் தேற்றம்.

உரிச்சொல்.

ஒரு குணங்குறித்த பல உரிச்சோல். சால, உறு, தவ, நனி, கூர், கழி இவை மிகுதியைக் குறிக்கும்.

பல குணங்குறித்த ஓர் உரிச்சோல். கடி. கடி எனும் உரிச்சொல் 13 பொருள்தரும். (25-ம், 26-ம் பக்கங்களில் உதாரணங் காண்க.)

"கடி என் கிளவி காப்பே, கூர்மை,
விரையே, விளக்கம், அச்சம் சிறப்பே,
விரைவே, மிகுதி, புதுமை, ஆர்த்தல்,
வரைவே, மன்றல், கரிப்பினுதும்." (9)

பொதுவியல்.

வழாநிலை. (வழாநிலை=பிழைபடா நிலைமை) மொழிகள் வாக்கியத்தில் இலக்கண விதிகள் வழுவாது திணை, பால், எண், இடம், காலம் பொருந்தச் சேர்வது வழாநிலை.

உ-ம். நான் வந்தேன். அவைகள் நாளைவரும். நீர் செல்கிறீர்.

வழுநிலை. மொழிகள் இலக்கண முறை பிழைபட்டுச் சேருதல். இஃது எழுவகைப்படும்.

உ-ம். 1. அவன் வந்தது— திணைவழு
2. அவள் வந்தான்—பால்வழு
3. யான் வந்தான்—இடவழு
4. நாளை வந்தான்—காலவழு
5. கறக்கிற எருமை பாலோ சினையோ? வினாவழு
6. பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்றால்
கொட்டைப்பாக்கு எட்டுப்பணம் என்பது விடைவழு
7. யானை செலுத்துபவன் இடையன்—என்பது மரபு [வழு

வழுவமைதி. இலக்கண முறையிற் குற்றமுள்ளவையாகக் காணப்பட்டாலும் சான்றோரால் சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டவை வழுவமைதியாம். அவை வருமாறு.

(1) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிற் பெயர்கள் உயர்திணைப் பெயருக்குச் சம்பந்தப்பட்டு, அவற்றை அடுத்து நிற்கும் பொழுது உயர்திணை வினையைக்கொண்டு முடிகின்றன.

உ-ம். மன்னன் பொன் பெரியன்—பொருள்
மன்னன் நாடு பெரியன்—இடம்
மன்னன் வாழ்நாள் பெரியன்— காலம்
மன்னன் மூக்குக்கூரியன்—சினை
மன்னன் குடிமை நல்லன்—குணம்
மன்னன் நடை கடியன்—தொழில்

பொன், நாடு, வாழ்நாள், மூக்கு, குடிமை, நடை, இவை பெரிது, கூரியது, நல்லது, கடிது என்னும் வினைபெற்று முடியவேண்டியதிருக்க, உயர்திணைப் பெயரையடுத்து நிற்றலால் பெரியன், கூரியன், நல்லன், கடியன் என உயர்திணை விகுதியில் முடிவுபெற்று நிற்பது வழுவமைதியாம்.

(2) உவகை, உயர்வு, சிறப்பு, சினம், இழிவு இவற்றால் பால் வழு அமைதி வரும்.

உ-ம். ஒருவனை உயர்வுக்காக அவர் வந்தார் எனக் கூறும்போது அவன் என்னும் ஒருமைப்பாலானது அவர் என பன்மைப்பாலாக நிற்பதால் பால்வழு அமைதி.

தாயாக வாழ்கிறான் நம் தலைவன். இதில் தலைவன் என்னும் ஆண்பாலைச் சிறப்பினால் தாயாக எனப் பெண்பாலாகக் கூறுவதும் பால்

வழு வமைதி. தன் புதல்வனை என் அம்மா என அழைப்பது—பால் வழுவமைதி.

(3) திணைவழுவமைதி. அஃறிணையை உயர் திணையாகவும், உயர்திணையை அஃறிணையாகவும் அமைத்துக் கூறுதல் திணைவழு அமைதி.

உ-ம். ஒரு பசுவை என் அம்மை வந்தாள் என்பதில் அஃறிணை யான பசுவை உயர்திணையின் அம்மையாகக் கூறுவதால் திணைவழு அமைதி.

எனது கிளியார் பறந்துவிட்டார். கிளி—கிளியார்—திணைவழு அமைதி.

தம் பொருளென்ப தம்மக்கள்—திணைவழு அமைதி.

(4) இடவழு அமைதி. "மைந்தனே! தாய் உனக்கு மருந் தூட்டுவேனே?" தாய் என்னும் படர்க்கைபெயர் 'நான்' என்னும் தன்மைப் பெயருக்காக வந்து தன்மை வினைகொண்டு முடிவது இடவழு அமைதி. இராமன் என்னும் ஓர் பிரசங்கி "இதனால் இராமன் சொல்வதாவது" எனக் கூறும்போது, இராமன் என்னும் படர்க்கைப்பெயர் நான் என்னும் தன்மையில் வினைகொண்டு முடிவதும் இடவழு அமைதி. தம்பியும் பார்த்தாயல்லவா? இதில் தம்பி=நீ என முன்னிலைப் பொருளில், முன்னிலை வினைகொண்டு முடிவது இடவழு அமைதி.

உ-ம். தன்மை, முன்னிலை, படர்க்கை யிடங்களில் ஓரிடத்துச் சொல் பிறிதோரிடத்துப் பொருள் பெற்று அவ்வினை யால் முடிந்து பொருள் தருவது இடவழு அமைதியாம்.

(5) காலவழு அமைதி. விரைவு, மிகுதி, தெளிவு முதலிய வற்றால், இறந்த, நிகழ், எதிர்காலங்கள் ஒன்றுக்கொன்று வழுவாக உபயோகப்பட்டு, சரி என உபயோகத்தில் நிற்பவை காலவழு அமைதியாம்.

உ-ம். வீட்டுள் இருப்பவனை வெளியிலுள்ளவன் அழைக்கும் போது இதோ வருகிறேன் எனக் கூறுது, நிகழ்காலத் தை "வந்துவிட்டேன்" என இறந்த காலத்திற் கூறுவது காலவழு அமைதி.

சீக்கிரம் சாப்பிடு எனக் கூறும்போது அவ்வாறே சாப்பிடுவேன் என்பதற்குப் பதிலாக "இதோ சாப்பிட்டாயிற்று" என எதிர் காலத்தை இறந்த காலத்திற் கூறுவது காலவழுவமைதி. (விரைவு) "காட்டுப்பாதையாக அவன் சென்றால், தலையை இழந்தான் என நாம் கூறவேண்டியதே." இதில் "இழப்பான்" என எதிர் காலத்திற் கூறவேண்டியதை இறந்த காலத்தில் கூறப்பட்டிருக்கிறது. (மிகுதி.)

எறும்பு முட்டை எடுத்து மேலேறினல் மழை பெய்தது—மழை பெய்கின்றதென்பதைப் "பெய்தது" எனக் கூறல் வழுவமைதி—தெளிவு.

நாங்கள் முன்பு விளையாடுவது இச்சோலே. விளையாடினது என்பதற்குப் பதிலாக "விளையாடுவது" எனக் கூறியது வழு அமைதி. நாங்கள் விளையாடுகிறது இச்சோலே—வழு அமைதி. (இயல்பு)

(1) ஒருமைப் பன்மை மயக்கம். வெயிலெல்லாம் மறைத்தது மேகம். இரண்டுகாலும் வீங்கிற்று. மேற்கண்ட வாக்கியங்களில் வெயில் என்பது ஒருமை, "எல்லாம்" என்னும் பன்மைப் பெயருடன் சேர்ந்து நின்று வழுவமைதி யாயிற்று.

"இரண்டு" என்பது பன்மை. அது கால் என்னும் ஒருமைப் பெயருடன் சேர்ந்து வழுவமைதி யாயிற்று. இவை ஒருமைப் பன்மை மயக்கம் என்றழைக்கப்பட்டன. இதுவும் ஒருமைப் பன்மைப் பால் பற்றியமையால் பால்வழு அமைதியே.

மரபு. சான்றோர்களால் எப்பொருள்கள் எவ்வாறு அழைக்கப் பட்டனவோ, அவ்வாறே அழைத்து வருதல் மரபாம்.

உ-ம்.	குதிரைக்குட்டி.	குதிரைப்பிள்ளை—தப்பு.
	வாழையிலே.	வாழை ஓலே ,,
	பனே ஓலே.	பனே இலே ,,

யானேப்பாகன்—மாவுத்தன். கப்பற்றலேவன்—மாலுமி.
ஆடுமேய்ப்பவன்—இடையன். தேர் செலுத்துபவன் சாரதி.

"எப்பொருள் எச்சொல்லில் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே." (10)

ஒருபொருட் பன்மொழி. ஒரே பொருள் தரும் பல சொற்கள் தொடர்ந்து தோன்றுதற்கு எவ்வித அவசியமும் இல்லேயாயினும், அவை மிகுதிப் பொருள் தந்து நிற்றலால் வழு அமைதியாகவே கொள்க.

மீ மிசை ஞாயிறு	—மிகவும் மேலுள்ள சூரியன்
புனிற்றிளங் கன்று	—மிக இளமையான கன்று
வெங்கோடும் போர்	—மிகக் கொடியபோர்
உயர்ந்தோங்குவரை	—மிக ஓங்கிய மலே
நாகிளங்கமுகு	—மிக இளமையான கமுகு
குழிந்தாழ்ந்த கண்	—மிக ஆழமான கண்

இதுவும் ஒருவித மரபு வழுவமைதி.

இரட்டைக்கிளவி. (கிளவி=சொல். இரட்டைக்கிளவி=இரட்டையாகவரும் சொற்கள்). தனித்து வழங்கப்படாமல் இரட்டையாகவே வழங்கப்படும் சொற்கள் இரட்டைக்கிளவி என்னப்படும்.

உ-ம். பட பட வெனப்பேசினான். வற்றிய ஓலை கலகலக்கும். மட மட வென விழுந்தன. பட பட, கலகல, மட மட இச்சொற்கள் பட, கல, மட எனத் தனித்து வழங்காது இரட்டித்தே நிற்கின்றன. இக்காரணம் பற்றி இரட்டைக்கிளவி எனப்பெயர்.

புணரியல்.

சுட்டெழுத்தைச் சேர்ந்து நிற்கும் வ், வருமொழி முதலில் வல்லினம் வர ஆய்தமாகவும், மெல்லினம் வரின் மெல்லினமாகவும் இடையினம் வரின் இயல்பாகவும் இருக்கின்றது.

உ-ம். அவ்+கடிய=அஃகடிய. அவ்+ஞான்றன=அஞ்ஞான்றன. அவ்+யாவை=அவ்யாவை (இவ்வாறே இவ், உவ் என்பனவற்றோடும் கூட்டுக.)

"சுட்டு வகாம் மூவினம் உற, முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்." (11)

அல்வழிப் புணர்ச்சியில் (1) வன்றொடர்க் குற்றியலுகரமொழிகள் மட்டுமே இரட்டிக்கும். (2) பிற இயல்பாகவே நிற்கும்.

உ-ம். (1) படித்து+தந்தான்=படித்துத் தந்தான். எழுத்து +சிறிது=எழுத்துச்சிறிது (2) ஆறு தலை. எஃகுபெரிது, வரகுசிறிது, வந்து தந்தான் எய்து பொருள்—இவ்வுதாரணங்களில் நெடில், ஆய்தம், உயிர், மென், இடைத்தொடர்க் குற்றியலுகர மொழிகள் புணர்ச்சியில் இயல்பாயிருப்பதைக் காண்க.

"வன்றொடர் அல்லன முன் மிகா அல்வழி." (12)

வேற்றுமைப் புணர்ச்சியில் (1) இடைத்தொடர் (2) ஆய்தத்தொடர் (3) இடையில் மெய் மிகா நெடிற்றொடர் (4) இடையில் மெய் மிகா உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் முன் வல்லினம் இயல்பாகவே இருக்கும்.

உ-ம். (1) மார்பு கடுமை. (2) எஃகு சிறுமை. (3) நாகுதீமை. (4) வரகு கூழ்.

இடையில் மெய் மிகும் நெடிற்றொடரிலும் உயிர்த்தொடரிலும் வருமொழி ஆரம்ப வல்லின மெய் இரட்டித்துவரும்.

உ-ம். சோற்றுப்பானை, வயிற்றுக்கடுப்பு.

"இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இடையில் மிகா
நெடில், உயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை." (13)

(1) மூன்றாம் வேற்றுமை உருபு, (2) அது என்னும் ஆறாம் வேற்றுமை உருபு, (3) இலக்கங்கள், (4) வினைத்தொகை, (5) சுட்டுப் பெயர்களின் முற்றியலுகரங்கட்கு முன்வரும் வல்லினம் இயல் பாகவே இருக்கும்.

உ-ம். (1) அவனொடு கொண்டான், (2) சாத்தனது செவி, (3) ஏழுதலை, (4) விடுகணை, (5) அதுகண்டான், இது குறிது.

"மூன்று, ஆறு உருபு, எண், வினைத்தொகை
சுட்டு ஈறு ஆதம் உகரம், முன்னர் இயல்பாம்." (14)

உயிர் எழுத்துக்களையும், ய், ர், ழ் மெய்களையும் ஈற்றில் கொண்டு வரும் முன்னிலை வினைகளுக்கும், ஏவல் வினைகட்கும் முன்வரும் வல்லினம் பெரும்பாலும் இயல்பே. சிறுபான்மை இரட்டித்தும் வரும்.

உ-ம். உண்டனை சாத்தா—(உயிர்), உண்டாய் புலவா—(ய்)
உண்டீர் தேவரே—(ர்) வாழ் புலவா— (ழ்)
வா சாத்தா, பாய் கொற்றா, சேர் தேவா, வாழ் புலவா (ஏவல்). நடக்கொற்றா—இரட்டிப்பு

"ஆவி, ய, ர, ழ இறுதி முன்னிலை வினை,
ஏவல் முன் வல்லினம் இயல்போடு விகற்பே." (15)

24 எழுத்துக்களில் மொழிக்கு ஈற்றில் நிற்பவை எவை என எழுத்திலக்கணத்தில் கூறியிருக்கிறோம் இவைகட்கு முன் புணர்ச் சியில் வரும் ஞ, ந, ம, ய, வ—இயல்பாகவே இருக்கும்.

உ-ம். இள—ஞாயிறு, பனை—நீண்டது, பொன்—மெலிது, கல்—யானை, வாள்—வலிமை.

தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்து நிற்கும் (1) ய கரமெய்க்கும், (2) ஓரெழுத்துச் சொற்களாகிய (உயிர் அல்லது உயிர் மெய்யாக வரும்), ஐ, நொ, து என்பனவற்றிற்கும் முன்வரும் ஞ, ந, ம மெல் லெழுத்துக்கள் இரட்டிக்கின்றன. (நொ=வருந்து ; து=உண்.)

உ-ம். (1) மெய் ஞ் ஞான்றது, மெய் ந் நீண்டது, மெய் ம் மாண்டது.

(2) கை ஞ் ஞான்றது, கை ந் நீண்டது, கை ம் மாண்டது
நொ ஞ் ஞெள்ளா, நொ ந் நாகா, நொ ம் மாடா
து ஞ் ஞெள்ளா, து ந் நாகா, து ம் மாடா

(3) நிலைமொழியீற்று ண், ள்; ன், ல் மெய்களின் பின் வரும் ந—ண, ன வாகத்திரியும்.

உ-ம். மண் + நீண்டது = மண்ணீண்டது, முள் + நீண்டது = முண்ணீண்டது, பொன் + நீண்டது = பொன்னீண்டது, கல் + நீண்டது = கன்னீண்டது.

"எண் மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞ, ந, ம, ய, வ க்கள் இயல்பும்,
குறில்வழி ய, தனி ஐ, நொ, து முன்
மெலி மிகலுமாம். ண, ள, ன், ல வழி ந் த்திரியும்." (16)

புணர்ச்சியில் எண்கள் நிற்கும் முறை.

(1) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று. ஒன்று + நாழி = ஒருநாழி. (2) இரண்டு + ஆயிரம் = ஈராயிரம், இரண்டு + இரண்டு = ஈரிரண்டு. இரண்டு + வழி = இருவழி. (3) மூன்று + ஆயிரம் = மூவாயிரம், மூன்று + கலம் = முக்கலம். (4) நான்கு + ஆயிரம் = நாலாயிரம், நான்கு + கவி = நாற்கவி. (5) ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம், ஐந்து + பால் = ஐம்பால். (6) ஆறு + பத்து = அறுபது. (7) எழு + கடல் = எழுகடல், ஏழ்கடல். (8) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம், (9) ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்; ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம். ஒன்பதிற்றாயிரம், ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது. (10) பத்து + ஒன்று = பதினொன்று. பத்து + இரண்டு = பன்னிரண்டு, 'பத்து' தொடர் மொழியில் பான் என வரும். அறுபது என்ப—அறுபான் என்ப.

வடமொழிப்புணர்ச்சி.

தீர்க்கசந்தி.

(1) அ, ஆ, முன் அ, ஆ வர இரண்டும் கெட்டு ஓர் ஆ தோன்றும்.
(2) இ, ஈ, ,, இ, ஈ ,, ஈ ,,
(3) உ, ஊ ,, உ, ஊ ,, ஊ ,,

உ-ம். (1) பரம + ஆநந்தம் = பரமானந்தம். (2) கவி + இந்திரன் = கவீந்திரன். (3) குரு + உபதேசம் = குரூபதேசம்.

குணசந்தி.

(1) அ, ஆ முன் இ, ஈ, வர இரண்டும் கெட்டு ஓர் ஏ தோன்றும்.
(2) „ உ, ஊ „ ஓ „

உ-ம். (1) தேவ+இந்திரன்=தேவேந்திரன். (2) சூரிய+உதயம்=சூர்யோதயம்.

விருத்திசந்தி.

(1) அ, ஆ முன் எ, ஏ, ஐ வர அவ்விரண்டும் கெட்டு ஓர் ஐ தோன்றும்
„ ஒ, ஔ „ ஔ

உ-ம். (1) சர்வ+ஐச்வரியம் ".=சர்வைச்வரியம். பரம+ஏகாந்தி=பரமைகாந்தி. (2) வன+ஔஷதி=வனௌஷதி. திவ்ய+ஔஷதம்=திவ்யௌஷதம்.

யாப்பிலக்கணம்.

மோனை. (மோனை=முதல்) செய்யுள் அடிகளின் முதல்சீர் கொண்டுள்ள ஆரம்ப ஓசையை அடிகளிலுள்ள பிந்திய சீர்கள் ஆரம்பமாகப் பெற்றிருப்பதும், முதலடியின் ஆரம்ப எழுத்தைப் பிந்திய அடிகளும் ஆரம்பமாகக் கொள்வதும், மோனை என்னப்படும்.

உ-ம். மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

இச்செய்யுளின் முதலடியின் ம என்னும் ஆரம்ப எழுத்தில் பிந்திய சீர்கள் நிற்பதையும், 2-ம் அடியின் ந என்னும் எழுத்து பிந்திய சீரில் நிற்பதையும் காண்க. இவ்வாறு ஒரு அடியின் முதற் சீரின் முதல் எழுத்து, பிந்திய சீர்களிலும் முதல் எழுத்தாக வருவது சீர்மோனையாம்.

நீயேயோ தூதுக்கெழுந்தருள்வாய் ஆங்கவற்கு
நீயேயோ சந்தாய் நெறிநிற்பாய்—நீயாகில்
முற்றுவிப்பான் தானேதான் அஞ்சிடுவான் தந்தையோ
விற்ற டக்கை மாலே விளம்பு.

இப்பாவின் முதலடி ஆரம்பித்த நீ என்னும் ஒலியிலேயே 2-ம் அடியும் ஆரம்பித்திருப்பது அடிமோனையாம்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழு முயிர்க்கு.

இப்பாட்டின் முதலடியின் நான்கு சீர்களும் எ, ஏ, எ, இ என ஒற்றுமைபெற்று நிற்பதைக்காண்க. இவ்வாறு ஒரு அடியில் எல்லாச் சீர்களும் மோனையில் அமைவது முற்றுமோனையாம்.

மோனையின் கிளை எழுத்துக்கள்.

(1) அ, ஆ, ஐ, ஔ.
(2) இ, ஈ, எ, ஏ, ய.
(3) உ, ஊ, ஒ, ஓ.
(4) ஞ, ந.
(5) ம, வ.
(6) த, ச.

பின்வரும் அடிகளில் மோனையைக் குறிப்பிடுக :—

(1) அன்னையப்பனென் ஆவித்துணை எல்லாம்.
(2) ஐயனே உனை அன்றி ஒரு தெய்வம்.
(3) இல்லை உண்டென் றெவர் பக்கமாயினும்.
(4) என்று முன்னை இதய வெளிக்குள்ளே.
(5) பொன்னை மாதரைப் பூமியை நாடினேன்.
(6) ஞானபூரண நாதனை நாடியே.
(7) வேண்டும் சீரருள் மெய்யன்பர்க் கேயன்பு.
(8) தன்னதென்றுரை சாற்றுவனவெல்லாம்.

எதுகை. பாவின் அடிகளிலுள்ள முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒத்து வருவது எதுகையாம்.

உ-ம். நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டாம்—நின்று

இதில் நன்றி, என்று என்னும் 1-ம், 2-ம் அடிகளின் ஆரம்பத்தில் ன் என்னும் இரண்டாம் எழுத்து ஒத்துத் தோன்றுகிறது. இவ்வாறு அடிகளிற்றோன்றி வருவது அடி எதுகை என்று சொல்லப்படும்.

பாவின் முதலடியின் முதற்சீரிலுள்ள இரண்டாம் எழுத்து, பிந்திய சீர்களிலும் தோன்றி ஒத்துவருமாயின் சீர்எதுகை என்னப் படும்.

உ-ம். கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இப்பாவின் கற்க, கற்பவை, கற்றபின் என்னும் சீர்களில் ற் தோன்றி நிற்பதைக் காண்க.

குறிப்பு :—உலக வழக்கில் சீர்மோனையும், அடி எதுகையுமே கவனிக்கப்படுகின்றன. இரண்டாம் எழுத்துடன் மூன்றும் நான்காம் எழுத்துக்களும் எதுகையில் ஒத்துவருவதுமுண்டு.

உ-ம். "சொ ற்போர் புரிவர் நான் மறையா......
வி ற்போர் புரிவார் நெடிய சிலை......
பொ ற்போர் புரிவர் பிறர்பொருளும்......
நெ ற்போர் புரிவ ரன்னகில்......

இப்பாவில் ற்போர் என்னும் மூன்றெழுத்துக்களும் எதுகையிற் றொன்றுவதைக் காண்க.

வெண்பா இலக்கணம்.

திருக்குறள், நாலடியார், நளவெண்பா, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களை நீங்கள் கற்றிருப்பீர்கள். இவற்றின் பாக்கள் வெண்பாக்களாகும். வெண்பாவுக்குரிய இலக்கணங்கள் யாவை?

வெண்பா இரண்டு அடிகளிலும், மூன்று அடிகளிலும், நான்கு அடிகளிலும், நான்கு அடிகட்கு அதிகமான அடிகளிலும் வரும்.

2	அடி வெண்பா	குறள் வெண்பா	என்றும்
3	,,	சிந்தியல்	,,
4	,,	நேரிசை	,,

மேற்கொண்டவை பஃறொடை வெண்பா என்றும் சொல்லப் படும். உ-ம் :—

(1) அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. —குறள் வெண்பா.

(2) அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச் சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு. —சிந்தியல் வெண்பா.

(3) நன்றி ஒருவருக்குச் செய்தக்கா லன்னன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். —நேரிசை வெண்பா.

(4) சேற்றுக்கால் நீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றம் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே ஒத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாற்றியர் கண். —பஃறொடை வெண்பா.

வெண்பா—பொது விதிகள்.

(1) வெண்பாவின் ஒவ்வொரு அடியும் 4 சீர் பெற்று ஈற்று அடி மூன்று சீர் பெற்று நிற்கவேண்டும்.

(2) ஈற்று அடியின் மூன்றுவது சீர் (முடிவு) காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டில் அமையவேண்டும்.

(3) அடியின் சீர்களில் மோனையும், அடிகளில் எதுகையும் தோன்றவேண்டும்.

(4) சீர்கள் தளையும்போது முந்தியது மாச்சீராயின் பிந்தியசீர் நிரையசையிலும், முந்தியது காய் அல்லது விளம் சீராயின் பிந்தியது நேர் அசையிலும் ஆரம்பிக்கவேண்டும். (இது வெண்டளை) என்று கூறப்படும்.

(நாள் ஒரு நேரசை. மலர்=ஒரு நிரையசை. காசு=குற்றிய லுகரம் ஈற்றில் நிற்கும் நேர் நேர். பிறப்பு=குற்றியலுகரம் ஈற்றில் நிற்கும் நிரை நேர்.)

குறிப்பு :—கனி, பூ, நிழல் சீர்கள் வெண்பாவில் வரா.

அப்பியாசம்.

(1) "நன்றியொருவருக்கு—இப்பாட்டின் அடிகளில் சீர் எண்ணுங்கள். அதற்கு முந்திய பாக்களிலும் எண்ணுங்கள்.

(2) முதற்பாட்டு 'யுலகு' பிறப்பு வாய்பாட்டிலும், 2-வது பாட்டு 'கொண்டு' காசு வாய்பாட்டிலும், 3-வது பாட்டு 'லால்' நாள் வாய்பாட்டிலும், முடிவதைக்காண்க. மலர் வாய்பாட்டை மற்ற வெண்பாக்கள் முடிவதில் தெரிந்துகொள்க,

(3) ஒவ்வொரு பாவிலும் மோனை, எதுகை கூறுக.

(4) இப்பாக்களின் தளைகளைக் கூறுக.

நாம் குறிப்பிட்டிருக்கும் சிந்தியல் வெண்பாவிலும் நேரிசை வெண்பாவிலும் இரண்டாம் அடியின் ஈற்றச்சீர் முதற்சீர்களுடன் எதுகை பெறுவதைக் காண்க. அவ்வாறின்றி எல்லா அடிகளும் ஒரே விகற்பமாய் எதுகை பெற்றுவருவது இன்னிசை வெண்பா என அழைக்கப்படும்.

உ-ம். துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

கட்டளைக் கலித்துறை இலக்கணம். இப்பாட்டைக் கவனியுங்கள் :—

எரிஎனக் கென்னும் புழுவோ எனக்கென்னும் இந்தமண்ணும்
சரிஎனக் கென்னும் பருந்தோ எனக்கென்னும் தானருந்த
நரிஎனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமின் னாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தே னிதனா லென்ன பேறெனக்கே.

(1) நான்கு அடிகள் பெற்று, ஒவ்வொரு அடியும் ஐந்து சீர் பெற்றிருக்கிறது.

(2) ஒவ்வொரு அடியின் ஈற்றுச்சீரும் விளங்காயில் முடிகிறது.

(3) 4-வது அடியின் ஈற்றுச்சீர் ஏ கொண்டுமுடிகிறது.

(4) அடிகளுள் (சீரில்) எதுகையும், மோனையும் தோன்றுகின்றன.

(5) நேரசையில் ஆரம்பிக்கும் அடிகள் (ஒற்று நீக்கி) 16 எழுத்துக்களும், நிரையசையில் ஆரம்பிக்கும் அடிகள் 17 எழுத்துக்களும் பெறுகின்றன.

(6) ஒவ்வொரு அடியிலும் மா முன் நிரையும், காய், விளம் முன் நேருமாகத் தளை தோன்றுகின்றது. (வெண்டளை)

குறிப்பு :—விளங்காயில் அடிகள் முடிவதாலும், நிரையசையிலும் பா ஆரம்பிப்பதாலும் காய் முன் நிரை தோன்றுமெனத் தளையின் விதியைக் கூறாது, தனித்தனி அடியாகத் தளை கூறியிருப்பதைக் கவனிக்க.

எதுகை மோனையுடன் நெடிலடி நான்கு, வெண்டளை கொண்டு தனித்தனி விளங்காயில் முடிந்து ஈற்றில் ஏ பெறுவதே கட்டளைக் கலித்துறையாம். இது மேற்கண்ட 6 விதிகளும் பொருந்திவர வேண்டும்.

அணி யிலக்கணம்.

---

(1) வேற்றுமை யணி. ஒப்புடைய இருபொருளை ஒரு பொருளாகக்காட்டி, அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படக் கூறுவது.

உ-ம். சான்றோரும் சந்திரனும் ஒப்பாவர் என்றாலும்
தோன்றாதே சான்றோரில் மாசு.

(2) வேற்றுப் பொருள்வைப்பணி. ஒரு பொருள் குறித்து ஆரம்பித்துப் பின்னர் அதை முடிக்கத்தக்க பிறிதொரு பொருளை உலகினர் அறிய அமைப்பது.

உ-ம். (1) பிறந்தார் யாரும் ஒருநாளில்
இறந்தே தீர்வர் : யாம் என்னே !

(2) கருடா சுகமா என்று சிவன்
கட்செவி முன்பு கேட்டதனுல்
உருளா மனத்த ரைச்சேரின்
உய்யா ரோஇவ் வுலகோர்கள்.

(3) ஒழிப்பணி. ஒரு தருமத்தைக் கூறுவதற்காக ஒன்றை மறுத்துக் கூறுவது.

உ-ம். தெரியு மிது திங்க ளன்று செழும்பூண்
அரிவைமுக மேதிங்க ளாம்.

(4) வஞ்சப் புகழ்ச்சியணி. ஒன்றைப் பழிப்பதுபோற் கூறிப் புகழுதல்.

உ-ம். தக்கோர் என்றே தேராது
தம்மில் வந்த யாவருக்கும்
மிக்க பொருளை வீசிவரும்
வள்ளல் கட்கு விவேகமென்னே !

(5) காட்சியணி. (உவமானம் உபமேயமாகக் கூறுது) இரு வாக்கியங்களின் பொருளை ஐக்கியப்படுத்திக் கூறுவது.

உ-ம். செல்வத்துடனே கலைமாதும்
சேர்ந்து கூடி நின்றக்கால்
நல்ல பொன்னின் மலருக்கு
நாற்றம் வந்த தன்மையதாம்.

Read & Co., Printers, High Road, Triplicane.

278